இது சம்ஸ்கிருத அரசியல் நாடகம்

சாணக்கியனின் சாமர்த்தியத்தை
'முத்ராராக்ஷஸம்' என்ற இந்த அற்புத
நாடகத்திலே காணலாம்......

நாட
508

# முத்திரைக் கணையாழி

விசாகதத்தர் எழுதிய
'முத்ராராக்ஷஸம்' என்ற சம்ஸ்கிருத
நாடகத்தின் தமிழாக்கம் இது

05:248
31J8

2 ரூ. 1.

சக்தி காரியாலயம்
ஆயிரம் விளக்கு — சென்னை-6

# முத்திரைக் கணையாழி

[முத்ரா ராக்ஷஸம் என்ற
சமஸ்கிருத அரசியல் நாடகம்]

**விசாகதத்தர்**
எழுதியது

தமிழாக்கியவர்கள் :
சிரோமணி வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி
சிரோமணி தே. ஸ்ரீநிவாசாச்சாரியார்

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1970
MADURAI.

சக்தி

**சக்தி காரியாலயம்**
ஆயிரம் விளக்கு : சென்னை-6

முதல் பதிப்பு 1948 ஜூன்
இரண்டாம் பதிப்பு 1958 மார்ச்
பதிப்பு உரிமை: சக்தி காரியாலயம், சென்னை-6.

மலிவுப் பதிப்பு: ரூ. ஒன்று
உயர்ந்த பதிப்பு: ரூ. இரண்டு
தபால் செலவு தனி

45963

015:248
31J8

சென்னை-6, பாரதம் பிரசில் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

# பதிப்புரை

இந்த நூலைப்பற்றி அறிஞர் பலர் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள், பாராட்டுகிறார்கள்.

இந்த நூலை முத்ரா ராக்ஷஸம் என்ற பெயரில் முதல் பதிப்பாக ஒன்பது வருஷங்களுக்குமுன் வெளியிட்டோம். இப்பொழுது இரண்டாம் பதிப்பாக முத்திரைக் கணையாழி என்ற பெயரில் தமிழ் மரபுக்கு ஏற்றபடி வெளியிட்டிருக்கிறோம்.

நாங்கள் சம்ஸ்கிருத மொழியில் உள்ள அரிய இலக்கியங்களை தமிழறிந்த மக்கள் படித்துப் பயனடைய வேண்டி பல புத்தகங்கள் வெளியிடக் கருதி முதல் முதலாக இந்த நூலை வெளியிடத் துணிந்தோம். இந்த அரசியல் நூல்—இந்த அற்புதமான நாடக நூல் விரைவில் விலை போகாததால் மேலும் சம்ஸ்கிருத நூல்களை வெளியிடத் துணிவு கொள்ளவில்லை.

இப்பொழுது தமிழறிந்த மக்கள் அறிவுத் தாகத்தால் துடிக்கிறதை அறிந்தோம். 'பஞ்சதந்திரம்' என்ற நூலை கடந்த பெப்ருவரி மாதத்தில் வெளியிட்டோம். 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டிபோட்டு 'பஞ்சதந்திரம்' புத்தகத்தை தங்கள் உடைமையாக்கிக் கொண்டார்கள். பிறகு கேட்கவேண்டுமா?

இந்த முத்திரைக் கணையாழி என்ற நூலைத் தமிழாக்கித் தந்த பெருமை சிரோமணி வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி, சிரோமணி தே. ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

முதற்பதிப்பு வெளிவந்த சமயத்தில் அமரர் திரு. வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்கள் பாராட்டுரை வழங்கியிருக்கிறார்கள்.

*சென்னை* — சக்தி காரியாலயம்

*1-3-58*

# பாராட்டுரை

மூத்ரா ராக்ஷஸம் கஷ்டமான, சிக்கல் நிறைந்த சம்ஸ் கிருத நடையில் எழுதப்பட்ட நூல். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது கஷ்டம். ஆனால் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்களான ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாச சாஸ்திரியும், ஸ்ரீனிவாசாச்சாரியாவும் தங்கள் முயற்சியில் வெற்றி அடைந்து விட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். அதற்காக அவர் களைப் பாராட்டவேண்டும். பரீக்ஷைக்காகப் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை இந்தப் புத்தகம் மூலத்தைப் பரி பூரணமாகப் பின்பற்றிச் செல்லும் நேரடியான மொழிபெயர்ப்பு அல்ல என்று தோன்றலாம். ஆனால் இதைவிட நேரடியாக மொழிபெயர்த்தால், தமிழ் நடையில் தெளிவும் லாகவமும் இராது. ஆகவே, இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்கள் சரியான பாணியைக் கையாண்டிருக்கிறார்கள் என்றும், ஆசிரியர்கள் பாராட்டுதலுக்குரியவர்கள் என்றும் நான் கூறுகிறேன்.

*மயிலாப்பூர்,*
*17—9—1944*

**வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி**

# முன்னுரை

முத்திரைக் கணையாழியின் உதவியால் ராக்ஷஸனை வசப் படுத்தும் வரலாறு இந்த நாடகத்தில் அடங்கியிருப்பதால் இந்த நூலுக்கு 'முத்ரா ராக்ஷஸம்' என்னும் பெயர் வழங்கிற்று. முற்காலத்தில் கவிகள் எப்படி நவீனங்களைப்போல கற்பனை களையும் ஜோடனைகளையும் செய்திருக்கிறார்கள் என்பதற்கு முதல் அங்கத்தில் சாணக்கிய சந்தனதாஸ சம்வாதமும் மூன் றாம் அங்கத்தில் சாணக்கியனுக்கும் சந்திரகுப்தனுக்கும் நடை பெறுகிற சம்பாஷணையும் சிறந்த உதாரணங்களாகும்.

மேற்கூறிய இடங்களில் நாடககர்த்தா தம் முழுத் திறமை யையும் வெளிப்படுத்தி யிருக்கிறார்.

மூலத்திற்கும் மொழிபெயர்ப்பிற்கும் சில இடங்களில் வித்தியாசமாகத் தோன்றலாம். தமிழ் மொழி மரபை உத்தே சித்துத்தான் அப்படிச் செய்யப்பெற்றிருப்பதாகக் கொள்ள வேண்டும்.

மூலத்தில் சுலோகங்கள் உள்ள இடத்தில் மொழிபெயர்ப்பு நீண்ட வாக்கியங்களாகவே அமைந்துள்ளன. அத்தகைய இடங்களில் கொஞ்சம் ஊன்றிக் கவனிப்பதன் மூலமே ரஸம் புலப்படும்.

பூர்வ கதைச் சுருக்கத்தைப் படித்த பின்பே வாசகர்கள் இந்த நாடகத்தின் முழு ரஸத்தையும் அனுபவிக்கலாம்.

பேரறிஞர் மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் இந்த மொழிபெயர்ப்பை நன்கு கவனித்து ஆதரவுடன் தமது பாராட்டுதலைச் செய்ததற்கு ஸ்வர்க்கவாசியான அவரை நான் வணங்குகிறேன். வாசகர்கள் இதனைப் படித்து ஆதரிப்பதன் மூலம் இத்துறையில் எனக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

இந்த நூலின் மொழிபெயர்ப்பில் எங்களுடன் ஒத் துழைத்த எனது சிநேகிதர் பி. ஹனுமந்த ராவ் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனம்.

தே. ஸ்ரீநிவாசாச்சாரி

# முன் கதைச் சுருக்கம்

MADURAI UNIVERSITY LIBRARY

நந்தர் வரையிலுந்தான் க்ஷத்திரிய குலம் இருக்கும் என்று புராணங்களிற் கூறப்பட்டுள்ளது; அதற்கேற்ப, கலியுக ஆரம்பத்தில் சர்வார்த்த சித்தி என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு அநேக மந்திரிகள் உண்டு. அவ்வமைச்சர் அனைவரும் பிராமணர்கள். அவர்களுள் 'ராக்ஷஸன்' என்னும் மந்திரி முதன்மையானவன்.

சர்வார்த்த சித்திக்கு, 'சுநந்தா' என்னும் பட்ட மகிஷியும், 'முரா' என்னும் ஆசைநாயகியும் இருந்தனர். முரை நாலாம் வருணத்தினள்.

ஒரு சமயம் முனிவர் ஒருவர் அரசனைக் காண வந்தார்; அரசன் அம் முனிவரின் திருவடிகளை அலம்பினன். அந்தப் பாதோதகத்தை தன் மனைவிகளின் சிரமேல் தெளித்தான். அப்போது, ஒன்பது துளிகள் மூத்தவள் சிரசிலும், ஒரு துளி முரையின் தலையிலும் சிந்தின. அவ்வொரு துளியையும் முரை மிகுந்த பக்தியுடன் ஏற்றுக்கொண்டாள்.

சிறிது காலஞ்சென்றபின் இருவரும் கருவுற்றனர்; உரிய காலத்தில் முரை அழகிய ஓர் ஆண் மகவை ஈன்றாள். பட்டமகிஷிக்கோ, மாமிசப் பிண்டங்களாய் ஒன்பது துண்டுகள் பிறந்தன.

ராக்ஷஸன் என்னும் முதன் மந்திரி இதனை அறிந்தான்; அந்த மாமிசப் பிண்டங்கள் ஒன்பதையும் ஓர் எண்ணெய்க் கொப்பரையில் இட்டுக் கண்ணெனக் காத்து வந்தான். நாளடைவில் அவ்வொன்பது துண்டங்களும் ஒன்பது குழந்தைகள் ஆயின. அவர்களே குலத்துக்கு முற்றுப் புள்ளி வைத்த நவநந்தர்களாம்!

முரைக்குப் பிறந்த ஒரு மகன் நாளடைவில் நூறு மக்களைப் பெற்றான்; அந்நூற்றுவரில் மூத்தவனே நம் கதாநாயகனான 'சந்திரகுப்தன்'. அந்த நூறு பேரிலும் சந்திரகுப்தன் அழகிலும் மதியிலும் சிறந்து விளங்கினான். இதனாலும், இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தமையாலும் பொருமை யுற்றனர் நவநந்தர்கள். இவ்விரு திறத்தாரிடையே மூண்ட பகைத்தீ மலையென வளர்ந்தது.

நவநந்தர்கள், மந்திராலோசனை சபை நிருமிக்கப் போவதாய்க் கூறி, பூமிக்குள் ஓர் அறையைக் கட்டுவித்தனர்; சந்திரகுப்தன் முதலிய நூறு பேரையும் அங்கே அழைத்துப் போய்த் தந்திரமாய் உள்ளே செலுத்திக் கதவை அடைத்தனர். நிற்க;

சில நாள் கழிந்தபின் சிங்களநாட்டு அரசனிடமிருந்து நவநந்தர்களுக்கு ஒரு செய்தி வந்தது. அதனுடன் தேன் மெழுகினாற் செய்யப்பட்டு ஒரு கூட்டிலே அடைக்கப்பட்ட சிங்கம் ஒன்றும் வந்தது. "கூட்டைத் திறக்காமல் சிங்கத்தை வெளியேற்ற வேண்டும்" என்று அச் செய்தியில் கண்டிருந்தது.

நவநந்தர்களின் புத்திக்குச் சிங்கத்தை வெளியேற்றும் வகை புலப்படவில்லை. உடனே அவர்கள் சந்திரகுப்தனை,* அடைத்திருந்த இருட்டறையினின்றும் வரவழைத்தனர்; அவனுக்குச் சிங்கத்தைக் காட்டி, கூட்டைத் திறக்காமல் அதனை வெளியேற்றும்படி கூறினர்.

---

* சந்திரகுப்தன் தவிர, மற்றத் தொண்ணூற்றொன்பது பேரும் இருட்டறையிலே அழிவுற்றனர்.

சந்திரகுப்தன் சிறிது நேரம் சிங்கத்தை உற்று நோக்கினுன்; உள்ளதை அறிந்தான். பழுக்கக் காய்ச்சிய ஓர் இரும்புக் கம்பியால் சிங் கத்தைக் குத்தினுன். உடனே மெழுகெல்லாம் உருகி, சிங்கத்தின் உருவம் கரைந்து வெளியே ஓடியது.

ஏற்கெனவே நாட்டு மக்கள் சந்திரகுப்தனிடம் அளவிலா அன்பு வைத்திருந்தனர். சந்திரகுப்தனுடைய புத்தி நுட்பமும் தூயகுணங்க ளுமே அதற்குக் காரணம். அதனுல் வெளிப்படையாய்ச் சந்திரகுப்தனைக் கொல்ல நவநந்தர்களால் இயலவில்லை. ஆயினும் அவனை வஞ்சகமாய் ஒழிப்பதற்காகச் சூழ்ச்சிகளைச் செய்து வந்தனர். இந்தச் சமயத்தில் சந்திரகுப்தனுக்கு ஓர் உத்தியோகம் கொடுக்க நினைத்து அவனை ஓர் அன்ன சத்திரத்திற்கு அதிகாரியாக நியமித்தனர்.

ஒரு நாளின் நடுப்பகலிலே, வெயிலின் கொடுமை மிகவும் அதிகமாக இருந்தது. அச்சமயம் சந்திரகுப்தன் இருந்த சத்திரத்தின் வழியே ஓர் அந்தணன் போய்க் கொண்டிருந்தான். அவன் பெயர் விஷ்ணுகுப்தன். அவ்வேதியன், அரசாங்க நீதியிலும் சோதிடக் கலையிலும் நன்கு தேர்ந் தவன்; நீதி சாஸ்திரம் இயற்றிய 'சணகர்' என்பவரின் புதல்வன்; அதனுல் அவனுக்குச் 'சாணக்கியன்' என்னும் பெயர் ஏற்பட்டது.

சாணக்கியன் நடந்து வரும்போது, ஒரு புல் கட்டை அவன் காலைத் தடுக்கிற்று. அவ்வளவுதான்! பெருஞ்சினங்கொண்டான் அம் மறை யோன். அக்கட்டைப் புல்லைப் பூமியினின்றும் கல்லி எடுத்துச் சின்ன பின்னமாக்கி எரித்த பின்பே அவன் கோபந் தணிந்தது.

சந்திரகுப்தன் சத்திரத்தில் இருந்தவாறே இவ்வனைத்தையும் கவ னித்தான்; கோபத்துக்குப் புகலிடமாய் விளங்கும் இவ் வந்தணனுல் தன் கருத்து நிறைவேறும் என்று தீர்மானித்து ஓடோடியும் போய் விஷ்ணுகுப்தனை உபசரித்து அழைத்து வந்து உண்ணச் சொன்னுன். அரசர்கள் உட்காரும் முதலாசனத்திலே அவனை அமரச் செய்தான்.

திடீரென நந்தர்கள் அங்கே வந்தனர். அறிஞருக்கும் அரசருக்கும் உரியதான ஆசனத்தில் ஒரு பரதேசிப் பிராமணச் சிறுவன் உட்கார்ந் திருத்தலைக் கண்டு மிகவும் சினந்தனர். கூச்சலிட்டு விஷ்ணுகுப்தன் மேல் பாய்ந்தனர்.

அமைச்சர் எவ்வளவோ தடுத்தனர். குடிகள் கண்ணீர் உகுத்தனர். இவற்ருலெல்லாம் நந்தர்களின் இறுமாப்பும் கோபமும் தணியவில்லை. அவர்கள் வீரம் நிறைந்த விஷ்ணுகுப்தனை, சர்வமும் அறிந்த சாணக் கியனை, கலைக் கடலான கௌடில்யனை, தலை மயிரைப் பிடித்து இழுத் துக் கீழே தள்ளினர்.

ஒரு புறம் சந்திரகுப்தனுடைய பெரு வணக்கமும், மற்ருெரு புறம் நந்தர்களுடைய தீமையும் சாணக்கியன் முன்னே தோன்றி அவனைத் தூண்டின. அவன் வீராவேசத்துடன் வெகுண்டு நின்ருன். அவிழ்ந்த தன் சிகையை உருவிய வண்ணம், "இந்த நந்த வம்சத்தை நிர்மூல மாக்கும் வரையில் அவிழ்ந்திருக்கும் என் தலை மயிரை முடியமாட்டேன்" என்று பிரதிக்ஞை செய்து முழங்கினுன். உடனே சந்திரகுப்தன் சாணக் கியனை நிழல் போலத் தொடர்ந்து சென்ருன்.

அப்புறம், சாணக்கியன் 'பர்வதேசுவரன்' என்னும் மிலேச்ச அர

சனை அணுகினன்; படைகொடுத்து உதவி புரிந்தால் பாதி ராஜ்யம் கொடுப்பதாக அவனுக்கு ஆசை காட்டினன். அவ்வரசனுடைய பெருஞ் சேனையோடு விரைந்து வந்து குசுமபுரத்தை முற்றுகையிட்டான்.

பெரும் போர் நிகழ்ந்தது. மிலேச்ச சைநியத்தை முறியடிக்க அமைச்ச ராக்ஷஸனுல் முடியவில்லை. நவநந்தரும் அமரில் மடிந்தனர். அதனுல் ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கபடமாய் வதைக்க எண்ணி அவனேடு வஞ்சக நட்புப் பூண்டான்.

நந்தர்கள் அழிந்தமை கண்ட ராக்ஷஸன் அவர்கள் தந்தையான சர்வார்த்த சித்தியையாவது எவ்வாறேனும் காக்கக் கருதி அவனைச் சுரங்க மார்க்கமாக வெளியேற்றி விட்டுத் தான் மட்டும் நகரத்திலேயே வசித்துவந்தான். அச் சமயத்தில் அவன் இயற்றிய எண்ணுதற்கரிதான காரியங்களையும், நகரத்தை விட்டு அவன் வெளியேறிய பின்பு நிகழ்ந்த விருத்தாந்தங்களையும் இந் நாடகம் உணர்த்தும்.

# பாத்திரங்களின் வரலாறு

சாணக்கியன்: அரசாங்க நீதி நிபுணன்; கலைக் கடலைக் கரைகண்டவன்; அந்தணன்; ஆசையற்றவன்; ஆனால், பிடிவாதமும் கோபமும் மிக்கவன்; அவமதிப்பைச் சகியாதவன்; மதியால் விதியையும் வெல்லலாம் என்னும் எண்ணத்தினன்; எடுத்த கருமத்தை முடிக்கும் பேராற்றல் உடையவன்; நந்த குலத்தை நசுக்கி மௌரிய வம்சத்தை நிலை நாட்டியவன்.

ராக்ஷஸன்: நந்தர்களின் அமைச்சன்; பிராமணன்; எஜமான விசுவாசத்தில் இணையற்றவன்; முயற்சி குன்றாதவன்; விதி மதியையும் வெல்லும் என்ற எண்ணத்தினன்; எண்ணுதற்கும் அரிதான சூழ்ச்சிகளால் எதிரிகளை மடக்கியும், முடிவில் விதியால் வீழ்ச்சியுற்றவன்.

சந்திரகுப்தன்: மௌரிய குலத்து முதல் அரசன்; சாணக்கியனால் நந்த ராஜ்யத்தையும், அமைச்சன் ராக்ஷஸனையும் அடையப் பெற்றவன்.

மலயகேது: மலைநாட்டரசனான பர்வதகன் என்பவனின் புதல்வன்; முதலில் சாணக்கியனிடம் இருந்து பின்பு ராக்ஷஸனோடு சேர்ந்து கொண்டவன்; ஆலோசனையற்ற மூடன்.

சந்தனதாஸன்: வைசிய குலத்தவன்; வியாபாரி; ராக்ஷஸனுடைய உயிர்த்தோழன்; நண்பனைக் காக்கத் தன் உயிரையும் அளிக்க முன் வந்த உத்தம தீரன்.

நிபுணகன்: யம படத்தைக் கையிலேந்தி உளவறிந்துவரும் சாணக்கியனுடைய ஒற்றன்.

ஜீவசித்தி, பாகுராயணன், சித்தார்த்தகன், சமித்தார்த்தகன் முதலியோர்: சாணக்கியனுடைய ஒற்றர்கள்; வஞ்சக நட்பினால் ராக்ஷஸனை உறவாடிக் கெடுத்தவர்கள்.

விராதகுப்தன்: பாம்புப் பிடார வேடத்தில் சென்று எதிரிகளிடம் உளவு அறிந்து வரும் ராக்ஷஸனுடைய ஒற்றன்.

வைதாளிகன், தனகலசன்: ராக்ஷஸனைச் சார்ந்தவர்கள்; சந்திரகுப்தனிடமிருந்து சாணக்கியனைப் பிரித்துவைக்க எண்ணி, அரசன் அவையில் ஸ்துதிபாடும் ஒற்றர்கள்.

மற்றும், சந்தனதாசனுடைய மனைவி மக்கள், வேலையாட்கள் முதலியோர்.

நிகழிடம்: பாடலீபுரத்திலும், அதைச் சார்ந்த பல இடங்களிலும்.

# மங்கலம்

## [பார்வதியும் பரமசிவனும்]

பார்வதி: "தங்கள் சிரமேல் தங்கும் இப்பாக்கியவதி யாரோ?"

சிவன்: "சந்திர கலை."

"இது அவளுடைய பெயரா?"

"ஆம்; இதற்குச் 'சந்திர கலை' என்று இல்லாமல் வேறு என்ன பெயர் இருக்க முடியும்? இவ்வளவு பழகியிருந்தும் இதனை ஏன் மறந்து விட்டாய்?"

"நான் கேட்பது சந்திரனையல்ல; அந்தப் பெண்மணியை!"

"ஓ! பெண்மணியைக் கேட்கிறாயா? கேள்; சந்திரன் உண்மை யல்லவாயின் அவளே பதில் சொல்லட்டும்!"

இவ்வாறு கங்கையை மறைப்பதற்காகத் தேவியிடம் குறும்புத்தன மாக விடையளிக்கும் சிவனுடைய சாட்சியம் நம்மை எந்நாளும் காப்ப தாகுக!

திரிபுரம் எரித்த தேவன் சந்தியா காலத்திலே உல்லாசமாய் நட னஞ் செய்ய இச்சை கொண்டார். ஆனால் அவர், தமது விருப்பம் போல் கால்களைத் 'திம் திம்' மென்று மாற்றி வைப்பதனால் ஒருகால் பூமியே வளைந்து விடுமோ என்று கவலையுற்றார். மேலும், சத்திய லோகத்திற்கும் மேலாக நீண்டு சென்ற கைகளால் எல்லா மேல் உலகங் களுமே அழிந்துவிடுமோ என்றும் ஐயுற்றார். மற்றும், செந்தணற் பிழம்புகளை வாரி இறைக்கும் தம்முடைய நெற்றிக்கண்ணால் எதிரி லுள்ள அனைத்துமே பொசுங்கிப் போகுமோ எனவும் அச்சமுற்றார். அதனால், கைகால்களைக் கட்டுப்படுத்தி, நெற்றிக் கண்ணை அழுந்த மூடிக்கொண்டு தம் மனம் போன போக்கிலின்றி, இடத்திற்கு ஏற்பத் தாண்டவம் ஆடிய தயாளன் நம்மைக் காத்தருள்க!

(சூத்திரதாரன் பிரவேசிக்கிறான்)

சூத்திரதாரன்: மிகுதியாகப் பேசப் போவதில்லை. "சாமந்த வடே சுவர தத்தரின் பேரனும், மகாராஜ பாஸ்கர தத்தரின் புதல்வனும், மஹா கவியுமான விசாக தத்தன் இயற்றிய 'முத்ரா ராக்ஷஸம்' என் னும் புதிய நாடகத்தை நடிக்க வேண்டும்" என்று எனக்குச் சபையார் கட்டளையிட்டுள்ளனர். இச் சபையிலுள்ளோர் பல இனிய காவியங் களைக் கற்று உணர்ந்தவர்கள். ஆதலின், இவர்கள் முன் நடிப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சியே தரும்.

எவ்வாறெனில், வயதிலே சிறியவனே ஆயினும், அவன் சாரமுள்ள நிலத்தில் தானியத்தை விதைப்பானாயின், பயிர்கள் நன்கு வளர்ந்து சிறந்த பயனளிக்கும்.

ஆதலால், இச்சமயம் நான் என் மனைக்குச் சென்று, என் மனை வியை அழைத்துக் குடும்ப சமேதனாய்க் கானஞ் செய்யத் தொடங்கு கிறேன். (உள்ளே சென்று, நோக்கி)

ஆகா! என்ன இது? நமது வீட்டில் பண்டிகைபோலத் தோன்று கிறதே! பணியாளர் யாவரும் தத்தம் வேலைகளில் வெகு மும்முரமாகக் கவனஞ் செலுத்தியிருக்கிறார்கள். இதோ, ஒருத்தி ஜலம் கொண்டு

வருகிருள்; இன்னெருத்தி சந்தனம் அரைக்கிருள்; மற்ெருத்தி பற் பல வகையான மலர் மாலைகளைத் தொடுக்கிருள். வேெருத்தி அங்கே 'பிட்டு' இடிக்கிருள். 'ஹூம், ஹூம்' என்னும் அவளது குரலொலி 'திம், திம்' என்று விழும் உலக்கையின் ஓசைக்குச் சுருதி கூட்டுகிறது. சரி, என் மனைவியை அழைத்து இவற்றின் செய்தி யாதெனக் கேட்டு அறிகிறேன். (உள்ளே நோக்கி)

நற்குணம் நிறைந்தவளே! உபாயங்களுக்கு உறைவிடமே! முப் பயனுக்கும் மூல காரணமே! என் இல்லத்தின் நீதிக் கலையே! நற்கரு மங்களைப் போதிக்கும் ஆசிரியையே! பெண்பாவாய்! விரைந்து இங்கே வா!

(நடி பிரவேசிக்கிருள்)

நடி: ஆர்ய புத்திர! இதோ வந்தேன்! கட்டளைக்குக் காத்திருக் கிறேன்.

சூத்திரதாரன்: ஆர்யே! கட்டளை ஒருபுற மிருக்கட்டும். இன்று நம் குலத்தவர் உய்யும் வண்ணம் உத்தமமான பிராமணர்களை விருந் துக்கு அழைத்திருப்பது போல் தோன்றுகிறதே!

நடி: ஆம்; அந்தணர்களை அழைத்திருக்கிறேன்.

சூத்திர: எதன் நிமித்தம்?

நடி: சந்திர கிரகணம் அல்லவா?

சூத்திர: என்ன? யார் இங்ஙனம் உரைத்தவர்?

நடி: ஊரிலேதான் சொல்லிக் கொள்ளுகிருர்களே!

சூத்திர: மாதே! வேதியர்க்கு விருந்து நடக்கட்டும். நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனல், சந்திரகிரகணம் என்பது உன்னை ஏமாற்றுவதற்காக யாரோ கட்டிவிட்ட கதை. நான் அறுபத்து நான்கு அங்கங்களைக் கொண்ட சோதிட சாத்திரத்தை நன்கறிந்தவன். இதோ-கொடிய கிரகமான அந்தக் கேது, பூர்ண வடிவத்துடன் விளங் கும் சந்திரனைப் பலாத்காரமாக அழிக்க விரும்புகிறது.

(வாக்கியம் முடியுமுன்னே திரைக்குள் சாணக்கியன்)

ஆ! யார் அவன்—யான் இருக்கையில் சந்திர குப்தனை எதிர்க்க எண்ணுகிறவன்?

சூத்திர: ஆயினும், புதனுடைய சேர்க்கை அவனைக் காக்கிறது.

நடி: ஆர்ய! யார் இவன்? தான் பூமியிலிருந்தவாறே சந்திரனைக் கிரக பீடையினின்றும் காப்பாற்ற விரும்புகிறுன்?

சூத்திர: நான் கவனிக்க வில்லையே! மற்றும் ஒருமுறை சொல்லிப் பார்ப்போம். பதில் வரும்போது குரலால் இன்னுரெனக் கண்டு கொள்ளுவோம்.

(முன் கூறிய வண்ணமே உரைக்கிருன்)

"கொடிய கிரகமான அந்தக் கேது பூரண வடிவத்துடன் விளங்கும் சந்திரனை வலுவிலே விழுங்க எண்ணுகிருன்."

(திரைக்குள்ளிருந்து சாணக்கியன்)

யார் இவன்—யான் இருக்கையில் சந்திரகுப்தனை வலுவிலே அவமதிக்க நினைக்கிறவன்?

சூத்திர: (செவி சாய்த்து) ஆ! அறிந்தேன்! பெண்ணே கௌ..டி ல்..யன்! (நடுங்குகிறான்).

(நடியும் அஞ்சி நடுங்குகிறாள்)

சூத்திர: வெஞ்சினத் தீயால் நந்த வம்சத்தை எரித்து நீறுக்கிய தீய மதியினனான கௌடில்யன், சந்திர கிரகண மென்னும் வாக்கியத்தைக் கேட்டதும், சந்திரகுப்தனுக்குப் பகைவனால் தீங்கு நேரிட்டதாக நினைத்து விட்டான். வா, ஓடி விடுவோம்! (போகிறார்கள்)

## முதல் அங்கம்

(அவிழ்த்து விடப்பட்ட சிகையை உருவிக்கொண்டே சாணக்கியன் பிரவேசிக்கிறான்)

சாணக்கியன்: யார் அவன்—யான் இருக்கையில் சந்திரகுப்தனை அவமதிக்க முயலுகிறவன்?

மத யானையின் உதிரத்தைப் பருகிப் பருகி, மாலை மதியின் கலையைப் போல் சிவந்து விளங்கும் சிங்கத்தின் கோரப் பல்லை, அது கொட்டாவி விடும் சமயம் பார்த்து, அதன் வாயிலே கையை விட்டுப் பறிக்க நினைக்கிறவன் யாவன்?

சினத் தீயின் கரிய பெரிய புகைக் கொடியான எனது சிகை, நந்தர்களின் மரபுக்குக் கருநாகம் போன்றது; நான் இப்பொழுதேனும் அதை முடியவிருப்பதை எவன் சகிக்கவில்லை?

'நந்தர்' என்னும் காட்டுக்குத் 'தூமகேது' போன்று, என் சினத் தீயின் கொழுந்து சுடர்விட்டு எரிகின்றது; அறிவற்ற எந்த மூடன் அதனைக் கடந்து, என் வெகுளி விளக்கில் விட்டில்போல் விழுந்து விநாசத்தைத் தேடிக்கொள்ள விரும்புகிறான்? சார்ங்கரவ! சார்ங்கரவ!

சார்ங்கரவன்: ஆசார்ய! காத்திருக்கிறேன்!

சாணக்: குழந்தாய்! உட்கார வேண்டும்!

சார்ங்: ஐய! வெளி முற்றத்தில் பிரம்பாசனம் தயாராக உள்ளது. தேவரீர் வீற்றிருக்கலாம்.

சாணக்: குழந்தாய்! காரிய வசத்தால் சிறிது கலக்கம் உற்றிருக்கிறேனே யல்லாது, மாணவர்களிடம் கோபத்தைக் காட்டுவது உபாத்தியாயர்களுக்கு இயற்கையல்ல. (அமர்ந்து தனக்குள்) இந்தச் செய்தி ஜனங்களிடையே எவ்வாறு பரவியது?

"நந்தகுல நாசத்தால் சினமூண்ட ராக்ஷஸன், தந்தை கொல்லப்பட்டதால் கோபமுற்றிருக்கும் பர்வதகன் புதல்வனான மலயகேதுவுக்கு நந்த ராஜ்யம் முழுவதையும் உரிமையாக்குவதாய்க்கூறி, ஊக்கமூட்டி, அவனிடமுள்ள பிரம்மாண்டமான மிலேச்சப் படையின் உதவியால் சந்திரகுப்தனை எதிர்க்க முயன்று வருகிறான்." (ஆலோசித்து) ஏன் இந்த ஆலோசனை? "நந்த குலத்தைத் துடைப்பேன்" என்று எல்லா

உலகங்களும் அறியும்படிப் பிரதிக்ஞை செய்து, தாண்டுதற்கு இயலாத அந்தச் சபத வெள்ளத்தையே கடந்துவிட்ட நான், இப்பொழுதுதான் வெளிக் கிளம்பும் இந்தச் செய்தியை அடக்க முடியாதவனா? பார்!

பகைவரின் மனைவியராகிய திசைகளின் முக சந்திரர்களைச் சோகப் புகைப் படலங்களால் நிரந்தரமாகக் கறுக்கச் செய்து, மந்திரி மரங்களுக்கு நீதிக் காற்றுக் கொணரும் மோகச் சாம்பரை நிறையத் தூவி, பரபரப்புற்றுப் பயந்தோடிய பொது மக்களாம் பறவைகளைத் தவிர, எஞ்சி நின்ற நந்த மூலைகளை எரித்து நீருக்கிய எனது சினத் தீ இப்போது—களைப்புற்றல்ல, எரிக்கப்பட வேண்டியது எதுவும் இல்லாமையால்—தானாகவே தணிந்து விடும் காட்டுத் தீப்போலத் தானே சமனம் அடைகிறது.

மற்றும், என்னை முதல் ஆசனத்திலிருந்து இழுத்து எறிந்தபோது, கண்ணீருடன் கவிழ்ந்து நோக்கி, 'அந்தோ' வென்று தம்மையும் மீறி வெளியே வந்த அழுகுரலை அரச பயத்தால் வாய்க்குள்ளாகவே அடக்கிக்கொண்ட குடி மக்களெல்லாம், இப்பொழுது, அதே போல—மலைச் சிகரத்தினின்று சிங்கத்தால் இழுத்து எறியப்பட்ட மத வேழத்தைப் போன்று—சிங்காதனத்திலிருந்து என்னால் இழுத்தெறியப்பட்ட நந்தரைக் காண்கிறார்கள்.

எனது பிரதிக்ஞை இவ்வண்ணம் இனிது நிறைவேறியதாயினும், இந்தச் சந்திரகுப்தனுக்காக இன்னும் படையேந்தி நிற்கிறேன்.

பூமியின் வியாதிகளைப் போன்ற நந்தர்கள் ஒன்பதுபேரும் என்னால் வேரோடு களைந்து எறியப்பட்டனர். பொய்கையிலே நிலைகொண்ட தாமரையைப் போன்று, திருமகள் மௌரியனிடத்திலே ஸ்திரமாக்கப் பட்டாள்.

ஊக்கத்தால் உறுதி பூண்ட எனது உள்ளம் விருப்பை அன்பனிடமும், வெறுப்பைப் பகைவனிடமும் செலுத்தியது.

ஆயினும், ராக்ஷஸன் வசப்படாதவரையில் நந்த மூலத்தின் எந்தப் பாகந்தான் அறுக்கப்பட்டதாகும்? சந்திர குப்தனிடம் சாம்ராஜ்ய தேவதை சாசுவதமாயினள் என்று கூறுவதுதான் எங்ஙனம்?

(சற்று யோசித்து)

ஆஹா! ராக்ஷஸனுக்கு நந்த வமிசத்தினிடம் உள்ள பக்தியும் அன்புந்தான் என்னே! அந்த மரபிலே ஓர் உறுப்பு உயிர்த்திருந்தாலும் அவனைச் சந்திரகுப்தனுக்கு அமைச்சனாக்குவது இயலாத காரியம். நந்த குலத்துக்கு எவ்வாறாயினும் உயிர் அளிக்க வேண்டு மென்னும் பெருமுயற்சியை அவன் கைவிட்டாலன்றி நம் காரியம் நிறைவேறாது. இதனைக் கருதியே, நந்த குலத்தினனான—அந்த அப்பாவி—சர்வார்த்த சித்தி நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடியும் நாம் விடாது அவனையும் கொன்று தீர்த்தோம்.

(அண்ணாந்து நோக்கி, ராக்ஷஸன் இருப்பதாகப் பாவித்து)

நன்று; அமைச்ச ராக்ஷஸ! மந்திரி பிரஹஸ்பதி! செல்வம் படைத்த சீமானை இந்த உலகம் பொருளைக் கருதிச் சார்கிறது. அவன் இடர் உற்றபோதும் தொடர்ந்து செல்வதும், மீண்டும் அவன் நன்னிலையடையக்கூடும் என்னும் நினைவினால்தான். ஆனாலோ, அரசனுடைய மரபே

அழிந்துபோன பின்பும், முன்னர் பெற்ற நன்மைகளை மறவாது அழிந்தவரின் பொறுப்பைத் தானே ஏற்று நடத்தும் உன்னைப் போன்ற எஜமான விசுவாசம் மிகுந்த உத்தமர்கள் மிகச் சிலரே. அவர்கள் கிடைத்தற்கு அரியர்.

அதனுல்தான் உன்னை எவ்வாறேனும் வசப்படுத்தி, சந்திரகுப்தனிடம் மந்திரியாக்கி வைத்து நின் பேரருளைப் பெற வேண்டு மென்று பெரு முயற்சி செய்கிறேன் . . ஏன்?

மதியற்ற பயங்கொள்ளியின் உள்ளம் அன்பு நிறைந்ததாயினும் பயனற்றதே; நுண் மதியும் தோள்வலியும் உடையோனுயினும் அன்பற்றவனுயின் அவனும் வீணனே. மதி, வன்மை, அன்பு இம் மூன்றும் உடையவனே மன்னனுடைய நற்றசை, துர்த்தசை இரண்டிலும் மங்களங்களுக்குக் காரணமானவன். மற்றையோர், மற்றவர் காப்பாற்றப் படவேண்டிய மனைவிக்கே ஒப்பானவர்கள்.

ஆகையால் எப்படியாவது ராக்ஷஸனை வசப்படுத்திக்கொள்ள, உறங்கா மனத்தனுக இடைவிடாது முயன்றுவருகிறேன்.

மேலும், மற்ருேர் அருஞ்செயலும் செய்து முடித்தோம். அதாவது:—"பகைமை யூறிய ராக்ஷஸன் உள்ளம், சந்திரகுப்தன், பர்வதகன், இவ் விருவரில் எவனைக் கொன்ருலும் பழிவாங்கியது ஆகுமென்று எண்ணிற்று. உடனே அவன் விஷ கன்னிகையை ஏவினுன்; நமக்கு உதவி புரிந்த நண்பனுன பருவதேசுவரனை அக் கன்னிகையால் கொல்வித்தான்" என்னும் பழிச் சுமையை உலகம் எங்கும் பரவச் செய்தோம். இந்தச் செய்தியை நிலைநாட்டுவதற்காகவே பாகுராயணனை மலயகேதுவின்பால் அனுப்பினேம். "உன் தந்தை மடிந்தது சாணக்கியனுல்" என்று கூறி அச்சுறுத்தி மலயகேதுவைக் கானிலே ஓடச்செய்தோம். ஒருகால் இந்த மலயகேது ராக்ஷஸனது மதியின் துணையால் மீண்டும் தலையெடுப்பானுயின், நூதன சூழ்ச்சியால் உடனே அவனை நொறுக்கவும் நமக்குத் தெரியும். இங்ஙனமின்றி, மலயகேதுவை இப்பொழுதே கொன்றுவிடுவது, "ராக்ஷஸன் பர்வதகனைக்கொன்ருன்" என்னும் பழிச் சொல்லையும் கொன்றதாகிவிடும். ஆகையால்தான், அவனை இப் பொழுதே கொன்றுவிட நாம் விரும்பவில்லை.

அன்றியும், நமது மனங் கலந்த ஒற்றர்கள் நாடெங்கும் பரவியுள்ளனர். அவர்கள் பல்வேறு உருக்கொண்டு பற்பல நடையுடைகளுடன் பல்வேறு மொழிகளைப் பேசிக்கொண்டு நகரின் எல்லாப் பகுதிகளிலும் புகுந்து, நம்மை, வெறுப்பவர்களையும், பகைவர்க்கு இனியரையும் கண்டுபிடித்து வருகிருர்கள். முக்கியமாக, குசுமபுரத்தில் வசிக்கும் அமைச்ச ராக்ஷஸனுடைய உயிர்த் தோழர்களின் நடவடிக்கைகளிலே இவர்கள் மிகவும் கவனம் செலுத்துகிருர்கள்.

தவிர, சந்திரகுப்தனைச் சற்றும் விட்டுப் பிரியாத 'பத்ர படன்' முதலிய தலைவர்கட்கு, உரிய நன்கொடை அவ்வப்போது அளிக்கப்படுகிறது. மேலும் பகைவனது சூழ்ச்சியால் கொடிய விஷ பானத்தைத் தரவல்ல வஞ்சகர்க்கு மாறு இயற்றுவதற்காக உள்ளன்பும் ஊக்கமும் மிகுந்த நண்பர்கள் எப்போதும் அரசனைச் சூழ்ந்து இருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிருேம்.

நம் பாலிய சிநேகன் ஒருவன் இருக்கிருன்; அவன் அந்தணன்; பெயர் இந்து சர்மா. அவன் சுக்கிர நீதியிலும் சோதிடத்திலும் நிபுணன். நாம் நந்த குலத்தை அழிப்பதாகச் சபதஞ் செய்தவுடனே இந்து சர்மாவைப் பௌத்தபிக்ஷுவின் கோலத்தோடு குசுமபுரத்துக்கு வரவழைத்தோம். ஆங்கு நந்த மந்திரிகளிடம் நட்புப் பூண்டவன்போல் நடிக்கும்படிக் கட்டளையிட்டோம். அவன் முக்கியமாக ராக்ஷஸனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிட்டான். ஆதலால் இனி, அவனைக் கொண்டு ஒரு பெருங் காரியம் முடிக்கவேண்டியுள்ளது. ஆகவே, நமது திட்டத்தினின்றும் எதுவுமே நழுவப்போவதில்லை. ஆனால் சந்திரகுப்தனே, முழுப் பொறுப்பையும் நம்மீதே சுமத்திவிட்டு, தான் நிம்மதியாகத் தூங்குகிருன். ஆம்; அதற்குக் காரணமும் இருக்கிறது.

துயரங்களோடு போராடிக் கஷ்டப்பட்டுத் தேடியதல்லாமல் தானுகவே வந்தடையும் ராஜ்யத்தால்தான் உண்மையான இன்பங் கிடைக்கும். நரேந்திரர்களும் கஜேந்திரர்களும் இயற்கையிலேயே பலசாலிகளாக இருந்தும், தாமாக ஒன்றைத் தேடி யடையின், அதனுல் துயரந்தான் அடைகிருர்கள். ஆகையால், வலுவிலே வாய்க்கும் பதவியால்தான் நற்சுகம் கிட்டும்.

(ஓர் ஒற்றன், தன் கரத்திலே யம படமொன்றைப் பிரித்து வைத்துக்கொண்டு பிரவேசிக்கிருன்)

ஒற்றன்: காலதேவன் தாளிணையைச் சேவியுங்கள். வேறு தெய்வங்களை வணங்குவதால் என்ன பயன்? பிற கடவுளரிடம் பக்தி செய்வோரின் ஆவியையும் இவனேயல்லவா துடிக்கத் துடிக்கப் பறித்து ஏகுகிருன்?

கோபமுள்ள இடத்தில் குணமுண்டு; இவனைப் பக்தி செய்தே மனிதன் பிழைக்கமுடியும். இந்த மறலி உலகையெல்லாம் அழிப்பவனுயினும், இப்பொழுது நம்மைப் பாதுகாக்கவே வந்திருக்கிருன். ஆதலின்,

(தனக்குள்) இவ் வில்லத்திலே நுழைந்து படத்தைக் காட்டிப் பாடுகிறேன். (நுழைகிருன்)

சீடன்: ஐயா! நுழையாதீர்! யார் நீர்?

ஒற்றன்: நான் அந்தணர் தலைவன். இந்த வீட்டுக்காரர் யாரோ?

சீடன்: எம் ஆசிரியர்; ஆர்ய சாணக்கியன்.

ஒற்றன்: நன்று; ஆயின் இது என்னுடைய தர்மப்பிராதாவின் கிருஹம் ஆகிறது. சரி. என்னை உள்ளே விடு. உன் ஆசானுக்குக் கொஞ்சம் அறநெறியை உணர்த்தி வருகிறேன்.

சீடன்: பேதாய்! எம் ஆசானுக்கு நீ போதிப்பதா? அவரைவிட அறிவாளியா நீ?

ஒற்றன்: அந்தணு! ஆறுவது சினம்; விரையாதே, முற்றும் அறிந்தவர் எவரும் இல்லை. உன் ஆசிரியருக்குச் சில தெரிந்திருக்கலாம். எம் போலியர்க்கு வேறு சிலவற்றிற் பழக்கம் இருக்கலாம்.

சீடன்: ஓகோ! எங்கள் ஞானசிரியரின் அனைத்துமுணர்ந்த அருந்தன்மையை அபகரிக்க விரும்புகிருய் போலும்!

ஒற்றன்: வேதிய! உம் ஆசான் முற்றும் உணர்ந்தவர் என்கிறீர். ஆனால் அவருக்கு இப்போதே தெரியவேண்டியது ஒன்று உண்டு. அது 'சந்திரன் யாருக்கு வேண்டாதவன்?' என்பது.

சீடன்: ஐய! அறிவிலி! இது அவருக்குத் தெரிந்தால் என்ன, தெரியாவிடில் என்ன?

ஒற்றன்: மறையோய்! உம்முடைய பொட்டை மனத்துக்கு இதன் பொருள் புரியாது. உம் ஆசிரியர் இதனை நன்கு அறிவர். உம்மைக் கேட்டால், "சந்திரன் தாமரைக்கு வேண்டாதவன்" என்பீர். கமலங்கள் அழகாகத்தான் இருக்கின்றன; ஆயினும், உருவத்தைப் போல் குணம் இல்லையே! அவை சம்பூர்ண மண்டலாதிபதியான சந்திரனிடத்தில் பகைமை பாராட்டுகின்றன, அல்லவா?

சாணக்கியன்: (இதைக் கேட்டுத் தனக்குள்) சரிதான்; 'சந்திரகுப்தனை வெறுக்கும் பேர்களை அறிந்திருக்கிறேன்' என்கிறான் இவன்.

சீடன்: சீ! மூர்க்கா! தொடர்பு இல்லாமல் உளறுகிறாயே!

ஒற்றன்: இல்லை, நான் கூறியது மிகப் பொருத்தமாகவே இருக்கும்.

சீடன்: எப்படி?

ஒற்றன்: என் சொல்லைக் கேட்டுப் பொருளை உணர்வோர் கிடைப்பாராயின்!

சாணக்கியன்: (உள்ளிருந்தவாறே) வா, அப்பா, உள்ளே. பொருளை உணர்வோரை இங்கே காண்பாய்!

ஒற்றன்: இதோ வந்தேன். (உட்சென்று) மங்களம் பொங்குக!

சாணக்: (உற்று நோக்கித் தனக்குள்) இவனை எதற்காக அனுப்பினோம்? (ஆலோசித்து) ஆம்; நினைவிற்கு வருகிறது. மக்களின் உட்கருத்தை அறிந்து வருவதற்காக அனுப்பப்பட்ட நிபுணகன் இவன்! (வெளிப்படையாய்) நல்லது, உட்கார்.

ஒற்றன்: கட்டளை! (தரையில் உட்காருகிறான்)

சாணக்: அப்பா! உன் செய்தி யாது? சந்திரகுப்தனை எல்லோரும் நேசிக்கிறார்களா?

ஒற்றன்: ஆம், ஐயா! வெறுப்பதற்கு முகாந்தரமான முளைகள் தொடக்கத்திலேயே ஆரியரால் கிள்ளப்படுவதால், சந்திரகுப்த தேவரிடம் விருப்பற்றவர் எவருமே இல்லை. ஆயினும், இந்த நகரத்தில் மூன்று பேர் அமைச்ச ராக்ஷஸனிடம் அபிமானமும் நன்மதிப்பும் வைத்து சந்திரஸ்ரீயின் சாம்ராஜ்யத்தைக் கண்டு பொறுமை கொண்டுள்ளனர்.

சாணக்: (கோபத்துடன்) பொறுமையா? அது சாம்ராஜ்யத்தைக் கண்டல்ல; அவர்கள் வாழ்க்கையைக் கண்டு என்று நினை. சரி; பெயர் தெரியுமா?

ஒற்றன்: பெயர் தெரியாத மனிதர் தங்கள் செவிமட்டும் எட்டுவார்களா?

சாணக்: ஆயினும் நான் அறியவேண்டும்.

ஒற்றன்: ஆரியரின் செவி ஏற்க! பகைவரை உள்ளூர நேசிக்கும் * க்ஷபணகன் ஒருவன்!

சாணக்: (தனக்குள் மகிழ்வுடன்) நம் பகைவரை நேசிக்கும் க்ஷபணகன்! (வெளிப்படையாய்) அவனுடைய பெயர்?

ஒற்றன்: 'ஜீவ சித்தி'

சாணக்: இவன் எதிரிகளைச் சார்ந்தவன் என்பதை எங்ஙனம் அறிந்தாய்?

ஒற்றன்: ராக்ஷஸனுடைய மாரணப் பிரயோகத்தால் உதித்த நச்சுக் கன்னியைப் பருவதேசுவரன் மீது ஏவினவன் இவன்தான்!

சாணக்: (தனக்குள்) நம்முடைய ஒற்றனே யன்றோ இந்த 'ஜீவ சித்தி'; (வெளிப்படையாய்) அப்புறம் இன்னும் யார்?

ஒற்றன்: ராக்ஷஸனுடைய அன்பு மிக்க காரியஸ்தன் சகடதாஸன்.

சாணக்: (நகைத்து, தனக்குள்) சரி, சிறு விஷயம்; ஆயினும் அசட்டை செய்யக்கூடாது. ஏற்கெனவே அவனிடம் வஞ்சக நட்புக் கொள்ளச் சித்தார்த்தகன் ஏவப்பட்டிருக்கிறான். (வெளிப்படையாய்) மூன்றுமவன் யார்?

ஒற்றன்: மூன்றுமவன் அமைச்ச ராக்ஷஸனுக்கு வேறு ஓர் இருதயம் போன்றவன். அவன் வைசியன்; இரத்தின வியாபாரி. பெயர் சந்தனதாஸன். அமைச்ச ராக்ஷஸன் ஊரைவிட்டு ஓடிய காலத்தில் தன் பெண்சாதி பிள்ளைகளை இவன் வீட்டில்தான் விடுத்து ஏகினான்.

சாணக்: (தனக்குள்) அங்ஙனம் இருப்பின் அவன் ராக்ஷஸனுக்குச் சிறந்த நண்பனாகவே இருக்கவேண்டும். ஏனெனில், தகுதியற்றவர்களிடம் ராக்ஷஸன் தன் பெண்டிர் பிள்ளைகளை ஒப்படைக்கமாட்டான். (வெளிப்படையாய்) ஆனால் ராக்ஷஸன் தன் மனைவி மக்களைச் சந்தனதாஸன் பாதுகாப்பில் விட்டிருப்பதை நீ எங்ஙனம் அறிந்தனை?

ஒற்றன்: ஐய! விபரங்கள் முழுவதையும் அறிவிக்க இதோ முத்திரை மோதிரம்! (மோதிரத்தைக் கொடுக்கிறான்)

சாணக்: (மோதிரத்தை வாங்கிப் பார்க்கிறான்; அதில் 'ராக்ஷஸன்' என்று பொறிக்கப் பெற்றுள்ள எழுத்துக்கள் தென்படுகின்றன. அதனால் களிப்பெய்தி, தனக்குள்)

நன்று; நன்று. ராக்ஷஸனே நம் விரல்களுடன் உறவு கொண்டாட வந்துவிட்டான் என்று கூறவேண்டும்.

(வெளிப்படையாய்) இந்தக் கணையாழி உன்னிடம் எப்படி வந்தது?

ஒற்றன்: ஆர்ய! குடிமக்களின் நடவடிக்கைகளை ஆய்ந்து அறியும்படி தாங்கள் ஆக்ஞையிட்டபின், அடியேன் வீடுவீடாய் நுழையத் தொடங்கினேன். யாருக்கும் ஐயம் தோன்றா வண்ணம் இந்தத் தரும ராஜன் படத்தைக் கையிலேந்திப் பாடி நின்றேன். அங்ஙனம், ஒவ்

* புத்த சந்நியாசி

வோர் இல்லமாய் நுழைந்து, இடையில் சந்தனதாஸன் வீட்டிற்குள் பிரவேசித்துப் பாடத் தொடங்கினேன்.

சாணக்: பிறகு?

ஒற்றன்: அப்பொழுது ஒரு புறத்திலிருந்து சுமார் ஐந்து வயதுள்ள சிறுவன் வெளியே வந்தான். அவன் குழந்தைகள் சுபாவப்படி மகிழ்ச்சியுடன், கண்கள் விரிய என்னை நோக்கி நின்ருன். உடனே உள்ளிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. “ஐயோ! வாசலில் போய்விட்டானே!” என்னும் வார்த்தைகள் குரலில் அச்சங் கலந்து ஒலித்தன. அடுத்த விநாடி, ஒரு மாது தன் முகத்தைக் கொஞ்சமாக வெளியே நீட்டி, அச் சிறுவனைக் கடிந்து பேசிய வண்ணம் அவனைத் தன் மெல்லிய கரத்தால் உள்ளுக்கு இழுத்துக் கொண்டாள். ஆனுல் சிறுவன் உள்ளே போக மனமில்லாமல் திமிறிக் கொண்டு நின்றதால் அவனைப் பற்றியிருந்த அவளது கைவிரல்கள் நடுக்கங்கொண்டன. அச்சமயம் ஆடவர் விரலுக்கு ஏற்ற சுற்றளவுள்ள இந்த மோதிரம் அவளுடைய விரலினின்றும் அவளை யறியாமல் நழுவிக் கூடத்தில் விழுந்து உருண்டு வந்து என் தாளை யடைந்து வணங்கி மௌனமாக நிற்கும் புது நாட்டுப் பெண்ணைப்போல் அசைவற்று நின்றது.

சாணக்: அறிந்தேன்! நீ போகலாம்!....இந்தப் பணிக்கு ஏற்ற பயனை விரைவில் பெறுவாய்!

ஒற்றன்: திருவுள்ளம்! (போகிருன்)

சாணக்: சார்ங்கரவ! சார்ங்கரவ!

சார்ங்: ஆர்ய! அடியேன் காத்திருக்கிறேன்.

சாணக்: மசிக்கூடும் எழுது தாளும் கொண்டுவா.

சார்ங்: (கொண்டு வந்து வைத்து) இதோ வைத்திருக்கிறேன்.

சாணக்: (தனக்குள்) என்னவென்று எழுதுவது? இதனுல் அல்லவா ராக்ஷஸனை வெல்லவேண்டும்?

அந்தப்புரக் காவற்காரி: (பிரவேசித்த வண்ணம்) வெற்றி வருக ஆரியருக்கு.

சாணக்: (மகிழ்வுடன் தனக்குள்) நல் வாக்கு! வெற்றிக்கு அறிகுறி இந்த நல்லுரை! (வெளிப்படையாய்) சோணுேத்தரே! எங்கு வந்தாய்?

காவற்காரி: ஆரிய! சந்திரகுப்த தேவர் மலர் மொட்டுப் போல் கை குவித்துத் தங்கள் திருவடியில் தலைவைத்து விண்ணப்பித்துக் கொள்ளுகிருர்.

சாணக்: என்ன அது?

காவற்: தேவரீர் அனுமதி அளித்தால், இறந்துபோன பருவதேசுவரனுக்கு ஈமச்சடங்கை நடத்தி, அவர் தரித்திருந்த அணிகலன்களை அந்தணர்க்கு அளிக்கலாமென விரும்புகிருர்.

சாணக்: (களிப்புடன் தனக்குள்) நன்று! சந்திரகுப்த, தக்கன நின் செயல்கள்; யாவும் என் இதயத்தை யொட்டியே நிகழ்கின்றன.

(வெளிப்படையாய்) சோணுத்தரே! அரசனை நாம் மிகவும் பாராட்டு கிறேம். அவர் உலகப் போக்கைச் செவ்வனே உணர்ந்திருக்கிறர். அவரை மெச்சினேம். ஆனல், பருவதேசுவரன் பூண்டிருந்த அணிகலன் கள் தனிப்பட்ட சிறப்புடையன. ஆதலின் அவை, தூயவர்களுக்கே வழங்குதற்கு உரியன. அதற்காக அறநெறி வழுவா அந்தணர்களை நாமே தேர்ந்தெடுத்து அனுப்புவோமென அரசரிடம் கூறு!

காவற்: அப்படியே! (போகிருள்)

சாணக்: சார்ங்கரவ! சார்ங்கரவ! நீ போய் விசுவாவசு முதலிய மூன்று அந்தண சகோதரர்களைக் கண்டு, அவர்களைச் சந்திரகுப்தனிடம் ஆபரணங்களைத் தானம் வாங்குவதற்காகப் போகச் சொல். தானம் வாங்கிய பின்னர் நம்மை நேரில் பார்த்துப் பேசிப் போகச் சொல்.

சார்ங்: அவ்வாறே! (போகிருன்)

சாணக்: (தனக்குள்) இது நிருபத்தின் பிற்பகுதி; முற்பகுதி எப்படி இருக்கவேண்டும்? (சிந்தித்து) ஆம், உணரலானேன். ஒற்றர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறர்கள். அந்த மிலேச்சப் படையிலே முக்கியமான ஐந்து அரசர்கள் இருக்கிறர்களாம். அவர்கள் எப்பொழுதும் ராக்ஷஸனைப் பக்தியுடன் சேவிக்கிறர்களாம். அவர்களில் ஒருவன் குலூத தேசாதிபதியான சித்திரவர்மா என்பவனும்; இன்னெருவன், வல்லமை மிகுந்த மலயநாட்டு மன்னனுன சிம்மநாதனும்; மற்றெருவன் காச்மீரத்தை ஆளும் புஷ்கராக்ஷனும்; சிந்து தேசத்தரசன் சிந்துஷேணன் வேறெருவனும்; பாரசீகத்து வேந்தனும், குதிரைப் படை மிக்கவனுமான மேகாக்ஷன் ஐந்தாமவனும்.

இந்த ஐந்து பேரின் பெயர்களை நான் இங்கே எழுதுகிறேன். சித்திரகுப்தன் இப்பெயர்களைத் தன் கணக்கிலிருந்து இனி நீக்கி விடலாம். (ஆலோசித்து) இல்லை; நான் இப்போது எழுதப்போவதில்லை. முதலில் ஒன்றும் புரியாதபடியே இருக்கட்டும். (எழுதிவிட்டு) சார்ங்கரவ!

சார்ங்: அடியேன்!

சாணக்: நிருத்தி எழுதினுலும் வைதிகர்களுடைய எழுத்து நேர்த்தியாயிராது. ஆகையால் நீ சித்தார்த்தகனிடம் போய், அவனைச் சகடதாஸனுல் ஒரு கடிதம் எழுதுவிக்கச் சொல். எழுதி முடிந்ததும் நம்மை வந்து காணும்படி தெரிவி. ஆனல் நிருபம் நமக்காக எழுதப்படுவதெனச் சகடதாஸன் அறியக்கூடாது என்பதையும் சித்தார்த்தகனுக்குக் கூறு.

சார்ங்: அங்ஙனமே!

சாணக்: இங்கே வா! (காதில் ஏதோ சொல்லி) லிகிதத்தில் இந்த வார்த்தைகள் இருக்கவேண்டும். யாருக்கோ—யாரோ—எதனையோ எழுதிய இரகசியமாய்த் தோற்றவேண்டும். சகடதாஸனுல் இவ்வண்ணம் எழுதுவிக்கும்படிச் சித்தார்த்தகனுக்குச் சொல்.

சார்ங்: கட்டளை! (போகிருன்)

சாணக்: சரி; மலயகேது வெல்லப்பட்டான்.

சித்தார்த்தகன்: (நிருபத்துடன் பிரவேசித்து) ஆர்யருக்கு

வெற்றி! இதோ நிருபம்; சகடதாஸனுல் எழுதப்பட்டது.

சாணக்: (வாங்கிப் பார்த்து) ஆஹா! எழுத்துக்கள் முத்துப் போன்றிருக்கின்றன. (வாசித்து) இங்கே வா! இந்தா! இதனை இந்த முத்திரையிட்டு மூடு.

சித்: (அப்படியே செய்து) ஆயிற்று.

சாணக்: (தனக்குள்) இனி, என்ன செய்யவேண்டும்? (வெளிப் படையாய்) அன்ப! மிகவும் வேண்டியவனுன ஒருவன் செய்வதற்குரிய அருஞ் செயலில் உன்னை ஏவப் போகிறேன்!

சித்: (மகிழ்ந்து) ஐய! அடிமை பாக்கியம் பெற்றேன்.

சாணக்: நன்று; முதலிலே நீ கொலைக்களம் போய்க் கொலையாளிகளை நோக்கிக் கண்ணை இமைத்துச் சைகை காட்டு அவர்கள் அதன் பொருளை உணர்ந்து, அஞ்சியவர்போல் பாசாங்கு செய்து அங்கு மிங்கும் ஓடுஞ் சமயம், சகடதாசனைக் கொலைக்களத்திலிருந்து அப்புறப் படுத்தி ராக்ஷஸனிடம் சேர்ப்பி. ராக்ஷஸன் தன் தோழனுக்கு உயிர் அளித்ததற்காக உள்ளம் பூரித்து உன்னைப் போற்றுவன். அச்சமயம் அவனுல் வெகுமதிகள் பெற்று அப்புறமும் அவனையே அண்டிச் சில காலம் இரு. இறுதியில் பகைவர் எம்மை அணுகியதும் (காதோடு கூறி) இப்படிச் செய்து விடு.

சித்: கட்டளை!

சாணக்: சார்ங்கரவ!

சார்ங்: ஐய! அடிமை!

சாணக்: நீ உடனே காலபாசிகனிடமும் தண்டபாசிகனிடமும் போ. அரசர் கட்டளையை நாம் அறிவித்ததாய்க் கூறு.

"ஜீவ சித்தி என்னும் புத்த சந்நியாசி, ராக்ஷஸன் உண்டாக்கிய விஷ கன்னிகையை ஏவி, பருவதேசுவரனைக் கொன்றனன்." இந்தச் செய்தியை நகரமெங்கும் பறைசாற்றி இக்குற்றத்திற்காக ஜீவ சித்தியை மிகவும் அவமானப்படுத்தி அவனை ஊரைவிட்டுத் துரத்திவிடச் சொல்.

சார்ங்: அவ்வண்ணமே. (போகிருன்)

சாணக்: குழந்தாய்! நில்! நில்! ராக்ஷஸன் தூண்டுகோலால் சகடதாசனும் நமக்கு எப்பொழுதும் சதிசெய்ய வழி தேடுகிருன். அவன் குற்றத்தையும் அவ்வாறே வெளிப்படுத்தி, அவன் மனைவி மக்களைச் சிறையில் அடைத்து, அவனைச் சூலத்தில் ஏற்றுவிக்கச் சொல்.

சார்ங்: உத்தரவு! (செல்கிருன்)

சாணக்: (கவலையுடன் தனக்குள்) ராக்ஷஸன் பிடிபடுவானு?

சித்: ஆர்ய! பிடிபட்டது.

சாணக்: (தனக்குள்) மங்கள வார்த்தை! ராக்ஷஸன் அகப்பட்டு விடுவான். (வெளிப்படையாய்) எது பிடிபட்டது?

சித்: தேவரீர் இட்ட கட்டளையின் உட்பொருள் புலனுயிற்று. காரியசித்தியை நாடி இதோ புறப்படுகிறேன்.

சாணக்: (முத்திரைக் கணையாழியையும் நிருபத்தையும் கொடுத்து) உன் காரியம் கைகூடுக! போ, சித்தார்த்தக!

சித்: வந்தனம். (போகிறான்)

சார்ங்: ஐய! காலபாசிகனும் தண்டபாசிகனும் அரசர் ஆணையை உடனே நிறைவேற்றுவதாகக் கூறினர்.

சாணக்: நன்று; குழந்தாய்! நாம் இப்போது இரத்தின வியாபாரியான சந்தனதாஸனைக் காணவேண்டும்.

சாணக்: இதோ அழைத்து வருகிறேன்.

(போய்ச் சந்தனதாசனுடன் திரும்பி வந்து)

செட்டியாரே! இப்படி வாரும்!

சந்தனதாசன்: (தனக்குள்) கருணையை அறியாத சாணக்கியன் அழைப்பது காலனே அழைப்பதற்கு ஒப்பானது. குற்றமே செய்யாத குடிகளும் இவனைக் காணுதற்கு நிலை கலங்குவர் என்றால், தீமையே புரிந்துவரும் என் நிலைமையைக் கேட்கவும் வேண்டுமா? இந்தக் கொடிய சாணக்கியன் ஒருகால் என் வீட்டைச் சோதனை போடுவான் என்று எண்ணியே ராக்ஷஸனது மனைவி மக்களைத் 'தனசேனன்' முதலிய வர்த்தகரிடம் விட்டு, மிகவும் கவனமாய்ப் பாதுகாக்கும்படி முன்னெச்சரிக்கையுடன் ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன். என் வரையில் எது வந்தாலும் கவலையில்லை. ராக்ஷஸன் குடும்பத்திற்கு மட்டும் ஒரு தீங்கும் நேரிடாமல் இருந்தால் போதும்.

சார்ங்: ஏன், செட்டியாரே! இப்படி வரலாமே!

சந்தன: இதோ வந்துவிட்டேன்.

சார்ங்: ஆர்ய! செட்டியார் வந்திருக்கிறார்.

சந்தன: ஆரியருக்கு மங்களங்கள்.

சாணக்: (அப்பொழுது தான் கவனித்து) செட்டியார் அவர்களே! வரவேண்டும்! வரவேண்டும்! இதோ, இந்த ஆசனத்தை அலங்கரிக்க வேண்டும்.

சந்தன: ஆர்ய! அளவுக்கு மிஞ்சின உபசாரம் அவமதிப்பைக் காட்டிலும் மிக்க துயரத்தைத் தருமன்றோ? இது சந்நிதானம் அறியாதது அல்லவே! இப்படி தரையிலேயே உட்காருகிறேன்.

சாணக்: இல்லை, செட்டியாரே! உம்மைப் போன்றவர்க்கு எம்மைப் போன்றோர் செய்யவேண்டிய மரியாதையே இது. ஆசனத்திலேயே அமருங்கள்.

சந்தன: (தனக்குள்) தெரிகிறது! இந்தத் துஷ்டன் எதற்கோ பீடிகை போடுகிறான். (வெளிப்படையாக) திருவுள்ளம்! (உட்காருகிறான்.)

சாணக்: செட்டியாரே! வியாபாரம் எப்படி நடக்கிறது? லாபத்திற்கு ஒன்றும் லோபமில்லையே?

சந்தன: (தனக்குள்) மிதமிஞ்சின பரிவு ஐயத்துக்கே இடமளிக்கிறது. (வெளிப்படையாக) சந்நிதானத்தின் திருவருளால் எவ்வித

மான குறைவும் இல்லை.

சாணக்: சந்தோஷம்! செட்டியாரே! சந்திரகுப்தருடைய தீய குணங்களில் எதுவேனும் பழைய அரசரின் நற்குணங்களைக் குடி மக்கட்கு நினைப்பூட்டுகிறதா?

சந்தன: பெரும் பாவம்! குடிகள், சரத் கால சந்திரனைப் போன்ற சந்திரகுப்தரால் பேறும் மகிழ்ச்சியும் பெற்றுப் பொலிவுடன் விளங்குகிறார்கள்.

சாணக்: அங்ஙனம் இருப்பின், மகிழ்ச்சியுற்ற மக்களிடமிருந்து மறு பயனை மன்னன் எதிர்பார்த்தல் இயல்புதானே?

சந்தன: ஆம். ஐய! கட்டளையிடுங்கள். அடியேன் என்ன, எவ்வளவு சமர்ப்பிக்க வேண்டுமென்று!

சாணக்: செட்டியார்! பணப் பிசாசு பிடித்த நந்தரின் இராஜ்யம் அல்ல இது; உங்களுக்கு வருத்தம் அளிக்க விரும்பாத சந்திர குப்தனுடைய செங்கோல். நினைவில் இருக்கட்டும்.

சந்தன: (மகிழ்வுடன்) பேரருள்!

சாணக்: என்ன, செட்டியாரே! அத்தகைய வருத்தமற்ற கைம்மாறு யாதென நம்மைக் கேட்கவேண்டாமா நீர்?

சந்தன: ஆம்; தெரிவியுங்கள்.

சாணக்: சுருங்கச் சொல்லுகிறேன். அரசரிடத்து யாருக்கும் பகைமை இருக்கக்கூடாது.

சந்தன: என்ன? எந்த நற்பேறு அற்றவன் ஆரியரால் பகைவனெனக் கருதப்படுகிறான்?

சாணக்: தூரத்தில் ஏன் போகவேண்டும். உமக்கே அதில் முதலிடம்!

சந்தன: தெய்வமே! துரும்புக்குத்தணலோடு பகையா?

சாணக்: பகை எதனால் ஏற்பட்டது தெரியுமா? ராஜத்துரோகியான ராக்ஷஸனுடைய மனைவி மக்களுக்குப் புகலிடம் அளித்து, அவர்களை உமது இல்லத்திலே வைத்துக் கண்ணெனக் காத்து வருகிறீரே, அதனால் தான்.

சந்தன: வீண் பழி! இல்லவே இல்லை. சந்நிதானத்தில் எவனோ கட்டிவிட்ட பொய்க் கதை இது!

சாணக்: செட்டியாரே! கலக்கம் வேண்டாம்! எந்தக் காலத்திலும் இவ்வாறு நடத்தல் உண்டு. முன்பெல்லாம் அரசர்கள், தாம் அயல்நாட்டிற்குப் போகும்படி நேர்ந்துவிட்டால், தம் பெண்டிர் பிள்ளைகளை நம்பிக்கையான குடிமக்களிடம் ஒப்படைத்துப் போவார்கள். குடிகள் இதற்குச் சம்மதிக்காவிடினும் அதனைப் பொருட்படுத்த மாட்டார்கள். இது என்றும் இயல்பு. ஆனால், அவ்வாறு ஒப்படைக்கப் பட்டவர்களை ஒளித்து வைப்பதுதான் பெரும் பிழையாகும்.

சந்தன: ஆம்; அந்தத் தருணம் ராக்ஷஸனது வீட்டார் என் இல்லத்தில் இருந்தது உண்டு.

சாணக்: முதலிலே 'அபாண்டம்', இப்போது 'இருந்ததுண்டு'; செட்டியாரே! வார்த்தை முரண்படுகிறதே!

சந்தன: இவ்வளவுதான், என் வார்த்தையிலுள்ள கபடம்!

சாணக்: கபடமா? சந்தன தாஸ! சந்திரகுப்த ராஜ்யத்தில் கபடமே இருக்கக்கூடாது; ராக்ஷஸனுடைய இல்லத்தாரை நம் மிடம் ஒப்படைத்துவிடும். உமக்குக் கபடமே அற்றுவிடும்.

சந்தன: ஆர்ய! அதனை உள்ளவாறு உரைத்து ஆயிற்று. "ராக்ஷஸனுடைய மனைவி மக்கள் அப்பொழுது இருந்தனர்" என்று.

சாணக்: இப்பொழுது எங்கே போயினர்?

சந்தன: நான் அறியேன்!

சாணக்: (புன்னகையுடன்) அறியீரா? செட்டியாரே! தலையிலே பாம்பு; சிகிச்சையோ வெகு தூரத்தில்: ஞாபகமிருக்கட்டும்!

சந்தன: (தனக்குள்) உண்மைதான்! தலைக்குமேல் நீருண்ட மேகங்கள்; காதலியோ தொலை தூரத்தில், இதென்ன சங்கடம்? இமய மலையிலே மூலிகையும் சிரத்திலே சர்ப்பமும்போல் இருக்கிறது, இச்செய்தி!

சாணக்: மேலும், நந்தனை *விஷ்ணுகுப்தன் செய்ததுபோல் (பாதியில் நாணத்துடன்)......சந்திரகுப்தனை ராக்ஷஸன் நிர்மூலமாக்கமுடியுமென்று கனவிலும் கருதவேண்டாம். நீரே நினைத்துப் பாரும். நந்தர் உயிருடன் இருக்கையில் வன்மை மிகுந்த நீதி நிபுணர்களான 'வக்கிரநாசன்' முதலியோராலேயே அந்த இராஜ்ய லக்ஷ்மியை நிலைநிறுத்த முடியவில்லையே; அங்ஙனமிருக்க, உலகத்தை உவகையில் ஆழ்த்திவரும் சந்திரனிடமுள்ள நிலவுபோல இப்பொழுது ஒருமையுற்றிருக்கும் இந்தச் சாம்ராஜ்ய லக்ஷ்மியைச் சந்திரகுப்தனிடமிருந்து பிரித்துவிட எவனால் இயலும்?

சந்தன: (தனக்குள்) வல்லமைக்கு ஒத்திருப்பதால், இவனுக்குத் தற்புகழ்ச்சியும் தக்கதாகவே இருக்கிறது.

(திரைக்குள் பறைசாற்றும் ஒலி)

சாணக்: சார்ங்கரவ! என்ன அங்கே கலவரம்? அறிந்து வா!

சார்ங்: (பார்த்து வந்து) ஆர்ய! ஜீவ சித்தி என்னும் புத்த சந்நியாசி, இராஜத் துரோகம் செய்ததால், அரசர் கட்டளைப்படி அவனை அவமானப்படுத்தித் தேசப் பிரஷ்டம் செய்கிறார்கள்.

சாணக்: க்ஷபணகனா? ஐயோ பாவம்! உம்; இராஜத் துரோகத்துக்கு ஏற்ற தண்டனையை அனுபவிக்கட்டும்.

செட்டியாரே! துரோகிகளை அரசர் எவ்வாறு சிட்சிக்கிறார் என்பதைக் கவனித்தீரா? நீர் நன்மையுற்றிருக்கவேண்டுமாயின் நமது சொல்லைக் கேளும். ராக்ஷஸனுடைய மனைவி மக்களை உடனே நம்மிடம் ஒப்படைத்துவிடும். அதனால் அரசருடைய பேரருளுக்குப் பாத்திரமாகி, அகண்டமான ஐசுவரியத்தை நிலையாக அனுபவிப்பீர்.

---

*விஷ்ணுகுப்தன், கௌடில்யன் என்பன சாணக்கியனுடைய பெயர்களே.

சந்தன: அவர்கள் என் வீட்டிலே இல்லை.

(திரைக்குள் சத்தம்)

சாணக்: சார்ங்கரவ! மீண்டும் என்ன அது? அறிந்து வா!

சார்ங்: (சென்று, திரும்பிவந்து) இவனும் ஓர் இராஜத்துரோகியே; பெயர் சகடதாஸனும்; கழுவில் ஏற்றக் கொண்டுபோகப்படுகிறுன்.

சாணக்: வினைப்பயன் எவரையும் விடாது; அனுபவிக்கட்டும். செட்டியார்! துரோகிகளைப் பூண்டோடு அழிப்பது என்னும் விரதம் பூண்ட வேந்தன் உமது செயலுக்குச் சிறிதும் இடங்கொடார். அன்னியன் குடும்பத்தை ஆதரிக்கப்போய், உம்முடைய மனைவியையும் ஆயுளையும் வீணே இழக்காதீர். உடனே ராக்ஷஸன் வீட்டாரைக் காட்டிக்கொடுத்துவிடும்.

சந்தன: என்ன சுவாமி! பயமுறுத்துகிறீர்களே! ராக்ஷஸன் குடும்பத்தார் என்னிடமே இருப்பினும் காட்டிக்கொடேனே! இல்லாமல் இருக்கையில் எவ்வாறு இயலும்?

சாணக்: சந்தனதாஸ! நன்ருக ஆலோசித்து முடிவுக்கு வா!

சந்தன: ஆம்; யோசித்த முடிவு; தெளிந்த தீர்மானம்.

சாணக்யன்: (தனக்குள்) ஆஹா! சந்தனதாஸ! எளிதிலே கிடைக்கும் ஏராளமான செல்வத்தையும் பொருட்படுத்தாது, அடைக்கலம் புகுந்தவரைக் காப்பதற்காகத் தன்னையே தியாகம் செய்யவும் ஆயத்தமாயிருக்கும் உனக்கு உவமையாக எவரைக் கூறமுடியும்? சிபிச் சக்கரவர்த்தியைத்தான் சொல்லவேண்டும். (வெளிப்படையாக) சந்தனதாஸ! இதுதான் இறுதியான தீர்மானமா?

சந்தன: ஆம், ஐய! முதிர்ந்த முடிவு!

சாணக்: (சினத்துடன்) துரோகி! கொடியோய்! நரபதியின் வெஞ்சினம் உன்னை விழுங்கிவிடும்.

சந்தன: (இரு கைகளையும் விரித்து) தயார்! அதிகாரத்துக்கு ஏற்றபடி செய்யுங்கள்!

சாணக்: (கோபத்துடன்) ஆ! சார்ங்கரவ! காலபாசிகனிடமும் தண்டபாசிகனிடமும் போ! இந்தத் தீயனை சடுதியில் சிட்சிக்கச் சொல்....இரு; இல்லாவிட்டால்..விஜயபாலனிடமும் துர்க்கபாலனிடமும் சொல். இவன் இல்லத்தையும், பொருள்களையும் பறிமுதல் செய்து இவனைக் காவலில் வைக்கட்டும்....நான் சந்திரகுப்தனுக்கு அறிவிக்கிறேன்; இவன் உயிருக்கு உலையாக உரிய தண்டனையை அவனே விதிப்பான்.

சார்ங்: திருவாணை! செட்டி! வா இப்படி!

சந்தன: ஆஹா; வருகிறேன்? (தனக்குள்) என் சொந்தக் குற்றத்தால் இந்த இடரில்லை; நண்பனிடம் வைத்த அன்பினுல் எனக்கு அழிவு. இதுவே பிறவியின் நற்பயன். (சார்ங்கரவனுடன் போகிறுன்.)

சாணக்: (தனக்குள் மகிழ்ச்சி பொங்க) ஆ, ஆ! இப்போது ராக்ஷஸன் கிடைத்தேவிட்டான். எப்படி? . . . . அவன் இடருற்ற காலத்தில் சந்தனதாஸன் எப்படித் தன் உயிரை அற்பமாய் நினைத்து இழக்க உறுதியாயிருக்கிறானோ, அவ்வாறேதான் சந்தனதாஸனுக்கு ஆபத்து நேரிட்டால் ராக்ஷஸனும் தன் பிராணனைப் பொருட்படுத்தமாட்டான்.

(திரைக்குள் சத்தம்)

(வெளிப்படையாக) சார்ங்கரவ! மீண்டும் என்ன அது?

சார்ங்: (பார்த்துவந்து) ஐய! கொலைக்களத்திலிருந்த சகட தாசனைச் சித்தார்த்தகன் இழுத்துக்கொண்டு ஓடிவிட்டானாம்.

சாணக்: (தனக்குள்) சித்தார்த்தக! காரியத்தை நன்கு தொடங்கினை; உனது முயற்சி இனிது நிறைவேறுக! (வெளிப்படையாக) என்ன? வலுவிலா இழுத்துப்போயினன்? (கோபத்துடன்) நீ பாகுராயணனிடம் போய்ச் சீக்கிரம் சித்தார்த்தகனுக்குத் தக்க மரியாதை செய்யச் சொல்!

சார்ங்: (சென்று வருத்தத்துடன் திரும்பி வந்து) ஆர்ய, என் சொல்ல! பாகுராயணனும் ஓடிப்போயினனாம்!

சாணக்: (தனக்குள்) ஓடட்டும், காரிய சித்தியை நாடி! (வெளிப்படையாகச் சினமுற்றவன்போல் நடித்து) இருக்கட்டும்; நீ உடனே போ! பத்ர படன், புருஷதத்தன், டிங்கராதன், பலகுப்தன், ராஜசேனன், லோகிதாட்சன், விஜயவர்மன் இவர்களிடம் நமது கட்டளையைத் தெரிவி. பாகுராயணனை இப்பொழுதே பிடித்துவரச் சொல்.

சார்ங்: (போய் வந்து) குருதேவா! என்ன விந்தை! எல்லாம் எதிரிடை! பத்ர படன் முதலியோரும் விடியுமுன்னமே ஓடிவிட்டார்களாம்.

சாணக் (தனக்குள்) எல்லோருக்கும் நலம் உண்டாகுக. (வெளிப்படையாக) குழந்தாய்! வருந்தாதே! கவனி! எதனையோ நினைத்துக்கொண்டு ஓடிப்போனவர்களெல்லாம் போய்த் தொலையட்டும்; இன்னும் இருப்பவர்கள் வேண்டுமாயினும் ஓடிப்போக முயற்சி செய்யட்டும். நாம் அவர்களைத் தடுக்கப்போவதில்லை. நந்தரை நாசமாக்கியதில் நன்கு வெளியான நம்முடைய புத்தியின் வன்மை, காரியத்தை நிறைவேற்றுவதில் ஆயிரக்கணக்கான சேனைகளைக் காட்டிலும் மிகவும் சிறந்தது. யார் எங்கு ஓடிப்போயினும் அந்தப் பெருமை நிறைந்த நமது மதிமட்டும் ஒருபோதும் நம்மைவிட்டுப் போகாது. (ஆகாயத்தைப் பார்த்து) இதோ, பத்ர படன் முதலிய துஷ்டர்களைக்கொண்டு வருகிறேன்.

(தனக்குள்) ஹே! ராக்ஷஸ! எவ்வாறு தப்புவாய் நீ? மதநீர்ப் பெருக்கெடுத்துத் தன் விருப்பப்படி திரிகின்ற காட்டு யானையை, பாகன் அங்குசத்தால் அடக்கிக் காரியத்தில் ஈடுபடுத்துவதுபோல, தனியே நின்று திரவியத்தை விருப்பம்போல் வாரியிறைத்து, ஆள் சேர்த்துச் சைநியம் கூட்டி, அந்தப் பலத்தால் இறுமாப்புற்றிருக்கும்

உன்னையும், இன்னும் சில நாட்களில் என் மதி வன்மையால் அடக்கி வசமாக்கிச் சந்திரகுப்தனது பணியிற் புகுத்துவேன். (எல்லோரும் போகிறார்கள்)

முதலங்கம் முற்றிற்று

# இரண்டாம் அங்கம்

(பாம்பாட்டி பிரவேசிக்கிறான்)

பாம்பாட்டி:—எவர்கள் அடக்குமுறைகளின் முறைமையை நன்கறிவார்களோ அவர்களே அரசாங்க நுட்பங்களை நன்றாக உணர்ந்தவர்கள். யாவர் பாம்புகள் மண்டலமிட்டுப் படுத்திருக்கும் இடத்தில் தோண்டிப் பார்ப்பரோ அன்னோரே ஈராறு இராஜமண்டலங்களைக் குறித்து வைத்திருப்போர். மந்திரங்களைக் காக்கும் ஆற்றல் எவரிடம் உள்ளதோ அவர்களே மந்திராலோசனையையும் இரகசியமாக வைத்திருக்க வல்லவர்கள். சர்ப்பங்களை வைத்துப் பிழைக்கத் தெரிந்தவர்களே, அரசனை அண்டி ஜீவிக்க முடிந்தவர்கள்.

(வானை நோக்கி)

ஐயா என்ன? யாரென்று கேட்கிறீரா? நான் பாம்பாட்டி; என் பெயரா? 'ஜீர்ண விஷன்.' என்ன சொல்லுகிறீர்? நீரும் பாம்பொடு விளையாட வேண்டுமா? உமக்கு என்ன உத்தியோகமோ? அரச குலத்திலா? சரிதான்; ஏன்—கட் செவியோடு நீர் விளையாடிக்கொண்டு தானே இருக்கிறீர்? எப்படி என்கிறீரா? மந்திரமோ மூலிகையோ தெரிந்துகொள்ளாமல் பாம்பைப் பிடிப்பவனைப்போல்; அல்லது, அங்குசம் இல்லாமல் யானையின்மேல் ஏறுகிறவனைப் போன்று; இன்றேல், பதவிச் செருக்குற்ற இராஜ சேவகனை நிகர்த்து.

என்ன? பார்த்தமாத்திரத்தில் இவன் போய்விட்டானே! ஐயா! நீர் கூறுவது என்ன? கூடைப் பெட்டிகளில் என்ன என்கிறீரா? எனக்குப் பிழைப்பு அளிக்கும் பாம்புகள். என்ன? பார்க்கவேண்டுமா? மன்னிக்கவேண்டும். அவசியம் பார்த்தே ஆகவேண்டுமானால்—இப்படி—இந்த வீட்டுப் பக்கம் வாரும்; காட்டுகிறேன்.

என்ன? இது அமைச்சர் ராக்ஷஸர் இல்லமா? இருக்கட்டுமே! நீர் வரக்கூடாதா? ஏன்? உத்தரவு இல்லையா? சரி; நீர் போகலாம். எனக்கு என்னவோ பிழைப்பின் வரப்பிரசாதத்தால் எங்கும் புக அனுமதியுண்டு. சரி; இவனும் போய்விட்டான்.

(தனக்குள்) ஆஹா! என்ன அதிசயம்! சாணக்கிய தந்திரத்தின் நிழலிலே இருக்கும் சந்திரகுப்தனைப் பார்த்தால், ராக்ஷஸனுடைய முயற்சிகளெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகுமென்றே தோன்றுகிறது. அதேசமயத்தில் ராக்ஷஸனுடைய புத்தி நுட்பத்திலே வசிக்கும் மலயகேதுவை நோக்கினாலோ, சந்திரகுப்தனிடமிருந்து சாம்ராஜ்யம் நழுவிவிட்டதென்றே நம்பவேண்டியிருக்கிறது. ஏனெனில்,

ஒருபுறம், சாணக்கியன், தனது அறிவுக் கயிற்றால் கட்டுண்ட சொரூபத்தைப் பெற்ற மௌரியனின் சாம்ராஜ்ய லக்ஷ்மியை நிலை

நாட்டியிருப்பது தெரிகிறது. மற்ருெரு பக்கம், அந்தத் தேவியை ராக்ஷஸன் தன்னுடைய உபாயக் கரங்களால் வலித்திழுப்பதும் புலப்படுகிறது. ஆகவே,

இந்த இரண்டு இராஜ தந்திர நிபுணர்களின் மத்தியிலே அகப்பட்டுக்கொண்ட நந்தலட்சுமியின் நிலைமை நம்புதற்கியலாதவாறு இருக்கிறது.

எவ்வாறெனில், பரஸ்பர விரோதம் பூண்ட இரண்டு மத யானைகள் ஒன்றேடொன்று போர்புரியும்போது வெற்றித் தோல்வி எந்தப் பக்கம் என்பது தெரியாது. அவ்விரண்டுக்கும் பொதுவான பெண் யானை எவ்வண்ணம் தடுமாறுமோ, அவ்வாறே வலிமை பொருந்திய அறிவாளிகளான இந்த இரண்டு மந்திரிகளிடையே வெற்றியும் தோல்வியும் அறியமுடியாமல் சாம்ராஜ்ய லக்ஷ்மி ஐயுற்று நிற்கிருள்.

சரி; எதற்கும் ராக்ஷஸனைப் பார்க்கிறேன்.

(ராக்ஷஸன் சோகமுற்று ஓர் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிருன்; அருகில் ஒரு சேவகன் நிற்கிருன்)

ராக்ஷஸன்: (மேலே பார்த்துக் கண்ணீருடன்) கஷ்டம்! ஐயோ கஷ்டம்! ராஜ நீதி, சௌரியம் இவைகளால் பகைவரின் கொட்டத்தை அடக்கிய 'வ்ருஷ்ணி' வம்சத்தைப்போல மகா விசாலமான இந்த நந்த குலமும் கருணையற்ற விதியால் நாசமாக்கப்பட்டது.

நானே, இந்த அழிவு எவ்வண்ணம் நேர்ந்ததென்று பலவாறு சிந்தனைகளைச் சிருட்டிப்பதால் அல்லும் பகலும் உறக்கம் இழந்து உருகித் தவிக்கிறேன். இந்த வீண் கற்பனை சுவரற்ற சித்திரம்போலவே இருக்கிறது. ஏன்? அஸ்திவாரந்தான் அழிந்துவிட்டதே!

ஆனல், இப்பொழுது பிறர்க்கு அடிமையாகி மிகவும் தீவிரமாக அரச நீதியில் மனத்தைச் செலுத்துகிறேன். எதற்காக? எஜமான விசுவாசம் மறந்து போயிற்ரு? மறக்கவில்லை. அல்லது இந்தப் போக பாக்கியங்களை விரும்பியா? அதுவும் இல்லை. ஒருகால் உயிருக்கு ஆபத்து வருமென்று பயந்தா? அவ்வச்சம் சிறிதுமில்லை. இல்லாவிடின் புகழைச் சம்பாதித்துக்கொள்ள எண்ணியா? இல்லவே இல்லை. பின் எதற்காக இந்த அடிமைத் தொழில்? 'சேவகம் செய்தாவது பகைவரை அழித்து, சுவர்க்கத்திலேனும் எஜமானரைத் திருப்தி செய்விக்க மாட்டோமா?' என்னும் ஏக்கத்தினுல்தான்!

(ஆகாசத்தை நோக்கிக் கண்ணீருடன்)

தாயே! கமலவாசினி! நீ முற்றும் குணமறியாதவள். ஏன்? பரமானந்தத்தைத் தரும் வள்ளலாகிய நந்தரைவிட்டு மௌரிய புத்திரனிடம் ஆசை வைத்தாயே! ஏன், சொல்ல முடியுமா? மதயானையின் மத நீர்ப் பெருக்கு அந்தக் கஜம் அழியும்போது தானும் மறைந்து விடுவது போல் நந்தருடனே நீயும் அழிந்திருக்கலாகாதா? இதென்ன சபலம், அவரைவிட்டு இவனை யடையவது?

மேலும், ஈனகுலத்தவளே! நற்குடியிற் பிறந்த அரசர்கள் அனைவருமா அழிந்து போயினர்? நீ அடைவதற்கு இந்தக் கீழ்க்குலத்தினனை மௌரியன்தானு கிடைத்தான்? ஆம். பெண்களின் மனம் நாணற் பூவின் நுனியைவிடச் சஞ்சலம் படைத்ததாய் இருக்கும் என்பது உண்

மையே; அங்ஙன மிருக்கையில் ஆடவருடைய குணுகுணங்களை அறிய ஆற்றலேது? இடமுவது உண்டா?

ஆனால், விநயம் அற்றவளே! உன் ஆதாரத்தை வேர் அறுத்து உன்னை ஆசையற்றவள் ஆக்குவேன்!

நான் நகரத்தை விட்டபோது, என் மனைவி மக்களை நண்பன் சந்தனதாஸனிடம் ஒப்படைத்து வந்தது மிகவும் தகுதியான செய்கை. குசுமபுரத்தை நான் முற்றுகை இடுவேன் என்பதை என் நண்பர்கள் நம்புவதற்கு ஏதுக்கள் இருக்கின்றன. அதனால் அவர்கள் தங்கள் முயற்சிகளில் ஊக்கம் மிகுந்தே இருப்பார்கள். மேலும், ஏராளமான திரவியத்தை அளித்து நான் நியமித்திருக்கும் சகடதாஸன் நொடிக்கு நொடி எதிரிகளின் காரிய திட்டங்களை அறிவித்து வருகிறான். தவிர, கொடிய பாஷாண ரஸத்தை ஊற்றிக் கொடுத்து, சந்திரகுப்தனுடைய ஆவியைப் போக்குமாறு நான் நியமித்துள்ள தந்திரசாலிகளையும் சகடதாஸன் தன் வசமாக்கிக் கவனித்து வருகிறான்.

அன்றியும், பகைவரிடம் ஒற்றுமையைக் குலைக்கவும், அவர்களுடைய செயல்களை அவ்வப்போது தெரிந்துவந்து உரைக்கவும் ஜீவ சித்தி முதலானோர் நியமிக்கப்பட்டு உள்ளனர். அதிகம் உரைப்பானேன்? புத்திர வாஞ்சையால் வளர்க்கப்பட்ட புலிக்குட்டி தன்னுடைய எஜமானன் வம்சத்தையே நாசமாக்கியது ; ஆனால், அதனுடைய மர்மம் என் புத்தியாகிய அம்புக்குப் பலியாகத் தவறாது. ஆயினும், கண்ணுக்குப் புலப்படாத விதி மட்டும் அதனைக் காக்கும் கவசமாகாதிருத்தல் வேண்டும்.

கஞ்சுகி: (பிரவேசித்து) சாணக்கியனுடைய நீதியானது நந்தனைக் கொன்று மௌரியனைப் பிரதிஷ்டை செய்ததுபோல, என்னுடைய விருத்தாப்பியம் காமத்தைக் கொன்று அறத்தை என்னிடம் நிலைநாட்டியது. இப்பொழுது நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரும் சந்திரகுப்தனை ராக்ஷஸன் வெல்ல முயல்வதுபோல, வளர் பிறையைப்போல் வளர்ச்சியுறும் என் தருமத்தை இந்த அடிமைத் தொழிலில் ஏற்பட்ட பேராசை அழிக்க யத்தனிக்கிறது. ஆயினும், சந்திரகுப்தனை ஜயிக்க முடியாமல் ராக்ஷஸன் தவிப்பதுபோலவே இதுவும் அறத்தை வெல்லத் தெரியாமல் விழிக்கிறது.

இதோ ராக்ஷஸன் வீடு! செல்கிறேன்! (அருகிற் சென்று) அமைச்ச! நலமுண்டாகுக!

ராக்ஷஸன்: ஆர்ய, ஜாஜலி! வந்தனம்! ஏ, பிரியம்வத! இவருக்கு ஆசனம் கொடு.

பிரியம்வதன்: இதோ ஆசனம்; அமருங்கள்.

கஞ்சுகி: (உட்கார்ந்து) அமைச்ச குமாரர் மலயகேது ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கிறார்.

"உலகைவிட்ட தலைவரின் பேரில் உள்ள அன்பினால், தாங்கள் அலங்காரங்களையும் அணிகலன்களையும் அகற்றியிருப்பது குமாரரைப் பெருந்துயரில் ஆழ்த்திவிட்டது. எஜமானரின் அருங் குணங்களைத் திடீரென மறக்க இயலாதாயினும், குமாரருக்குக் கௌரவம் அளிப்பதற்காக

வேனும் அவர் அணிந்திருந்த இந்த ஆபரணங்களைத் தரித்துக்கொள் ளும்படி விக்ஞாபிக்கிறார்." (ஆபரணங்களைக் காட்டுகிறான்)

ராக்ஷஸன்: ஜாஜலி! குமாரருக்குத் தெரிவியும்! "அவர் மீதுள்ள நேசத்தால் தலைவர் பிரிவைக்கூட எளிதில் மறந்தனம்.

"ஆனால், அதனுடன் விரோதிக் கூட்டங்களைப் பூண்டறுத்து, சுகாங்க மாளிகையின் சுவர்ண சிங்காதனத்திலே குமாரரை அமரச் செய்யும் வரையில், பகைவரால் விளைந்த அவமானத்தால் வீரியம் இழந்திருக்கும் நம் அவயவங்கள் சிறிதேனும் அலங்கார போஷணைகளை ஏற்கமாட்டா."

கஞ்சுகி: தங்களைத் தலைவராக அடைந்தபின் குமாரருக்கு இது அரிதல்ல; அவருடைய முதல் அன்பளிப்பு மதிக்கப் பெறட்டும்.

ராக்ஷஸன்: குமாரரின் அன்பளிப்பைப்போலவே உமது கட்டளை யும் புறக்கணிக்க முடியாததாக இருக்கிறது. நிறைவேறட்டும்.

கஞ்சுகி: (அணிகலன்களைப் பூணச் செய்து) மங்களம் எய்துக! நான் விடை பெறுகிறேன்.

ராக்ஷஸன்: வந்தனம், ஆர்ய!

கஞ்சுகி: சரி! என் காரியத்தைக் கவனிக்கிறேன்.

(போகிறான்)

ராக்ஷஸன்: பிரியம்வத! நம்மைக் காண யாரேனும் வாசலில் வந் திருக்கிறார்களா என்று பார்த்து வா.

பிரியம்வதன்: அப்படியே!

(போகிறான்; பாம்பாட்டியைப் பார்க்கிறான்)

யார் நீ?

பாம்பாட்டி: நானா? பாம்புகளை ஆட்டி வைப்பவன். என் பெயர் 'ஜீர்ண விஷன்.' அமைச்சர் முன்னிலையில் அரவுகளோடு ஆடவேண்டு மென்று ஆவலுறுகிறேன்.

பிரியம்வதன்: அப்படியா? இரு; கேட்டு வருகிறேன். (ராக்ஷஸ னிடம் வந்து) ஒரு பாம்பாட்டி வந்திருக்கிறான்; தங்கள் எதிரில் ஆடிக் காட்ட வேண்டுமாம்.

ராக்ஷஸன்: (இடது கண் துடிப்பதை எண்ணித் தனக்குள்) எடுத் ததும் பாம்புகளைப் பார்ப்பது சரியாக இல்லை.

(வெளிப்படையாக) பிரியம்வத! நாம் பாம்புகளைக் காண விரும்ப வில்லை. ஏதேனும் கொடுத்து அவனை அனுப்பிவிடு.

பிரியம்வதன்: நல்லது. (போய்ப் பாம்பாட்டியைப் பார்த்து) ஐய! அமைச்சர் உம்மைப் பார்க்காமலேயே பரிசு கொடுத்துவிட்டார்; பெற்றுப் போம்!

பாம்பாட்டி: அப்படியா! அப்பா, மறுபடியும் சற்று உள்ளே போய், நான் சொன்னதாகத் தெரிவி. நான் பாம்பாட்டி மட்டுமல்ல; தேச பர்ஷையில் தேர்ந்த கவியுங்கூட; ஆகையால் அமைச்சர் என்னைக்

காண இசையாவிட்டாலும், இந்த நிருபத்தையாவது கொண்டுபோய்க் கொடு. கண்டு தெளியட்டும். (எழுதித் தருகிறான்)

பிரியம்வதன்: (ராக்ஷஸனிடம் நிருபத்தைக் கொடுத்து) ஐய! அவன் வெறும் பாம்பாட்டி மட்டும் அல்லவாம். 'பிராக்ருத' பாஷைக் கவியுங்கூடவாம். தன்னைக் காணுவிடினும் இந் நிருபத்தையேனும் காணச் சொன்னான்.

ராக்ஷஸன்: (கடிதத்தை வாங்கிப் படிக்கிறான்)

''வண்டு, தன் சாமர்த்தியத்தால் புஷ்பங்களிலுள்ள ரஸம் முழுவதையும் குடித்து வெளிவிடுவது பிறர் நன்மைக்காகவே!''

(தனக்குள்) என்ன? 'வண்டு' என்பது வந்திருக்கும் இவன், 'புஷ்பம்' எனில் 'குசும புரம்'; தன் சாமர்த்தியத்தால் ரஸமெல்லாம் குடித்தது, கெட்டிக்காரத்தனத்தால் இரகசியமெல்லாம் அறிந்தது; 'வெளிவிடுவது' என்னிடம் புகல்வதாகும்; 'பிறர் நன்மைக்கே' எனிலோ என்னுடைய நலத்தைக் கருதியே என்பது பொருள்.

அதாவது குசுமபுரச் செய்திகளை விளம்ப வந்திருக்கும் நம்முடைய மனிதன் இவன் என்பது நன்றாக அர்த்தமாகிறது. ஆகா! மும்முரமான காரியங்களிலே ஒருப்பட்டிருக்கும் மனம், ஏராளமான ஒற்றர்களை எங்ஙனம் நினைவிலேயே கொள்ள வியலும்? ஆம்; ஞாபகம் வருகிறது; பாம்பாட்டி வேடதாரியான இவன், குசுமபுரத்திலிருந்து வந்திருக்கும் 'விராத குப்த'னாக இருக்கவேண்டும்.

(வெளிப்படையாக) பிரியம்வத! உத்தம கவி இவன்; உள்ளே வரவிடு; சில பாடல்களைக் கேட்போம்!

பிரியம்வதன்: இதோ அனுப்புகிறேன். (பாம்பாட்டியிடம் வந்து) அமைச்சர் அழைக்கிறார்; உள்ளே வாரும்.

பாம்பாட்டி : (உள்ளே வந்து ராக்ஷஸனைப் பார்த்து, தனக்குள்) இதோ இருக்கிறாரே, ராக்ஷஸன்! இவரிடத்திலே தனக்கு ஏற்பட்ட அச்சத்தால் ராஜ்ய லக்ஷ்மி, மௌரியன் கழுத்திலே தன் இடது கையை மட்டும் இலேசாகக் கிடத்தியும், முகத்தைத் திருப்பிக் கொண்டும், அவன் வலுவில் இழுத்துத் தன் கழுத்தில் அணிந்து கொண்டாலும் தனது வலது கையை அங்கே நிறுத்தாமல், நழுவ விட்டும், அவனுடைய மார்பில் தன் வலது ஸ்தனத்தின் நுனியாவது நன்கு பதியும்படி இன்னும் இறுகக் கட்டித் தழுவாமலும் இருக்கிறாள்.

(வெளிப்படையாக) மாட்சியமை யோங்குக! மங்களம் பொங்குக!

ராக்ஷஸன்: (பார்த்து) அட, விராத! (பாதியில் நினைவுக்கு வந்து) பிரியம்வத! நாம் பாம்புகள் ஆடுவதைப் பார்க்க விரும்புகிறோம். நீயும் மற்றையோரும் ஒய்வு பெறுங்கள்! போங்கள்!

பிரியம்வதன்: உத்தரவு! (வேலைக்காரர்களுடன் போகிறான்.)

ராக்ஷஸன்: அன்பா! விராத குப்த! ஆசனத்தில் உட்காரு!

விராத குப்தன்: அமைச்சர் ஆக்ஞை! (உட்காருகிறான்)

ராக்ஷஸன்: (வருத்தத்துடன் உற்று நோக்கி) அந்தோ! நம் காவலனை அண்டினவனுக்கும் இந்த நிலைமையா! (அழுகிறான்)

விராதகுப்தன்: அமைச்ச! கவலைப்படாதீர்கள்! தாங்கள் விரைவில் எங்கள் எல்லோரையும் பழைய நிலையில் வைத்துக் காண்பீர்கள்

ராக்ஷஸன்: நண்பா! குசுமபுரத்தின் செய்தி யாது?

விராதகுப்தன்: அமைச்ச! விஷயம் விரிவானது. ஆகையால், எதிலிருந்து இயம்பத் தொடங்க வேண்டுமென்பதை அறிவியுங்கள்.

ராக்ஷஸன்: விராத! சந்திரகுப்தன் நகர் புகுந்தானல்லவா? அதற்குப் பின்னர், விஷத்தைத் தரும்படி நாம் அனுப்பிய ஒற்றர்கள் என்ன செய்தனர் என்பதிலிருந்து கூறத் தொடங்கு.

விராதகுப்தன்: கேட்டருள்க!

சகர், யவனர், பாஹலீகர், வேடர், காம்போஜர், பாரசீகர் முதலியோர் நிரம்பிய சந்திரகுப்த-பர்வதேசுவரருடைய சேனைகள், சமுத்திரத்தின் பிரளயகாலக் கொந்தளிப்பைப் போன்று குசுமபுரத்தை நாற்புறமும் வளைத்துக்கொண்டன.

ராக்ஷஸன்: (பரபரப்புடன் வாளை உருவி)குசுமபுரத்தையா? முற்றுகையிடுவதா? நான்உயிரோடு இருக்கையிலா? யார் அங்கே? பிரவீரக? பிரவீரக! கிளம்புங்கள்! புறப்படுங்கள்! வில்லாளிகளே! விரைந்துவந்து கோட்டையைச் சூழ்ந்து பாராக் கொடுங்கள்! கோட்டையின் வாயில்களிலே எதிரிகளின் யானைக் கூட்டங்களைப் பிளந்து எறியத்தக்க பெருங்களிறுகள் நிற்கட்டும். புகழை விரும்புவோர் எல்லோரும் மரண பயத்தை உதறித் தள்ளுங்கள். என்னுடன் கிளம்புங்கள். இத்தனையும் இதே கணம் ஆகவேண்டும்.

விராதகுப்தன்: ஐய! பொறுங்கள்! நான் வருணித்தது சென்ற கால விருத்தாந்தம்!

ராக்ஷஸன்: (பெருமூச்செறிந்து)நடந்த சங்கதியா? இப்பொழுது நிகழ்வதோ என நினைத்தோம்.

(கத்தியைத் தூர எறிந்துவிட்டுத் தனக்குள், கண்ணீருடன்) தேவ, நந்த! உமது அன்பு வெள்ளம் இந்த ராக்ஷஸன் நினைவிலே பாய்கிறதே! இத்தகைய தருணங்களிலே நீர் என்ன சொல்வீர்? ‘நீருண்ட மேகம்போலக் கருத்த யானைக்கூட்டங்கள் நிற்கும் இடங்களிலே ராக்ஷஸன் போகட்டும்’ என்பீரே! ‘காலாட் படையை ராக்ஷஸன் கணப்போதில் அழிக்கட்டும்’ என்பீரே! ‘ஜலக் கொந்தளிப்பைப்போல் துள்ளிக் குதித்து வரும் அந்தக் குதிரைப் படையை ராக்ஷஸன் எதிர்த்து நாசமாக்கட்டும்’ என்பீரே! இவ்வாறு என் பேரிலுள்ள வாஞ்சையால், உமக்கு நான் ஒரு ராக்ஷஸனாக அல்ல, ஆயிரம் ராக்ஷஸர்களாகத் தோற்றம் அளித்தேனே!

விராதகுப்தன்: பின்பு, சர்வார்த்த சித்தி, முற்றுகையிடப்பட்ட புஷ்பபுரத்தில் குடிகள் படும் இன்னல்களைக் கண்டு மனம் சகியாதவராய், குடிமக்கள் விருப்பத்திற்கு இணங்கி அம் முதுமைப் பருவத்திலும் சுரங்கவழியாகக் காட்டுக்குள் ஓடிவிட்டார். உடனே, தலைவன் இல்லாத தங்கள் சேனை ஒற்றுமையிழந்து தாறுமாறாகச் சிதறிவிட்டது. தாங்களும் எவ்வாறாயினும் நந்த ராஜ்யத்தை மறுபடியும்

உயிர்ப்பிக்க நினைத்து சுரங்கத்துக்குள் இருந்தவாறே மௌரியனுடைய ஜய கோஷங்களை அடக்க வல்ல கிளர்ச்சிகளைச் செய்வித்து வந்தீர்கள். அதனால், தாங்கள் நகரத்தில் இருந்தது பகைவருக்கு ஒருவாறு தெரிந்து தான் இருந்தது. சந்திரகுப்தனைச் சங்கரிப்பதற்காகத் தாங்கள் அனுப்பிய, 'நச்சுக்கன்னி'யால், பாவம், அந்தப் பர்வதேசுவரன்தான் மாண்டான்.

ராக்ஷஸன்: விராத! ஓர் ஆச்சரியம் பார்! ஒருவனை மட்டும் ஒழிக்கக் கூடிய'சக்தி'என்னும் ஆயுதத்தை, அர்ச்சுனனை அழிப்பதற்கென்றே கர்ணன் காப்பாற்றி வந்தான்;

அவ்வண்ணமே நானும், சந்திரகுப்தனை வதைப்பதற்கென்றே விஷ கன்னிகையை விரும்பிக் காத்தேன்.

ஆனால், அந்தச் 'சக்தி' எங்ஙனம் விஷ்ணுவின் இலக்கான கடோற்கசனைக் கொன்று கிருஷ்ணனுக்கே நலம் இழைத்ததோ அவ்வாறே நச்சுக் கன்னியும் சாணக்கியனுக்கு நன்மை யளிக்க, அவனால் அழிய வேண்டிய பர்வதேசுவரனைத் தானே கொன்றுவிட்டது.

விராதகுப்தன்: ஆம், அமைச்ச! அதிர்ஷ்டத்தின் போக்கு அவ்வாறு; நாம் என்ன செய்வது?

ராக்ஷஸன்: உம்; அப்புறம்?

விராதகுப்தன் பின்னர், தந்தை கொல்லப்பட்ட அச்சத்தால், அவன் மகன் மலயகேது நாட்டைவிட்டு ஓடிவிட்டான். பிறகு, சாணக்கியன், பர்வதகனுடைய சகோதரனான வைரோசகனுக்கு நம்பிக்கையூட்டி அவனைத் தன் வசத்திலே வைத்துக்கொண்டான். "நந்தனது அரண்மனையிலே சந்திரகுப்தன் பிரவேசிக்கப் போகிறான்" என்று எங்கும் பறைசாற்றப்பட்டது. கொடிய சாணக்கியன் குசுமபுரத்திலுள்ள சிற்பிகள் எல்லோரையும் வரவழைத்தான். சோதிடர் வாக்கின்படி அன்று நள்ளிரவிலே சந்திரகுப்தன் அரண்மனைப் பிரவேசம் செய்யப் போவதாக அவர்களுக்குத் தெரிவித்தான். அதற்காக, அரண்மனையின் முன் வாயிலிலிருந்து கடைசிப் பரியந்தம் எல்லாப் பகுதிகளும் சிறப்புற அலங்கரிக்கப்பட வேண்டுமென்று கூறினான்.

அதற்கு அந்தச் சிற்பிகள், "ஐய! மன்னரின் மாளிகைப் பிரவேசத்தைப்பற்றி முன்னமே கேள்வியுற்றோம்; ஆதலின், சிற்பி தாருவர்மாவைக்கொண்டு முதற் கோட்டையின் முன்வாயிலைச் செம்பொன் தோரணங்களால் செவ்வனே அலங்கரித்திருக்கிறோம்; இனி உட்புறம் எங்கும் அலங்காரம் செய்யவேண்டும்" என்றனர். தான் கட்டளையிடாதிருக்கையில் தாருவர்மாவுக்கு என்ன அக்கறை எனக் கருதிய சாணக்கியன், தாருவர்மாவின் சிற்பத் திறனை வெகுநேரம் புகழ்ந்து பேசினான்; பிறகு சந்தோஷத்துடன் தாருவர்மாவை நோக்கி, "தாருவர்மா! நீ புரிந்துள்ள அருஞ் செயலுக்காக விரைவிலே உரிய பயன் பெறுவாய்" என்றான்.

ராக்ஷஸன்: (ஆவேசத்துடன்) சாணக்கியனுக்குச் சந்தோஷமா? சரி; தாருவர்மாவின் முயற்சி பயனற்றதாகும்; அல்லது தீமையில் முடியும். ஏனெனில், அறியாமையாலோ, அல்லது ராஜபக்தியாலோ தாரு

வர்மா சந்தர்ப்பத்தை எண்ணிப் பாராது, சாணக்கியன் மனத்திலே பாரமான ஐயத்தைப் புகுத்திவிட்டான். மேலே?

விராதகுப்தன்: தீய சாணக்கியன் குடிமக்களுக்கும் சிற்பிகளுக்கும், "இன்று நடுநிசியில் முகூர்த்தம் கூடுகிறது; அவ்வமயம் அரசர் அரண் மனைக்கு எழுந்து அருள்வார்" என்று கூறினான். பிறகு, பர்வதராஜனின் சகோதரனான வைரோசகனை உடனே அழைத்து வந்து, சந்திரகுப்த னுடன் ஒரே ஆசனத்தில் உட்காரவைத்து, அரசை அவ்விருவருக்கும் சரிசமமாகப் பாகம் பகிர்ந்துவிட்டான்.

ராக்ஷஸன்: தான் முன்பு அளித்துள்ள வாக்குறுதியை நிறை வேற்றுவதற்காக இந்தப் பாதி அரசு கொடுக்கப்பட்டதென அவன் கூறவில்லையா?

விராதகுப்தன்: ஆம்; கூறினன்.

ராக்ஷஸன்: (தனக்குள்) ஆழ்ந்து நோக்குங்கால் அவன் சூழ்ச்சி தெள்ளெனத் தெரிகிறது; அற்பப் புழுவான வைரோசகனை அப்புறம் எவ்வகையிலேனும் இரகசியமாய் ஒழித்து விடலாமென்னும் எண்ணத் துடன், தனக்குப் பர்வதகன் கொலையுண்டதால் ஏற்பட்ட நிந்தனை யைப் போக்கிக் கொள்வதற்காக, சாணக்கியன் பயன்படுத்திக் கொண்ட விளம்பரமே இது.

(வெளிப்படையாக) பின்பு?

விராதகுப்தன்: 'சந்திரகுப்தன் அரண்மனையில் பிரவேசிக்கப் போவது அர்த்தராத்திரியில்' என்னும் செய்தியை ஒவ்வொருவர் செவிக் கும் எட்டச் செய்தான் சாணக்கியன். பிறகு அவன் வைரோசகனுக்கு அபிஷேகம் செய்வித்து அவன் தேக முழுவதையும் வெண்முத்து மாலை களாலும், மலர் மாலைகளாலும் கவசம் இட்டதுபோல் அலங்கரித்தான். மேலும், ஒளி வீசும் மணிமுடியை அவன் தலையில் சூட்டி, எப் பொழுதும் அவனுடன் நெருங்கிப் பழகினவர்களும் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி சந்திரகுப்தனைப் போலவே உருமாற்றி விட்டான்.

அதற்குப்பின் சந்திரகுப்தன் ஒருவன் மட்டும் ஏறும் பெண் யானை யின் பேரில் வைரோசகனை ஆரோகணிக்கச் செய்து, மன்னர் யாவரை யும் பின்தொடரச் சொல்லி அவசரமாக அரண்மனையிலே புகச் செய்தான்.

தங்களுடைய முன்னேற்பாட்டின்படி அங்கே காத்திருந்த தாரு வர்மா, வைரோசகனை நோக்கி, 'இவனே சந்திரகுப்தன்' என எண்ணி னான்; உடனே இயந்திர கோபுரத்தை அவன் மீது வீழ்த்துவதற்குத் தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டான். இதற்குள் அரசனைப் பின் தொடர்ந்து வந்த சிற்றரசர் யாவரும் தத்தம் வாகனங்களுடன் வெளியே நின்றனர். அதே சமயம் தங்கள் யானைப் பாகனான பர்பரகன் தங்கச் சங்கிலியின் நுனியில் தொங்குகிற சொர்ணத் தடிக்குள் வைத் திருக்கும் கை வாளை எடுக்க எண்ணி அதனைப் பற்றினான்.

ராக்ஷஸன்: ஹும்; இருவருடைய முயற்சியும் அசந்தர்ப்பமா னது. சரி; மேலே?

விராதகுப்தன்: உடனே பின்புறத் தாக்குதலை எதிர்பார்த்த பெண்யானை தன் நடையைத் திடீரென மாற்றிக்கொண்டது. ஆனால், இயந்திர கோபுரமோ யானையின் முதல் நடையைக் குறிவைத்துத் தாரு வர்மாவால் விடப்பட்டது. ஆகவே அந்தக் கோபுரம் இலக்குத் தவறி, சந்திரகுப்தன் என்றெண்ணி வைரோசகனை வதைக்க வாளேந்திப் பின்தங்கிப்போன 'பர்பரகன்' தலைமேல் விழுந்து அவனை மாய்த்தது.

தாருவர்மா, தன் கொடுஞ் செயலுக்காக எப்படியும் தான் கொல்லப்படுவது நிச்சயம் என்றுணர்ந்தான்; அதற்குள் எவ்வாறேனும் தான் எடுத்த கருமத்தை முடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான். உடனே இயந்திர கோபுரத்தின் மேற்றளத்தில் விரைந்து ஏறினான்; அங்கிருந்த மூலக் கருவியான இருப்புச் சட்டத்தைக் கையில் எடுத்தான். அப்பொழுதும் வைரோசகனைச் சந்திரகுப்தனே என்றெண்ணி அந்த இருட்புச் சட்டத்தால் அவனை அடித்துக் கொன்றான்.

ராக்ஷஸன்: அந்தோ! இரண்டும் அனர்த்தங்கள். கஷ்டத்தின் இரட்டிப்போ! சந்திரகுப்தன் சாகவில்லை; விதி, பர்பரகனையும் வைரோசகனையும் பாழாக்கியது.

(மனத்தில் வேதனையுடன்) மடிந்தவர் அவ்விருவரும் அல்லர்; யாமே!

(வெளிப்படையாக) சரி; பின்பு தாருவர்மா என்ன ஆயினன்?

விராதகுப்தன்: வைரோசகனுக்கு முன்னே சென்ற காலாட் படையால், கற்களால் அறையப்பட்டு ஆவி நீத்தான்.

ராக்ஷஸன்: (கண்ணீர் மல்கி) அந்தோ! காலமே! கஷ்டத்தின் சிகரமே! நட்பு மிகுந்த தாருவர்மனைப் பறிகொடுத்தோம்; சரி, அங்கிருந்த வைத்தியனான அபயதத்தனின் செய்தி என்ன?

விராதகுப்தன்: முடிவுதான்!

ராக்ஷஸன்: (களி கூர்ந்து) மிகவும் சரி, மாண்டானா சந்திரகுப்தன்?

விராதகுப்தன்: இல்லை; அதிர்ஷ்டம் அவனை அழியவிடாது காத்தது.

ராக்ஷஸன்: (வருத்தத்துடன்) பின் என்ன நீ கூறிய 'முடிவு'?

விராதகுப்தன்: அமைச்ச! அபயதத்தன் விஷப்பொடி கலந்த கொடிய மருந்தைச் சந்திரகுப்தனுக்காகத் தயாரித்தான்; அதனைத் தங்கக் கோப்பையில் ஊற்றினான். அப்பொழுது அந்த ஔடதம் வேறு நிறம் அடைந்தது. அதனைச் சாணக்கியன் கண்டு கொண்டான். உடனே சந்திரகுப்தனை நோக்கி, ''அரச! இந்தப் பானம் விஷங் கலந்தது; பருகாதே'' எனக் கட்டளையிட்டான்.

ராக்ஷஸன்: படுபாவி சாணக்கியன் கண்டுகொண்டானா? அந்த வைத்தியன் கதி யாதாகியது?

விராதகுப்தன்: அந்த விஷத்தைத் தானே அருந்திச் சாக நேரிட்டது.

ராக்ஷஸன்: (துயரத்துடன்) ஆகா! ரஸாயனப் பெருமலை யன்றோ மறைந்தது? என்ன கொடுமை! உம்; சயன அறையில் சதி செய்ய

ஏவப்பட்ட 'பிரமோதகன்' சங்கதி என்ன?

விராதகுப்தன்: ஆத்ம நாசமே!

ராக்ஷஸன்: (ஆவேசத்துடன்) ஏன்?

விராதகுப்தன்: அவன் மூடன்; தாங்கள் அவனுக்குப் பெருந் திரவியம் கொடுத்ததும், அதைத் தலை கால் தெரியாமல் செலவு செய்யத் தொடங்கினான். வறியவனாக இருந்தவனுக்கு இவ்வளவு பொருள் எவ்வாறு கிடைத்தது என்னும் ஐயத்தின் பேரில் விசாரிக்கப்பட்டான்; அப்போது முன்னொன்று பின்னொன்றாக உளறிக்கொட்டி, சாணக்கியனால் சித்திரவதை செய்யப்பட்டான்.

ராக்ஷஸன்: (கோபமாக) இவ்விடத்திலும் தெய்வம் நம்மையே அடித்ததே! போகட்டும்; சந்திரகுப்தனைச் சயனத்திலேயே சிதைக்குமாறு நம்மால் அனுப்பப்பட்டுப் படுக்கை யறையின் கீழே சுரங்கத்தில் பதுங்கி வந்த 'பீபத்ஸகன்' முதலியோர் என்ன செய்தனர்?

விராதகுப்தன்: தலைவ! அந்தச் செய்தியும் கொடியதே!

ராக்ஷஸன்: ஆ! எப்படி? அவர்கள் அங்கிருந்ததைச் சாணக்கியன் தெரிந்து கொள்ளவில்லையே?

விராதகுப்தன்: அவனுக்குத் தெரிந்து விட்டது!

ராக்ஷஸன்: எங்ஙனம்?

விராதகுப்தன்: அந்தக் கொடியன், சந்திரகுப்தன் கால் வைப்பதற்கு முன்பாகத்தான் உள்ளே நுழைந்தான்; உடனே சயன அறையில் நாற்புறமும் கூர்ந்து நோக்கினான். ஒரு பக்கத்துச் சுவரில் ஓரிடத்தில் ஒரு சிறிய துவாரம் இருந்தது; அதிலிருந்து சோற்றுப் பருக்கைகளை வாயில் பற்றிய வண்ணம் எறும்புக் கூட்டங்கள் வரிசை வரிசையாக வந்துகொண்டிருந்தன. இதனால் அவன் அறையின் அடிப்பாகத்தில் தின்பண்டங்களுடன் ஆட்கள் ஒளிந்திருக்க வேண்டும் என்று உடனே ஊகித்துக் கொண்டான். அவ்வளவுதான்! அக்கணமே அந்தப் பள்ளியறைக்குக் கொள்ளியிட்டான்; எரித்தான். புகை சூழ்ந்ததால் பீபத்ஸகன் முதலியோருக்குத் தாம் மூடிய வழி தெரியவில்லை. அதனால் அவர்கள் வெளியே வரமுடியாமல் அங்கேயே சாம்பராயினர்.

ராக்ஷஸன்: (கண்ணீர் விட்டு) தோழ! நமக்கு அழிவும் சந்திரகுப்தனுக்கு அதிர்ஷ்டமுமா? (சிந்தித்து) மௌரியனுடைய நற்காலத்தைப் பார்த்தனையா? அவனை அழிக்கும்படி நாம் ஏவிய நச்சுக் கன்னி, அவனது அரசுக்குப் பங்காளியாக வந்த பர்வதகனை அறைந்தது; இயந்திரங்களும், மருந்துகளும் எதிரியைக் கொல்லாமல் பிரயோகம் செய்தவர்களையே பரலோகத்துக்கு அனுப்பிவிட்டன. நம் சூழ்ச்சிகள் அனைத்தும் சந்திரகுப்தனுக்கே சகாயமாக அமைகின்றன, பார்!

விராதகுப்தன்: அமைச்ச! ஆயினும் தொடர்ந்த கருமத்தை இடையிலே விடலாகாது. எத்தனை இடையூறுகள் வரினும், அனைத்தையும் கடந்துசென்று காரியத்தை முடிப்பதே உத்தமர்க்கு உரிய லட்சணம். விக்கினங்களைக் கண்டு அஞ்சி எடுத்த செயலை மத்தியிலே விடு

வோர் மத்திமர் ஆவர். அதமர்களைப்பற்றி அதிகம் சொல்லத் தேவை யில்லை. ''தொழில் என்று தொடங்கினால் தொல்லை யில்லாமல் இராது'' என்பது அன்னோர் சித்தாந்தம்; ஆதலின் அவர்கள் எந்தக் கருமத்தி லும் இறங்கவே மாட்டார்கள். ஆராயுங்கால், ஆதிசேஷனைவிடப் பாரத்தைச் சுமப்போர் யாரேனும் உண்டா? அவன், பளுவுக்குப் பயந்து, பூமியைக் கீழே தள்ளிவிடுகிறானா? சூரியனைப் பாருங்கள்! ஒரு நொடியாவது அவனுக்கு ஓய்விருக்கிறதா? அதற்காகச் சலித்துப் போய்க் கதிர்களைப் பரப்பாமல் அவன் களைத்துப் போகிறானா? ஏற்றுக் கொண்ட பணியை அற்பனைப்போல இடையிலே விடுதற்குப் பெரி யோர் வெட்குவர். எடுத்த கருமங்களை எவ்வாறாயினும் முடித்துவிடு வதேயாம், மேன்மக்கள் விரதம்.

ராக்ஷஸன்: நண்ப, நாம் முன்வைத்த காலைப் பின்னுக்கு இழுக்க வில்லை யென நீ கண்ணாரக் காண்கிறாயன்றோ? மேலே சொல்.

விராதகுப்தன்: அது முதல் சாணக்கியன் சந்திரகுப்தனது உடல் நலத்திலே தன் முழுக் கவனத்தையும் செலுத்தலாயினன். நந்த மந்திரி களின் நண்பர்கள் ஒவ்வொருவராலும் எவ்வெவ் வகையான தீமைகள் விளையும் என்பதை ஆராய்ந்து அறிந்தான். உடனே அவர்கள் எல் லோரையும் தண்டித்துவிட்டான்.

ராக்ஷஸன்: (ஆத்திரத்துடன்) தண்டனையா? யார் யாருக்கு?

விராதகுப்தன்: முதல் சிட்சை ஜீவசித்திக்கு விதிக்கப்பட்டது. சாணக்கியன் அந்த புத்த பிக்ஷுவை அவமானப்படுத்தி நகரத்தை விட்டுத் துரத்திவிட்டான்.

ராக்ஷஸன்: (தனக்குள்) இதனால் ஒன்றும் முழுகிப்போகவில்லை; ஆண்டியை ஊரைவிட்டு ஓட்டுவதால் அவனுக்குக் குறைவொன்றும் நேராது.

(வெளிப்படையாக) நேசா! எந்தக் குற்றத்துக்காக அவன் வெளி யேற்றப்பட்டான்?

விராதகுப்தன்: ஐயா! தாங்கள் அனுப்பிய நச்சுக் கன்னியை அவன் பர்வதேசுவரன்மேல் ஏவினான் என்பது அவன்மீது சுமந்த குற்றம்.

ராக்ஷஸன்: (தனக்குள்) நன்று; நன்று, கௌடில்ய! உனக்கு உரிமையான அபக்கியாதியை நமக்குச் சூட்டினை! அரசில் பாதியை அடையவேண்டிய பங்காளியை நமன் ஊர்க்கு அனுப்பினை! ஆகா! நீ ஊன்றும் தந்திர விதை ஒவ்வொன்றும் பலவாறு பயனளிக்கும் பண்பு மிக்கது.

(வெளிப்படையாக) பிறகு?

விராதகுப்தன்: பிறகு, ''தாருவர்மா, சந்திரகுப்தனைக் கொல்ல முயன்றது சகடதாஸன் தூண்டுதலால்'' என்னும் வதந்தியை நக ரெங்கும் பரவச்செய்தான். அதற்காகச் சகடதாஸனைச் சூலத்தில் ஏற்றுவித்தான் சாணக்கியன்.

ராக்ஷஸன்: (கண்ணீருடன்) ஆ! சகட தாஸ! உயிர்த்தோழ! உனக்கும் இத்தகைய துர்மரணமா? இது நேரத்தகாதது.... அன்று; தலைவனுக்காக உயிரைப் பறிகொடுத்த நின்பொருட்டு நாம் துயருறுதல் ஏற்றதன்று. நந்த வம்சமே நசுங்கிப்போயும், அதற்கப்புறமும் உயிரைச் சுமந்திருக்க விரும்பும் நம்மைப்பற்றியே நாம் துக்கித்தல் வேண்டும்.

விராதகுப்தன்: ஐய! தங்கள் முயற்சியெல்லாம் தலைவரின் பொருட்டேயாகும்.

ராக்ஷஸன்: ஆம்; உண்மையே! அன்ப! தலைவர்க்காக நம் கடமையை இயற்றவே நாம் உயிர் வாழ்கின்றோம். கூறு; இன்னும் யார் யாருக்கு என்னென்ன சம்பவித்தன? நேயருக்கு உற்ற தீமைகள் எத்தனையாயினும் கேட்பதற்குச் சித்தமாயிருக்கிறோம்.

விராதகுப்தன்: பின்னர், இவற்றை யெல்லாம் சந்தனதாஸன் அறிந்து, உடனே தங்கள் மனைவி மக்களை மறைத்து வைத்துவிட்டான்.

ராக்ஷஸன்: அதனால் அவனுக்குக் கொடிய சாணக்கியனுடன் பகைமை ஏற்பட்டதா?

விராதகுப்தன்: அமைச்ச! உயிர்த்தோழனுக்குத் துரோக மியற்றல் அந்தப் பகையைவிடப் பெரிதன்றோ?

ராக்ஷஸன்: உம்; சொல்.

விராத குப்தன்: சாணக்கியன், சந்தனதாஸனை நயமாகவும் பயமுறுத்தியும் பலவாறு கேட்டுப் பார்த்தும் சந்தனதாஸன் தங்கள் மனைவி மக்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதனால் சாணக்கியன் பெருஞ் சினங்கொண்டு....

ராக்ஷஸன்: ஆ! சந்தனதாஸனைக் கொல்லவில்லையே?

விராதகுப்தன்: இல்லை; சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவனைக் குடும்பத்துடன் கொண்டு நிறுத்தித் தளை பூட்டிச் சிறையில் அடைத்தான்.

ராக்ஷஸன்: அப்படியாயின் ராக்ஷஸன் மனைவி மறைக்கப்பட்டாள் என்று நீ கூறியது முற்றிலும் தவறு. "உண்மையில் ராக்ஷஸனும் அவன் மனைவியும் மக்களுமே கட்டுண்டு காவலில் கிடக்கிறார்கள்" என்று நீ சொல்லி இருக்க வேண்டும்.

(திரையை நீக்கிக்கொண்டு ஒருவன் பிரவேசிக்கிறான்.)

வந்தவன்: ஆரியர்க்கு வெற்றி யோங்குக! ஐய! வாயிலிற் சகடதாஸன் வந்து நிற்கிறான்.

ராக்ஷஸன்: பிரியம்வத! உண்மையாகவா?

பிரியம்வதன்: தலைவ! தங்களைச் சார்ந்தோருக்குத் தவறியேனும் பொய் வருமா?

ராக்ஷஸன்: ஆனால் தாமதம் ஏன்? அவனை உள்ளே அனுப்பு!

பிரியம்வதன்: அங்ஙனமே! (போகிறான்)

(சகடதாஸனுடன் சித்தார்த்தகன் பிரவேசிக்கிறான்)

சகடதாஸன்: (பார்த்து, தனக்குள்) ஆரம்ப அதிர்ச்சியாலேயே எனதுள்ளம் உரம் பெற்றுவிட்டது; அது மௌரியனைப் பதவியிலே நிலைநிறுத்தியதேபோல் பூமியில் நாட்டியுள்ள சூலத்தைக் கண்டும் சிறிதும் தளரவில்லை. நமது உணர்ச்சியை உருக்குலைக்கும் அவனுடைய சாம்ராஜ்ய லக்ஷ்மியைப் போன்றதான செவ்வண்ண மாலையை என் கழுத்தில் போட்டதைக் கண்டும் இந்த நெஞ்சம் கொஞ்சமும் கலங்கவில்லை. நம் முடி மன்னர்கள் அழிவுற்ற செய்தியை அறிவிப்பதேபோல் வெற்றியொலிபரப்பும் பேரிகைகளின் முழக்கங்களைக் கேட்டும் இந்த மனம் சற்றும் சளைக்கவில்லை.

(சந்தோஷத்துடன் பார்த்து) இதோ! ராக்ஷஸன்! நந்தர் இறந்த பின்பும் சிறிதும் பக்தி குன்றாமல் அவர்கள் பொறுப்பை ஏற்று நடத்தும் அமைச்சர்! ராஜ பக்த சிகாமணிகளின் முதற் பீடத்துக்கு உதாரணமாக விளங்கும் உத்தம புருஷர்! இங்கே இருக்கிறார்.

(அருகிற் சென்று) வெற்றி யோங்குக!

ராக்ஷஸன்: (திரும்பிப் பார்த்து மகிழ்ச்சி மேலிட்டு) சகடதாஸ! நண்ப! கௌடில்யன் கையில் சிக்கிய பின்பும், நமது கண்களுக்குக் களிப்பூட்ட வந்து விட்டாயா? வா! என்னை அன்புறத் தழுவிக்கொள்!

சகடதாஸன்: (ராக்ஷஸனைத் தழுவிக்கொள்கிறான்)

ராக்ஷஸன்: இந்தா ஆசனம்! ஏற்றுக்கொள்! (சகடதாஸன் உட்கார்ந்த பின்பு) சகடதாஸ! எதிர்பாராத இந்தப் பேரானந்தம் எனக்கு எப்படிக் கிடைத்தது?

சகடதாஸன்: (சித்தார்த்தகனைக் காட்டி) இந்தப் பேரருளாளனால்! இந்தப் புண்ணிய புருஷன் கொலையாளிகளை விரட்டி யடித்து என்னைக் கொலைக்களத்தினின்றும் இரகசியமாக மீட்டுக் கொண்டு வந்து சேர்த்தார்.

ராக்ஷஸன்: (களிப்புடன்) அன்ப! சித்தார்த்தகா! உன் பேருதவிக்கு எத்தகைய கைம்மாறு செய்தால்தான் ஈடாகும்? இருப்பினும் என் அன்புக்காக அற்பமாயினும் இதனை ஏற்றுக் கொள்.

(தன் சரீரத்திலிருந்த ஆபரணங்களைக் கழற்றித் தருகிறான்)

சித்தார்த்தகன்: (பெற்றுக்கொண்டு, தாள் வணங்கி, (தனக்குள்) ஆர்யர் ஆக்ஞைப்படி இதுவும் நிறைவேறியது.

(வெளிப்படையாக) மந்திரி முதல்வ! யான் இவ்வூருக்குப் புதியவன்; தெரியாத இடத்திலே இந்த ஆபரணங்களை எங்கே கொண்டு போய் வைத்திருக்க முடியும்? ஆதலால், என்னுடைய சொத்து என்பதற்கு அடையாளமாக இந்த நகைகளின் பேரில் இம் மோதிரத்தால் முத்திரையிட்டுத் தங்கள் பொக்கிஷத்திலேயே வைத்திருக்கலாமென நினைக்கிறேன். மறுபடியும், தேவை வரும்போது பெற்றுக்கொள்ளுகிறேன்.

ராக்ஷஸன்: நன்று, சகடதாஸ! தவறு என்ன இதில்? அப்படியே செய்!

சகடதாஸன்: (முத்திரையை வாங்கிப் பார்த்துத் தனிமையில்)

அமைச்ச! தங்கள் பெயருள்ள முத்திரை இது!

ராக்ஷஸன்: (பார்த்து ஐயமும் வருத்தமும் தோன்ற, தனக்குள்) நான் நாட்டைவிட்டு வெளியேறினபோது என் தர்ம பத்தினி, என் பிரிவாற்ருது வருந்திஞள். என் பெயர் பதிக்கப்பெற்ற இந்தக் கணை யாழியை அடிக்கடி பார்த்தேனும் ஆறுதல் அடையலாமென எண்ணி இதனைக் கேட்டு என்னிடமிருந்து வாங்கிக் கொண்டாள். ஆதலின், இது இவன் கைக்கு எப்படி வந்தது? (வெளிப்படையாக) சித்தார்த்தக! இந்தக் கணையாழி உனக்கு ஏது?

சித்தார்த்தகன்: அமைச்சர் பெருமானே! இதனைக் குசுமபுரத் திலே 'சந்தனதாஸன்' என்னும் இரத்தின வியாபாரியின் வீட்டு வாயிலிற் கண்டெடுத்தேன்.

ராக்ஷஸன்: நியாயமே!

சித்தார்த்தகன்: இதில் நியாய மென்ன?

ராக்ஷஸன்: தனவான்களுடைய வீட்டு வாயிலில் இவ்வாறு கிடைப்பது சகஜமே!

சகடதாஸன்: சித்தார்த்தக! அமைச்சர் பெயர் இதில் அமைந் திருக்கிறது. ஆதலின், இதனை அவரிடமே கொடுத்துவிடு. இதற்கு ஈடாக உனக்கு ஏராளமான பொருள் கிடைக்கும்.

சித்தார்த்தகன்: ஐயா! அமைச்சர் இதை ஏற்றுக்கொள்வதே என் பெரும் பாக்கியம் அன்ருே? (மோதிரத்தைக் கொடுக்கிருன்)

ராக்ஷஸன்: சகடதாஸ! இனிமேல் நீ செய்யும் காரியங்கள் அனைத்தையும் இந்த முத்திரையைக் கொண்டே இயற்றல் வேண்டும்.

சகடதாஸன்: கட்டளை!

சித்தார்த்தகன்: ஒரு விஷயம்!

ராக்ஷஸன்: யாது? தைரியமாகச் சொல்!

சித்தார்த்தகன்: ஏற்கெனவே தேவரீர் அறிந்ததுதான்; அந்தக் கொடும் பாவி சாணக்கியனுக்குத் தீங்கிழைத்த பின்னர், அடியேன் பாடலீபுரத்தில் கால் வைக்கமுடியாது. ஆதலால், தேவரீருடைய பேரருளுக்குப் பாத்திரமாகி இங்கேயே தங்கள் திருவடித் தொண்டு செய்துகொண்டு இருந்துவிடலாமென்று கருதுகிறேன்.

ராக்ஷஸன்: சித்தார்த்தக! நம் எண்ணத்தையே நீ உரைத்தனை; உன் உள்ளம் தெரிந்தபின்பு நாமும் இதனையே உரைக்கக் காத்திருந் தோம். அவ்வண்ணமே செய்.

சித்தார்த்தகன்: உய்ந்தேன்.

ராக்ஷஸன்: சகடதாஸ! இவனை அழைத்துப்போய் இளைப்பாறச் செய்!

சகடதாஸன்: அங்ஙனமே! (சித்தார்த்தகனுடன் போகிருன்)

ராக்ஷஸன்: விராதகுப்த! புஷ்பபுரத்தைப்பற்றிய மற்ற விஷயங் களையும் விளம்பு. குசுமபுரத்திலுள்ள மௌரிய மக்களிடையே நாம் புரியும் மித்திர பேதங்கள் பயன் அளிக்கின்றனவா?

விராதகுப்தன்: தடையின்றி! தோட்டி முதல் தொண்டைமான் வரையில் பேத வழியைப் பின்பற்றுகிறார்கள்.

ராக்ஷஸன்: காரணம்?

விராதகுப்தன்: அதுதான்! மலயகேது விலகிவிட்டதால், சந்திர குப்தன் சாணக்கியனுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்கிறான்; சாணக்கியனோ பரம ஜயசீலன்; ஆதலால் சந்திரகுப்தனுடைய கட்டளைக்குப் பங்கம் விளைவித்துவருகிறான். அதனால் அரசனுக்கு அடிக்கடி மனவருத்தம் உண்டாகிறது. இது என் சொந்த அனுபவம்.

ராக்ஷஸன்: (சந்தோஷத்துடன்) விராதகுப்த! நீ இதே பாம்புப் பிடாரன் வேடத்தில் மறுபடியும் குசுமபுரத்துக்குப் போ! ஆங்கு நமது நண்பன் ஸ்தன கலசன் இருக்கிறான். அவ்விடத்தில் அவன் கருத்தைப் பறிக்கும் கவி பாடி வருகிறான். நீ அவனைக் கண்டு, சாணக்கியன் அரசனது ஆணையை மீறும்போதெல்லாம் மன்னன் மனத்திலே சாணக்கியன்மீது ஆத்திரம் பொங்கி எழும்படிக் கீதங்களைப் பாடச்சொல். மேலும், கரபகன் மூலமாக உடனுக்குடன் ரகசியச் செய்திகளை நமக்கு அனுப்பவேண்டும் என்று தெரிவி.

விராதகுப்தன்: உத்தரவு! (போகிறான்)

ஒருவன்: (பிரவேசித்து) அமைச்சருக்கு மங்களங்கள்! இந்த மூன்று ஆபரணங்கள் விலைக்கு வந்திருக்கின்றனவாம்; சகடதாஸன் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறார்.

ராக்ஷ: (ஆபரணங்களைப் பார்த்து, தனக்குள்) ஆகா! விலை மிக்கவை!

(வெளிப்படையாக) சகடதாஸனிடம் "இந்த ஆபரணங்களை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம்" என்று சொல்.

வந்தவன்: நல்லது. (போகிறான்)

ராக்ஷ: (தனக்குள்) நானும் கரபகனைக் குசுமபுரத்துக்கு அனுப்புகிறேன்.

(எழுந்து நின்று) கெடுமதி படைத்த சாணக்கியனிடமிருந்து சந்திரகுப்தன் பிரிந்துவிடுவானா? ஆம்; இனி நம்மெண்ணம் நிறைவேறியது போலவே! ஏனெனில், அரசரெல்லாம் அடி பணியும் பதவியிலிருக்கிறான் சந்திரகுப்தன்; அந்தப் பதவி தான் அளித்த பிச்சை என்னும் இறுமாப்போடு விளங்குகிறான் சாணக்கியன். ஆதலால், மன்னர் மன்னனாக மன நிம்மதியுடன் இருக்கும் ஒருவனையும், சபதக் கடலைக் கடந்து செருக்குற்றிருக்கும் மற்றொருவனையும் அவர்களுடைய சுய மனப்பான்மையே உட்புகுந்து நட்பினின்றும் பிரித்து வேறாக்கிவிடும். இதில் ஐயமே இல்லை. நிச்சயம்!

இரண்டாம் அங்கம் முற்றிற்று

# மூன்றும் அங்கம்

(கஞ்சுகி பிரவேசிக்கிறுன்)

கஞ்சுகி: அந்தோ! பேராசைப் பெரும் பேயே! இந்திரியங்களேப் பயன்படுத்தி இரஸாதிகளே அனுபவித்து வந்தாயே; அந்த இந்திரியங்களின் அரிய வன்மை இப்பொழுது எங்கே போயின? அவை ஏன் கிழப் பருவம் அடைந்துவிட்டன? என் கட்டளேயைத் தாங்கிக் கருமமியற்றி வந்த அவயவங்கள் இப்போது ஏன் சுய சக்தியை இழந்து வருகின்றன? ஆகவே, என் விருத்தாப்பியம் உன் சிரசில்தானே காலே வைத்து அழுத்தியது? இருந்தும், உன் அகந்தை மட்டும் இன்னும் அழியாதது ஏன்?

(சிறிது நடந்து வானே நோக்கி)

'சுகாங்க மாளிகை'யின் அதிகாரிகளே! அரசர் விடுத்திருக்கும் கட்டளேயைக் கேளுங்கள்!

அது: "குசுமபுரம் குதூகலத்திலே மிதக்கும்படி நகரமெங்கும் அழகைப் பரப்பிச் சந்திரிகை விழாவை எல்லோரும் கொண்டாடி நடத்தி இன்புறவேண்டும்" என்பது.

ஆகையால், விரைந்து எழுங்கள்; சுகாங்க மாளிகையின் மேற்றளத்தைத் 'தேவ பவனம்' போல் அலங்கரிக்கத்தொடங்குங்கள். காரியத்தில் கண்ணு யிருங்கள்; வீண் பொழுது போக்காதீர்கள்.

(செவி சாய்த்து) நீங்கள் கூறுவது என்ன? சந்திரிகை விழா அந்தரத்தில் தொங்குகிறது என்ரு? மேலும், இடையூறு வந்திருப்பதை அரசர் அறியாரா என்று கேட்கிறீர்களா? காலனேக் காண விரும்புவோர்களே! உயிர் உங்களுக்கு லட்சியம் இல்லேயா? வீண் விவாதம் எதற்காக? உடனே புறப்படுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியவை என்ன என்ன தெரியுமா? தூபம் போட்ட தூண்களுக் கெல்லாம் மலர் மாலேகளேச் சுற்றி, சந்திரகாந்திக்கு ஒப்பான சாமரங்களேச் செருகிச் சிங்காரியுங்கள். சிங்கத்தினிடம் அகப்பட்டதால் மூர்ச்சையுற்றிருக்கும் பசுவைப் போல் சிங்காசனத்தை வெகு காலமாகச் சுமந்த வருத்தத்தால் களேத்துப்போயிருக்கும் தரையைச் சந்தனக் குழம்பால் நன்ருக மெழுகி மேலெங்கும் புஷ்பம் தெளியுங்கள்.

(ஆகாயத்தைப் பார்த்து)

என்ன சொல்லுகிறீர்கள்! 'இதோ தொடங்கிவிட்டோம்' என்ரு; நல்லது; காலத்தை வார்த்தையிலே கழிக்காமல் காரியத்தில் கழியுங்கள். ஆ! இதோ, அரசர் பெருமானே வந்துவிட்டாரே!

இவர் தமது வன்மை மிக்க அங்கங்களால், கரடு முரடான வழிகளிலும் சிறிதும் இடராமல் பாரத்தை நிர்வகிக்கும் திறமையுடன், தம்முடைய தந்தை வகித்திருந்த ராஜ்யப் பொறுப்பை இந்த இளம் பிராயத்திலே ஏற்றுக்கொள்ளத் துணிந்துவிட்டார். அனுபவம் இன்மையால் சற்றுத் தடுமாற்றம் ஏற்படினும் உற்சாகத்தால் அதனேச் சமாளித்துக் கொள்கிருர்.

(திரைக்குள்) மகாராஜா! இந்தப் பக்கம் எழுந்தருள வேண்டும்.

(சந்திரகுப்தனும் வேலேக்காரனும் பிரவேசம்)

சந்திரகுப்தன்: (தனக்குள்) அரசு எனப்படுவது, அறநெறி, உணர்ந்தொழுகும் காவலனுக்குக் கஷ்டமே தருவதாகும்; ஏனெனில், மன்ன

வன் தன்னுயிரென மன்னுயிரைக் காத்தல் வேண்டும். பிறர் காரியத்தைக்கழுத்தில் கட்டிக்கொள்வதால் சுயகாரியம் மலேயேறிவிடுகிறது. தன் காரியத்தைக் கைவிட்டாலோ தகுந்த தலைவனெனக் கருதப்படான். மற்றவர் கருமங்களை ஏற்றுக்கொள்ளாவிடிலோ ராஜ தருமம் நழுவிவிடும். இங்ஙனம், அன்னியர்க்கு உரியன அகத்தைக் கவர்வதால் அரசநீதி கொற்றவனை 'ஜட'மாக்கிவிடுகிறது. இவ்வாறு, சுயகாரியத்தைச் செய்துகொள்ளச் சுதந்தரமற்றவன் பார்த்திபன் ஆயினும் பராதீனனே ஆகிருன். ஆதலின், அதன் இன்பச் சுவையை எவ்வாறு அனுபவிக்க முடியும்?

மேலும், சாம்ராஜ்யஸ்ரீ பூரண சலுகைபெற்ற வேசியைப் போன்றவள்; நாம் கடுமையாக இருந்தால் அவள் வாட்டமுறுகிருள்; சாதுவாகத் தோன்றிஞலோ தனக்கு அவமானம் வந்துவிடுமோ என்று அஞ்சி நம்மை விட்டு அகன்றுபோகப் பார்க்கிருள். முட்டாளை வெறுக்கிருள்; மகா வித்துவானுயின் அவனிடம் பிரியமற்றவள் ஆகிருள்; சூரனுக்குப் பயப்படுகிருள்; பயங்கொள்ளியைப் பார்த்தால் பரிகசிக்கிருள். ஆகவே, எந்த வகையான உபசாரத்தாலும் அவளை வசமாக்குதல் அரிதான காரியம்.

மற்றுமொரு சம்பவம். ஆரியர் எனக்குப் புதிதாக ஒரு கட்டளையிட்டிருக்கிருர். அதன்படி நான் பொய்ச் சுதந்தரம் பூண்டு விவகாரங்களையெல்லாம் மாற்றி வேறுவிதமாக நடத்தவேண்டும். பெரும் பாவத்தை மூட்டை கட்டிக் கொள்வதைப் போன்று, இந்த உத்தரவை ஒருவாறு ஏற்றுக்கொண்டேன்.

ஆயினும், எந்நாளும் நான் ஆரியருடைய போதனையால் சீர்திருந்தும் மதி படைத்தவன். ஆகவே, நான் எப்பொழுதும் சுதந்தரம் உடையவனே! ஏன்?

மாணவன் செய்யும் நற்கருமம் ஆசானுல் தடுக்கப்படுவதில்லை. ஆனுல், நல்லொழுக்கத்திலிருந்து சீடன் நழுவும்போதுதான் குருவின் அங்குசம் அவனை அடக்குகிறது. ஆதலின், விநயத்தைப் பற்றியவர் அங்குசம் அற்றவர் ஆவர். ஆகையால், இதைவிட அதிகமான சுதந்தரத்தை நான் எதிர்பார்க்கவில்லை.

(வெளிப்படையாக) ஆர்ய, வைஹீனரே! சுகாங்க மாளிகைக்கு விஜயம் செய்ய விரும்புகிறோம்.

*கஞ்சுகி: வருக! வருக! (அரசனை அழைத்துப் போய்) இதோ, 'சுகாங்க பவனம்'; மெதுவாகத் திருவடியிட்டுப் புனிதமாக்குக!*

சந்திரகுப்தன்: (மேற்றளத்திற்குப் போய்ச் சுற்றிலும் பார்த்து) ஆகா! சரத் காலம் அருளிய அழகென்னும் ஐசுவரியத்தைப் பெற்ற திசைகள் எவ்வளவு பெருமிதத்துடன் விளங்குகின்றன! வெண் மேகத் துண்டுகள், வெள்ளப் பெருக்கற்றதால் ஓசை அடங்கி நிற்கும் மணல் திட்டுகளைப் போலக் காண்கின்றன! ஸாரஸப் பறவைகளின் சங்கீதம் நாற்றிசைகளிலும் பரவிவிட்டது; ஆம்பல்களைப் போல் நட்சத்திரங்கள் இரவுக்கு விசித்திரமான ஒளி தருகின்றன! இவ்வாறு பத்துத்திக்குகளும் வானத்திலிருந்து நதிகளைப் போல் பெருகுகின்றன. மேலும்,

ஆகா! இயற்கையின் உபதேசத்தை எங்கணும் நிரப்பிடும் சரத் கால சாத்துவிகத்தை என்னென்று சொல்ல! இது நிலைமை யறியாது கொந்தளிக்கும் நீருக்குத் தன்னடக்கத்தை உணர்த்துகிறது; நெற் பயிரின் கதிர்களுக்குப் பலன் முதிர்ச்சியடையும் தருணத்தில் வணக்கத்தின் அவசியத்தைப் போதிக்கிறது; மயில்களின் நஞ்சு போன்ற மதத்தை அடக்குகிறது. உலக முழுமைக்கும் இது ஊட்டும் விநய போதத்தை எவ்வாறு புகழ முடியும்!

பல்வேறு காமினிகளின் காதலால் கவரப்பட்ட தன் நாயகனின் தீய ஒழுக்கத்தைக் கண்டு உள்ளம் வெதும்பிய காதலியைக் காம ரஸக் கதைகள் உரைப்பதில் வல்லவளான தோழி யொருத்தி சாதுரியமாகப் பேசிச் சரிப்படுத்தி அவளுடைய தலைவனிடம் கொண்டு சேர்ப்பதே போல், இந்தச் சரத் காலமும், பல நதிகளுக்கு நாயகனான சமுத்திரத்தினிடம் சினங்கொண்டு மாரிகால முடிவால் பெருக்கற்று இளைத்திருக்கும் கங்கையை ஒய்வுக்காக அங்கங்கே நிறுத்தி மெல்ல மெல்லக் கொண்டுபோய்க் கடலிலே சேர்க்கிறது போலும்!

(சுற்றும் பார்த்து) என்ன இது? குசுமபுரத்திலே நிலாக் கொண்டாட்டத்துக்குரிய நிகழ்ச்சிகளே காணவில்லை! ஆர்ய, வைஹீனரே! 'கௌமுதீ மகோற்சவ'க் கட்டளை பறைசாற்றப்படவில்லையா!

கஞ்சுகி: சாற்றப்பட்டது!

சந்திர: இருந்தும் ஏன் நமது கட்டளை குடிகளால் நிறைவேற்றப் படவில்லை!

கஞ்சுகி: (செவிகளைப் பொத்தி) பாபம் ஒழிக! பாபம் ஒழிக! பூமண்டலத்தின்கண் எங்கும் என்றும் தடையற்ற தேவரீர் திருவாணைக்குக் குடிகளால் ஒருபொழுதும் இடையூறு நேராது.

சந்திர: அப்படியாயின் ஏன், ஐயா, இன்னும் கொண்டாட்டம் உறங்குகிறது? வேசைகள், காமவார்த்தைகளைப் பச்சையாகப் பொழியும் விட புருஷர் புடைசூழத் தங்கள் பின் பாரத்தால் மந்த கதியுடன் ராஜமார்க்கத்தை ஏன் இன்னும் அலங்கரிக்கவில்லை?

நகரிலுள்ள பிரமுகர்கள் தங்கள் நிதி நிக்ஷேபங்களைப் போட்டி போட்டுக் காட்டுவதற்காகத் தங்களையும் தங்கள் பந்து மித்திரர்களையும் சிங்காரித்துக்கொண்டு பெண் மயில்களோடு நாணமின்றி வீதியிலே வந்து 'கௌமுதீ' விழாவை ஏன் அனுபவிக்கவில்லை?

கஞ்சுகி: ஆம், இறைவ! அது இப்படி!

சந்திர: எது, எப்படி?

கஞ்சுகி: அது தான் அரசே! இப்படி!

சந்திர: ஆர்ய! என்ன? விளங்கக் கூறும்!

கஞ்சுகி: மன்னர்க்கு அதிப! கௌமுதீ மகோற்சவம் தடுக்கப் பட்டுவிட்டது.

சந்திர: (சினந்து) ஆ! தடையா? யாரால்?

கஞ்சுகி: அரசர் பெரும! இதற்குமேல் இயம்புதற்கு இயலாதவர்களாக இருக்கிறோம்.

சந்திர: கண்ணையும் கருத்தையும் கவரும் களிப்பைத் தடுத்து நிறுத்திய தைரியசாலி யாவன்? இந்த மகிழ்ச்சியை அபகரித்தவர் சாணக்கிய தேவர் அல்லவே?

கஞ்சுகி: வேந்தர் வேந்த! சந்நிதானத்தின் கட்டளையை உயிர் வாழ விரும்பும் மற்ற எவன் மீறுவான்?

சந்திர: சோணோத்தரே! உட்கார விரும்புகிறேன்.

கஞ்சுகி: இதோ சிங்காதனம்! சிறப்பியுங்கள்!

சந்திர: (உட்கார்ந்து) ஆர்ய, வைஹீனரே! சாணக்கிய தேவரை நாம் காண விரும்புகிறோம்.

கஞ்சுகி: செங்கோல் ஆணை! (போகிறான்)

(சாணக்கியன் தன் வீட்டிலே தருப்பை ஆசனத்தின் மேல் சிந்தித்தவாறு கோபத்தோடு வீற்றிருக்கிறான்.)

சாணக்கியன்: (தனக்குள்) என்னுடன் போட்டிபோடுபவன் இந்த ராக்ஷஸப் பதரா?

"அவமதிப்பைப் பொறுக்காத கௌடில்யன் பாம்பைப்போல் சீறிப் பகைமை பூண்டு ஊரை விட்டுப் போனான்; பின்பு. நந்தரைக் கொன்று மௌரிய விருஷலனை மன்னன் ஆக்கினான். அதைப்போலவே நானும் இப்போது மௌரிய சாம்ராஜ்யத்தை அபகரித்துவிடுவேன்" என்றெல்லாம் தனக்குள்ளாகவே தீர்மானித்துக்கொண்டு என் புத்தி நுட்பத்தை மிஞ்சி விடுவதாக மனப்பால் குடிக்கிறான் இவன்.

(ஆகாயத்தைப் பார்த்து அங்கே ராக்ஷஸன் இருப்பதாகப் பாவித்து)

ராக்ஷஸ! ராக்ஷஸ! வேண்டாம்! உன் உறுதியை விட்டுவிடு. ஏன் தெரியுமா?

மதோன்மத்தனாக, தீய மந்திரிகள் பால் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அரசாட்சி செய்த நந்தன் அல்ல சந்திரகுப்தன்; நீயும் எவ்வகையிலும் சாணக்கியன் ஆகிவிடமாட்டாய். என்னிடம் நீ கொண்டுள்ள வெம்பகை ஒன்றுதான் என்னை நீ நிகர்க்கக் காரணம் உள்ளது.

(சிந்தித்து) இல்லாவிடின்—இந்த ஆலோசனையில் ஏன் கருத்தைப் பயனின்றி வீணாக்க வேண்டும்? ஏனெனில், என் ஆட்கள் பருவதேசுவரனுடைய உள்ளத்தைத் தம் வயமாக்கிக்கொண்டு எப்பொழுதும் அவனையே சூழ்ந்திருக்கிறார்கள். சித்தார்த்தகன் முதலாய ஒற்றர்களும் தத்தம் கருமங்களைச் செவ்வனே நிறைவேற்றுதற்கு முனைந்துவிட்டனர். இப்பொழுது பிரித்தாளும் தந்திரத்தில் பேராற்றல் படைத்த நான் செய்யவேண்டியது, பகைவன் அறியும்படி மௌரியனுடன் பொய்ச் சண்டை தொடங்கி, என் இச்சைப்படி ராக்ஷஸனை மலயகேதுவினிடமிருந்து பிரித்துவிடுவதேயாம்!

கஞ்சுகி: அப்பா! சேவகத் தொழில் மிகவும் சிரமமானது. முதலில் அரசனுக்குப் பயந்து நடக்கவேண்டும். அடுத்தாற்போல அமைச்சனுக்கு அஞ்சவேண்டும்; பின்னர் மன்னனுக்கு யார் யார் வேண்டியவர்களோ அவர்களுக்கெல்லாம் தக்கபடி தாளம் போடவேண்டும். தவிர,

வேந்தனுடைய விருப்பம் எங்கெல்லாம் தாவுகிறதோ அங்கிருந்தெல்லாம் ஆதரவு பெறவேண்டும். இங்ஙனம், வயிறு வளர்ப்பதற்காகப் பொய்பேசி, வறுமையால் தலைதூக்கிப் பார்க்கும் இந்த அடிமை உத்தியோகத்துக்கு ஆன்றோர்கள் சூட்டியிருக்கும் நாய்ப் பிழைப்பு என்னும் நாமதேயம் மிக மிகப் பொருத்தமானது.

(நான்கு அடி நடந்து எதிரே நோக்கி)

இதோ! ஆர்ய சாணக்கியருடைய வீடு! உள்ளே போகிறேன்.

(உட்சென்று பார்த்து)

ஆகா! மன்னர் மன்னனுடைய மந்திரி பெருமானின் செல்வச் சிறப்புத்தான் என்னே! இடிந்துபோன சுவர்களோடு விளங்கும் வீடு; மேலே உலர்வதற்காகப் போடப்பட்டிருக்கும் பலாசங் குச்சிகளால் வளைந்து அமுங்கிப் போயிருக்கும் கூரை; உட்புறம் மாணவர்கள் சேகரித்துவந்து கட்டுக்கட்டிக் குவியல் குவியலாகப் போட்டிருக்கும் தருப்பை நிதி; அங்கு, உலர்ந்துபோன காட்டு வரட்டிகளைத் தூளாக்குவதற்காக ஓர் உடைந்த கல் துண்டு.

ஆம்; பொருத்தமே! இவர் சந்திரகுப்தனை 'விருஷல' என்று அழைப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆசையை அறவே ஒழித்த இத் தகையோர்க்கு அரசனும் ஒன்றே! அற்பப் புல்லும் ஒன்றே! ஆசையின் மகிமையால்தான் உண்மையே பேசுவோர்கூட லோபித்தனமாக அரசர்களை இல்லாதன வெல்லாங்கூறி ஆடம்பர வார்த்தைகளால் வாய் வலிக்கத் துதிக்கிறார்கள்.

(எதிரே பார்த்துப் பயத்துடன்) இதோ இருக்கிறார்! ஆர்ய சாணக்கியர்! இவர் நந்தனைச் சார்ந்தோரைப் பலவகையிலும் வீழ்ச்சியுறச் செய்தவர்; ஒரே மூச்சில் நந்தனுக்குத் தாழ்வையும், மௌரியனுக்கு வாழ்வையும் வழங்கினவர். அதனால், முறையே பனியை வீழ்த்திப் பகலை விளக்கும் கதிரோனின் பேரொளியையும் இவர் மிஞ்சிவிட்டார்.

(மண்டியிட்டு வணங்கி) ஆரியர்க்கு வெற்றி!

சாணக்: ஆர்ய, வைஹீனரே! ஏது இவ்வளவு தூரம் வந்தது?

கஞ்சுகி: ஆர்ய! அடிபணிந்து அவசரத்துடன் எழுந்திருக்கும் அரசர்களின் வரிசை வரிசையான மகுடங்களிலுள்ள மாணிக்கக் கற்களின் சோதி வெள்ளத்தில் மூழ்கி எழுந்த மலர்ப் பதங்களையுடையவரும், பொன்னே போன்ற பெயர் புனைந்தவருமான தேவன் சந்திரகுப்தன் ஆரியரைத் தலையால் வணங்கி, ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அது ' விரைவிலே ஆரியரைக் காணவேண்டும்' 'என்பது.

சாணக்: வைஹீனரே! விருஷலன் என்னைக் காணவா விரும்புகிறான்? நிலாக் கொண்டாட்டத்தை நிறுத்துமாறு நாம் பிறப்பித்த தடை யுத்தரவு அரசன் செவிமட்டும் எட்டவில்லையே?

கஞ்சுகி: எட்டிவிட்டது.

சாணக்: (சினந்து) எட்டியதா? யார் கூறியவர்?

கஞ்சுகி: (நடுங்கி) ஆரியர் கோபங்கொள்ளக் கூடாது; அரசர் சுகாங்க மாளிகையின் உப்பரிகையில் இருந்தவாறே, நிலா விழாவால் நிறைவுறாத நகரத்தைத் தாமே நேரில் கண்டார்.

சாணக்: உம்; தெரிகிறது; பின்பு நீங்கள் மத்தியிலே வத்திவைத்து விருஷலனுக்குக் கோபமூட்டிவிட்டீர்கள். வேறு என்ன?

(கஞ்சுகி பயந்து தலைகுனிகிறுன்)

சாணக்: ஆகா! அரசனுடைய பரிவாரங்களுக்குச் சாணக்கியன் பேரில் எவ்வளவு க்ஷாத்திரம்! உம்; விருஷலன் எங்கு இருக்கிறுன் இப்பொழுது!

கஞ்சுகி: (நடுங்கிய வண்ணம்) சுகாங்க பவனத்தில் எழுந்தருளியிருக்கும் தேவனுல் சந்நிதானத்துக்கு அடியேன் அனுப்பப்பட்டேன்.

சாணக்: (எழுந்து) சரி; சுகாங்கத்திற்குப் போகவேண்டும்.

கஞ்சுகி: ஆகா! இவ்வழியே எழுந்தருள்க!

(இருவரும் நடந்து செல்கின்றனர்)

சாணக்: (எதிரே நோக்கி)

ஆ! அரியாசனத்திலே வீற்றிருக்கிறுன் விருஷலன்! நன்று; நன்று. குபேரனுக்கும் குறைந்தவர்களல்லாத நந்தர்களை, விலக்கி விட்டு, ராஜாதி ராஜனுன விருஷலனை ஏற்றுத் தன்பால் அமர்ந்திருக்கச் செய்யும் இந்தச் சிங்காசனம் இப்போதுதான் தகுந்த ஸ்தாஞதிபதியைப் பெற்றது. இச்சமயம் என்னுடைய குணங்கள் எனக்கே மகிழ்ச்சி அளிக்கின்றன.

(அருகிற் சென்று) விருஷலனுக்கு வெற்றி ஓங்குக!

சந்திரகுப்தன்: (ஆசனத்தினின்றும் எழுந்து) ஆரியருக்கு அடியேன் சந்திரகுப்தனுடைய வந்தனங்கள். (அடிபணிகிறுன்)

சாணக்: (கையைப் பிடித்து) எழுந்திரு; குழந்தாய்! எழுந்திரு!

"கற்களின் இடையில் சென்று சிதறும் வேத கங்கையின் திவலைப் பெருக்கால் தண்மை யடைந்த இமயமலை முதல், பலவாறு சுடர் பரவும் ரத்தினங்களைக் கொண்ட தென் கடல் வரையிலுள்ள அரசர்கள், ஆயிரக்கணக்காக அடிக்கடி வந்து அச்சத்துடன் தலை வணங்கி, தங்கள் கிரீடங்களிலுள்ள நவமணிகளால் உனது இணையடிகளை ஒளிவீசும்படி செய்வாயாக!"

சந்திர: சந்நிதானத்தின் அருளால் இப்பொழுதே அனைத்தும் கிட்டியுள்ளன; ஆரியர் ஆசனத்தை ஏற்கவேண்டும்.

(இருவரும் முறைப்படி உட்காருகின்றனர்)

சாணக்: நம்மை நீ எதற்காக அழைத்தாய்!

சந்திர: ஆரியரைச் சேவித்து அருளைப் பெறுதற்காகவே!

சாணக்: (நகைத்து) போதும் உனது பணிவு; காரியஸ்தர்களைத் தலைவர்கள் காரணமின்றி அழைப்பது இல்லை.

சந்திர: ஆரிய! சந்திரிகை விழாவை நிறுத்தியதால் தாங்கள் அடைந்த பயன் என்ன?

சாணக்: (சிரித்து) வசைமொழிகளைப் பொழிய வருவித்தனை போலும்.

சந்திர: வேண்டாம்; வேண்டாம்; அவ்வாறு அன்று; வேண்டிக் கொள்ளவே விரும்பி அழைத்தேன்.

சாணக்: அங்ஙனமிருப்பின், சீடன் சுதந்தரம் பெற்றவர்களைத் தடுத்து வினவியதே தவறு.

சந்திர: உண்மையே; ஐயமில்லை. ஆயினும், தங்கள் முயற்சி எதுவும் வீணாக இராது. ஆதலின் நாமும் கேட்பதற்கு இடம் உண்டு.

சாணக்: விருஷல! சாணக்கியன் கனவிலேனும் வீணாக எதனையும் செய்யமாட்டான்; இதனை நீ நன்கு உணர்ந்திருக்கிறாய்.

சந்திர: ஆர்ய! அதனால்தான் ஆவல் அதிகரித்துக் கேட்கும்படி தூண்டுகிறது.

சாணக்: கேள்; விருஷல! நீதி சாஸ்திர நிபுணர்கள் சித்தியை மூவகையாகப் பிரித்துக் கூறுகின்றனர். அவற்றுள், ஒன்று அரசனுக்கு வசமானது; மற்றொன்று மந்திரிக்குவசமானது. இன்னொன்று அரசனுக்கும் அமைச்சனுக்கும் பொதுவானது. இவற்றுள் மந்திரி மூலமாகவே சித்தி பெறும் உனக்கு இந்தக் கேள்வி எதற்காக? ஏனெனில், அதற்கெனவே உள்ள நாம் அதனை அறிவோம்.

(சந்திரகுப்தன் கோபங்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்)

(திரைக்குள்ளே ஸ்துதி பாடகர் பாடுகின்றனர்)

ஒரு ஸ்துதி பாடகன்: சரத் காலம், எங்கும் மலர்ந்து விளங்கும் நாணற் பூக்களின் வெண்ணிறத்தினால் ஆகாயத்தையே வெண்மையாக்குகிறது; சந்திர கிரணங்களால் கறுத்த மேகங்களையும் வெளுக்கச் செய்கிறது; அது பூமாலைகளைப் போன்ற துல்லியமான நிலவுடனும் அன்னப் பறவைகளுடனும் கூடியது.

அதேபோல, பரமசிவன், தன்மீதுள்ள சாம்பரால் வானத்தை வெண்ணிறமாக்குகிறார்; பிறைச் சந்திரனின் பிரகாசத்தால் தமது இடையிலுள்ள கரித்தோலை வெளுப்பாக்கிக் கொள்கிறார். புன்முறுவலுடனும் வெண்மையான மண்டையோட்டு மாலையுடனும் விளங்குகிறார். இத்தகைய அவரது திரு உருவம் தங்களுடைய கஷ்டங்களைப் போக்குக!

மேலும், தன்னுடைய முடிகளையே தலையணையாகத் தந்திருக்கும் 'ஆதிசேஷன்' என்னும் பெரிய சயனத்தின்மேல் பள்ளிகொண்டு, அப்பொழுதுதான் விழித்து எழுந்திருக்க நினைக்கும் விஷ்ணுவினுடைய, ரத்தின தீபங்களின் காந்தியை உற்று நோக்க முடியாமல் நித்திரா பங்கத்தால் சிவந்த நேத்திரங்களைச் சுளித்தவாறே சிறிது வெளியாகும் அந்தக் கடாட்சம் தங்களை எந்நாளும் காப்பாற்றட்டும்.

மற்றொரு ஸ்துதி பாடகன்: உவமையற்ற வல்லமைக்கு உறைவிடமாகி, மத ஜலத்தைப் பெருக்கவிடும் பெரிய யானைகளையும் ஜயிப்பவையான - வீரியத்தையும் மானத்தையும் காக்கும் - சிங்கங்கள் தங்களுடைய பற்கள் பறிக்கப்படுவதை ஒருபோதும் சகியா;

அங்ஙனமே

மானம், ரோஷம் முதலியவற்றை முதன்மையாகக்கொண்ட தங்களைப்போன்ற சக்கரவர்த்திகள், சௌரியத்திற்கே இருப்பிடமெனச் சதுர்முகனால் படைக்கப்பட்டவர்கள்; பேரரசர்களையும் பராக்கிரமத்தால் அடக்கி ஆள்பவர்கள். அவர்கள் தங்கள் கட்டளை பிறரால்மீறப் படுவதை ஒருகாலும் மன்னிக்கவே மாட்டார்கள்.

அன்றியும், ஆடம்பரமான ஆடையாபரணங்களை அணிவதாலேயே ஒருவன் 'பிரபு' ஆகிவிடமாட்டான்; எவராலும் அவமதிக்கப் படாத ஆக்ஞைகளைச் செலுத்தும் தங்களைப்போன்ற ஒருவனே அதிபனெனக் கருதப்படுவான்.

சாணக்: (தனக்குள்) முதலிலே சொன்னது புரிந்தது! தெய்வத்தை வணங்குவதேபோல் சரத் காலத்தை வர்ணித்து ஆசி கூறினன்; அடுத்ததுதான் தெரியவில்லை.

(சிந்தித்து) ஆம்; தெரிந்தது. ராக்ஷஸன் சூழ்ச்சி இது! துன்மார்க்க! ராக்ஷஸ! எதிரிலேயே இருக்கிறாயே! அடே! கௌடில்யன் விழித்துக்கொண்டுதான் இருக்கிறான்.

சந்திர: ஆர்ய! வைஹீனரே! இந்த இரண்டு தோத்திரப் பாடகர்க்கும் தலைக்கு லட்சம் பொன் வீதம் கொடுக்கச் சொல்.

கஞ்சுகி: ஆணையின்படியே! (எழுந்து செல்கிறான்)

சாணக்: (கோபம்கொண்டு) வைஹீனரே! நில்; போக வேண்டாம்! அரச! எதற்காக இவ்வாறு அசந்தர்ப்பமாகப் பணத்தை வாரி இறைக்கவேண்டும்?

சந்திர: (ரோஷத்துடன்) எடுத்ததற்கெல்லாம் கட்டுப்படுத்தும் இத்தகைய நிர்ப்பந்தங்களால் இது எனக்கு அரசுரிமையாகத் தோற்றவில்லை; சிறைவாசம் போலவே இருக்கிறது.

சாணக்: அரச! தாமாக ஒன்றையும் செய்ய முடியாத அரசர்க்கு இப்படிப்பட்ட இன்னல் ஏற்படுவது இயல்பே; அதனைச் சகிக்க இயலாதென்றால் பொறுப்பை நீயே ஏற்றுக்கொள்.

சந்திர: இதோ, தயார்! கடமையை வகிப்போம்!

சாணக்: மிக்க சந்தோஷம்! நாமும் நமது கடமையை ஏற்றுக் கொள்கிறோம்.

சந்திர: ஆயின், நிலாக்கொண்டாட்டத்தை நிறுத்தும்படி என்ன நேரிட்டது?

சாணக்: அந்தக் கொண்டாட்டத்தை நடத்தும்படி யாது நேர்ந்தது?

சந்திர: நமது கட்டளை அமலுக்கு வரவேண்டுமென்னும் முதல் நோக்கமே அதற்குக் காரணம்.

சாணக்: விருஷல! உன்னுடைய உத்தரவை உடைத்து வீழ்த்த வேண்டுமென்னும் நமது முதல்நோக்கமே தடைப்படுத்தியதற்குத் தக்க காரணம். ஏன் தெரியுமா?

நாற் கடல்கள், தமால விருட்சங்களின் தளிர்களால் கறுத்து விளங்கும் காடுகளைத் தம் கரையிலே கொண்டவை; வெகுவேகமாய்ச் சஞ்சரிக்கும் ஆயிரக்கணக்கான திமிங்கிலங்களால் கலக்கப்பட்ட நீரையுடையவை. அந்தக் கடல்களின் எதிர்க் கரை மட்டுமுள்ள கோடிக் கணக்கான மன்னர்களால் வாடாத மாலைபோன்று சிரமேல் தரிக்கப் படுவது உன் கட்டளை. அது நம்மால் தடைப்பட்டால்தான் உன்னுடைய பெருந்தன்மையாலும் பணிவாலும் மிகவும் அழகு பெற்று விளங்குவது தெள்ளெனத் தெரியும்.

தவிர, மற்றொரு காரணமும் உண்டு; நீ கேட்க விரும்பினால், அதனையும் கூறுகிறேன்.

சந்திர: சொல்லுங்கள்!

சாணக்: சோணோத்தரே! 'பத்ர படன்' முதலானோர்க்கு இங்கே வெறுப்பு உண்டாகியது; அதனால் அவர்கள் வெளிப் போந்தனர்; பகைவன் மலயகேதுவுடன் சேர்ந்துகொண்டனர். அவர்களது கடிதம் ஒன்று காரியஸ்தனான 'அசல'னிடம் உள்ளது; நீ போய் அதனை வாங்கி வா.

சோணோத்தர்: திருவாணை! (போய்த் திரும்பிவந்து) சுவாமீ! இதோ கடிதம்!

சாணக்: (வாங்கி) அரச! இதனை வாசித்துப் பார்!

சந்திர: (தனக்குள் படிக்கிறான்)

"க்ஷேமம்; அழகிய பெயர்பூண்ட ஐயன் சந்திரகுப்தனுடன் ஒரே காலத்தில் உயர்நிலைக்கு வந்தவர்களும், பின்பு இங்கிருந்து வெளியேறிப்போய், பகைவனான மலயகேதுவை அண்டின பிரமுகர்களுமான நாங்கள் எழுதும் பிரமாண நிருபம்.

யானைத்தலைவன் பத்ர படன், குதிரைத் தலைவனான புருஷதத்தன், முதல் வாயிலைக் காக்கும் சந்திரபானுவின் மருமகனான டிங்கராதன், தங்கள் பந்துக்களுக்குப் பந்துவான அரசன் பலதேவகுப்தன், தங்கள் பாலிய சேவகனான ராஜசேனன், சேனாதிபதியான சிம்மபாலனது இளைய சகோதரன் பாகுராயணன், மாளவ ராஜகுமாரன் லோகிதாக்ஷன், அரசர்களிற் சிறந்த விஜயவர்மன் ஆகிய நாங்கள் தங்களுடைய காரியங்களில் மிகவும் அக்கறை கொண்டு அவற்றைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகிறோம்." (வெளிப்படையாக) ஆர்ய! கடிதம் சரிதான்; இவர்கள் வெறுப்புக்குரிய காரணம் யாது?

சாணக்: கேள்; இவர்களில் வேழங்களைக் காக்கும் பத்ர படனும், குதிரைத் தலைவன் புருஷதத்தனும், மது மாதர் மயக்கத்தில் மூழ்கி, கரிகளையும் பரிகளையும் சரியாகக் கவனிக்காமல் போயினர். அதனால் அவர்களை வேலையினின்றும் நீக்க நேரிட்டது. ஆயினும் உபகாரச் சம்பளம் கொடுத்துவந்தோம். இருந்தும் அவர்கள் எதிரியிடம் போய் உத்தியோகம் தேடிக்கொண்டனர்.

டிங்கராதனும் பலகுப்தனும் பேராசைப் பேயர்; நீ அளிக்கும்

பணம் மிகவும் சொற்பம் என்று அவர்கள் கருதினர்; பகைவனிடம் அதிகம் கிடைக்கலாம் என்று எண்ணி அங்கே போயினர்.

உன்னுடைய பாலிய சேவகனுன ராஜசேனனே உன் தயவினுல் ஏராளமான யானைகளையும் குதிரைகளையும் பெற்றிருந்தும் ஒருகால் நீ மீண்டும் அவற்றைப் பிடுங்கிக்கொள்வாயோ என்று அச்சமுற்ருன், அதனுல் அவன் அகன்ருன்.

பாகுராயணன் பர்வதகனுடைய பழைய நண்பன். அந்த அபி மானத்தால் மலயகேதுவிடம் போய், "உன் பிதா சாணக்கியனுல் கொல்லப்பட்டான்" என்று கதை கட்டிவிட்டு அவனை ரகசியமாய் வெளியேறச் செய்துவிட்டான். பின்பு சந்தனதாஸன் முதலியோர் உனக்கு தீங்கு புரிந்ததற்காகத் தண்டிக்கப்பட்டதைக் கண்டு, தன் குற்றமும் எங்கே பலனைத் தருமோ என்று அஞ்சி ஓடிப்போய்ப் பகைவனை அண்டியிருக்கிருன். விரோதியும், தன் உயிரைக் காத்தவன் என்னும் நன்றி கொண்டு இவனைத் தனக்கு அடுத்தபடியாக மந்திரி பதவியில் வைத்திருக்கிருன்.

லோகிதாக்ஷன், விஜயவர்மன் இவ்விருவரும், தங்களுடைய தாயாதிகள். உன்னுல் பொருள் பெறுவதைப் பார்த்துச் சகியாதராய் மானத்துக்காக மலயகேதுவோடு சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தால் வெறுப்படைந்து வெளியேறினர்.

சந்திர: ஆர்ய! அப்படியாயின் அன்னேரின் வெறுப்புக்கு உரிய காரணம் விளங்கியிருந்தும் பதிலுக்குப் பதில் இழைக்காமல் வாளாவிருந்தது ஏன்?

சாணக்: தடுக்க இயலாமையால்!

சந்திர: ஏன்? திறமையற்று? அல்லது வேறு காரணம் உண்டா?

சாணக்: திறமை எங்கே பறந்துவிடும்? வேறு காரணத்தால்தான்.

சந்திர: என்ன காரணம் அது? நான் அறியவேண்டும்.

சாணக்: கூறுகிறேன், கேள்.

வெறுப்புற்ற குடிகளைப் பதிலுக்கு நடத்தவேண்டிய முறைகள் இருவகை. ஒன்று அவர்களை ரக்ஷித்தல். மற்றொன்று அவர்களை நன்ருகச் சிக்ஷித்தல்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட பத்ர படன், புருஷதத்தன் இவர்களை ரக்ஷிப்பதென்ருல் மீண்டும் அவர்களைப் பழையபடி உத்தியோகத்தில் அமர்த்திக் கொள்ளவேண்டும். வருத்த மிகுதியால் பொறுப்பு இழந்திருக்கும் அவர்களிடம் அதிகாரத்தைக் கொடுப்பது, அரசுக்கு ஆணிவேர் போன்ற யானை, குதிரைப் படைகளை அறவே அழித்துவிடுவதேயாகும்.

டிங்கராதனும், பலகுப்தனும் வரம்புகடந்த பேராசைக்கு அடிமையானவர்கள். இவர்களுக்கு ராஜ்யம் முழுவதுமே அளித்தாலும் திருப்தி ஏற்படாது. ஆகையால் இவர்களை என்ன செய்துதான் சந்தோஷப்படுத்தமுடியும்?

பாகுராயணனும், ராஜசேனனும் தங்கள் திரவியம் அழிந்து விடுமோ என்று அஞ்சிக்கிடப்பதால் அவர்களைக் காப்பதற்கும் இட மில்லை.

லோகிதாக்ஷனும் விஜயவர்மனும் சொந்த உறவினர்களுக்குக் கிடைக்கும் தனத்தைக் கண்டே சகியாத பொருமைக்காரர்கள். ஆத லால் இவ்விருவருங்கூட இடமற்றவரே! ஆகையால் 'ரக்ஷித்தல்' என் பது கைவிடப்பட்டது.

இரண்டாவதான சிக்ஷித்தலுக்கும் மார்க்கம் இல்லை. ஏனெனில் இப்பொழுதுதான் நந்த ஐச்வரியத்தை அடைந்திருக்கும் நாம் நமக்கு உதவியாயிருந்த பிரமுகர்களையே இம்சிக்கத் தொடங்கிவிடுவோ மாயின் ஏற்கெனவே நந்த வம்சத்தில் பாசம் வைத்துள்ள பிரஜை களுக்கு எந்தக் காலத்திலாவது நம்மீது நம்பிக்கை ஏற்படுமோ என்று எதிர்பார்க்கவே இடம் இராது.

இவ்வாறு இருவகையாலும் ஏற்படுவது பிரதிகூலமேயாகும். மலயகேது இவ்வண்ணம் நம்மிடம் இருந்த ஆட்களையெல்லாம் தன் னிடம் சேர்த்துக்கொண்டு ராக்ஷஸன் சொற்படி நடந்து வருகிறன். மேலும் தன் தந்தை நம்மால் கொல்லப்பட்டான் என்னும் கடுமை யான கோபத்தால் இப்போது நம்மை எதிர்க்கப் பிரம்மாண்டமான மிலேச்சர் படையோடு கிளம்பிவிட்டான். ஆதலால் இந்தச் சமயம் ராணுவப் பயிற்சிக்கு ஏற்ற காலமேயல்லாது உற்சவத்திற்கு உரிய நாள் அல்ல. இந்தக் காரணத்தால்தான் கோட்டைகளைச் செப்பனிட வேண்டியிருக்கையில் கொண்டாட்டம் எதற்காக என்று எண்ணித் தடுத்துவிட்டோம்.

சந்திர: ஆர்ய! நாம் கேட்கவேண்டியவை அதிகம் உள்ளன.

சாணக்: தைரியமாய்க் கேள்! அரசே! நாம் சொல்லவேண்டிய வையும் பல இருக்கின்றன.

சந்திர: இத்தனை கெடுதல்களுக்கும் காரணமாயுள்ள மலய கேது வெளியேறியபோது ஏன் அசட்டை செய்து அவனை விட்டுவிட்டீர்கள்?

சாணக்: அரசே! லட்சியத்தை மேற்கொள்ள இரு வழிகளே இருந் தன. ஒன்று அவனைச் சிறைப்படுத்தியிருக்கலாம்; அல்லது ஏற்கெனவே வாக்களித்திருந்தபடி பாதி ராஜ்யத்தைக் கொடுத்திருக்கலாம்.

அவ்விரண்டில் அவனைச் சிறைப்படுத்துவது அவன் தகப்பனுரை மடித்ததால் நமக்கு வாய்த்துள்ள மித்திர துரோகத்திற்கு மேலும் ஆதரவு அளித்ததாகும்.

அல்லது பாதி அரசைப் பகிர்ந்து அளித்தாலோ பர்வதகனை மாய்த் ததால் நமக்குக் கிடைத்த பலன் நன்றி கொன்றது ஒன்றுதான். இவற்றை உத்தேசித்தே மலயகேது வெளியேறியபோது வாளா விருந்துவிட்டோம்.

சந்திர: இதுதான் இப்படி; ராக்ஷஸன் இங்கேயே இருந்தாரே, அப்போதும் அவரை ஒன்றும் செய்யவில்லையே! அது ஏனே?

சாணக்: அவன் வெகுகாலமாக ஓர் இடத்திலேயே வசித்துவருப வன். நிலை பெயராத எஜமான விசுவாசத்தில் மூழ்கியிருப்பவன். இவற்

ருல் அவனுடைய சுபாவத்தை நன்கறிந்த நந்த பக்தர்களான நகர மாந்தரின் நம்பிக்கையை அவன் பூரணமாய்ப் பெற்றிருக்கிறன். தவிர வும் அவன் மகாபுத்திமான்; பலவான்; முயற்சி குன்றுதவன்; மிகுந்த பக்க பலமுடையவன்; தனிகன்; ஆகையால் அவன் இந்த நகரத்தி லேயே வசிப்பதனுல் அடிக்கடி பெருத்த கலகங்கள் விளைந்துகொண்டே யிருக்கும். ஊரைவிட்டுப் போய்விட்டால், அங்கிருந்தும் சங்கடங்களை ஏவுவானுயினும் அவற்றைச் சமாளித்து அவனை வசப்படுத்திக்கொள்ள வசதியுண்டு. ஆகையால் இவன் அங்கிருப்பது இருதயத்துக்குள் முள் ளைத்திருப்பதுபோலவே ஆகுமென்று எண்ணி அவனை வெளியேற்ற நேரிட்டது.

சந்திர: முழுப்பலத்தையும் பிரயோகித்து அவரை ஏன் பிடித் திருக்கக்கூடாது?

சாணக்: ராக்ஷஸன் அல்லவா அவன்! பலத்தை உபயோகப்படுத் துகையில், ஒன்று சேனையில் பெரும்பாகத்தை அழித்துவிடுவான்; இன் றேல் தனது உயிரையே அழித்துக்கொள்வான். இவ்விரண்டினுலும் நமக்கு நஷ்டமே அன்றே?

கவனி; பலாத்காரத்தால் அவனைப் பிடிக்கும்போது ஒருகால் அவன் உயிரை இழப்பானுயின், அரசே!, அத்தகைய மானிட ரூபமான ஒரு மாணிக்கத்தை நீ இழந்தவனுவாய்; அல்லது உன் சைந்நியத்தில் அவன் புகுந்து பெரும் பகுதியைப் பாழாக்கினுலும் அதுவும் நமக்குப் பெரிய வீழ்ச்சியே. ஆகையால் காட்டு யானையைப் பிடிப்பதைப் போலத் தந்திரத்தால்தான் அவனை வசப்படுத்தவேண்டும்.

சந்திர: ஆரியருடைய அபார மூளையைக் கடந்து செல்ல எம்மால் இயலவில்லை. ஆயினும் ராக்ஷஸனே இவ்விஷயத்தில் மெச்சத்தக்கவன்,

சாணக்: (கோபத்துடன்) ''நீ அல்ல''! என்பதுதானே அடுத்த வார்த்தை? அரசே! அவன் சாதித்தது என்ன?

சந்திர: கேளுங்கள்; அந்த மகான், நாம் இந்த நகரத்தை வசப் படுத்திக்கொண்ட பின்பும் நமது பிடரியின் மேல் பாதத்தை வைத்தது போல் இஷ்டப்படி ஊரிலே வசித்துவந்தார். நம் சேனைகளின் ஜய கோஷங்களை அவ்வப்போது வலுவிலே தடுத்தும் வந்தார். மேலும், விசாலமான தமது சூழ்ச்சியின் மகிமையால் நமது புத்திக்கு மயக் கத்தை யூட்டி மிகவும் நல்லவர்களான நம் கட்சியைச் சேர்ந்தவர்க ளைக் கூட நாமே நம்பாதிருக்கவும் செய்துவிட்டார்.

சாணக்: (சிரித்து) விருஷல! இவ்வளவுதானு அவன் செய்தது? நான் நினைத்தேன்: ''நந்தனை நிர்மூலமாக்கி உன்னை வைத்ததுபோல, உன்னை அழித்து இந்தப் பூவுலகில் மலய கேதுவை ராஜாதி ராஜ பதவி யில் வைத்துவிட்டானே!'' என்று.

சந்திர: யாரோ ஒருவர் செய்த இதில் தங்களுக்கு என்ன பெருமை?

சாணக்: ஆ! என்ன கர்வம்!

தலைக்கேறிய வெஞ்சினத்தின் வேகத்தாலே, துடிப்பு மீறிய நுனி

விரல்களால் தலைமயிரை அவிழ்த்துவிட்டு உலகம் அறியப் பகைவர் பூண்டையே அழிப்பதாக மிகப் பெரிய கடுஞ் சபதத்தை ஏற்று, தொண்ணூற்றென்பதாயிரம் கோடி நிதிக்கு அதிபதிகளாய் இருமாந் திருந்த அந்த ஒன்பது நந்தர்களையும் இதே ராக்ஷஸன் கண் முன்னதாக யூபத்தில் கட்டிய பசுக்களைப்போல வரிசையாய்ச் சிதைத்தவன் வேறு எவன்?

அல்லாமலும், அசைவற்று நீண்ட இறக்கைகளுடன் கழுகுகள் வட்டமிடும் அந்த ஆகாயத்தை மேகம் சூழ்ந்தாற்போல் தன் புகைப் படலங்களால் சூரியகாந்தியை மங்கச் செய்து மயானத்திலுள்ள பிராணிகளை நந்தரின் பெருக்கெடுத்த மாமிச நீரால் போஷித்த அக்கினியானது, இதோ இன்னும் தணியவில்லையே?

சந்திர: இதுவும் மற்றொருவரால் செய்யப்பட்டதே!

சாணக்: ஆ! யாரால்?

சந்திர: யாராலும் அல்ல, நந்த மரபின்பால் பகைமை பூண்ட விதியால்!

சாணக்: விதியா! அதை மூடர்களே நம்புவர்.

சந்திர: உண்மை அறிவாளிகள் தற்புகழ்ச்சி செய்துகொள்ளமாட்டார்கள்.

சாணக்: (கோபத்துடன்) விருஷல! கூலிக்கு வந்த வேலைக்காரனைப்போல என்னைக் கருதி ஏறப்பார்க்கிறாய். முடிந்தசிகையை அவிழ்த்துவிட, இதோ, இந்தக் கை தாவுகிறது. (தரையை உதைத்து) இந்தக் காலும் மீண்டும் சபதத்தை மேற்கொள்ளத் துடிக்கிறது. நந்தர்களை நாசமாக்கியதால் ஒருவாறு தண்மையடைந்திருக்கும் கோபத்தணலை விதியால் ஏவப்பட்ட நீ மறுபடியும் எரியச் செய்கிறாய்.

சந்திர: (தனக்குள் நடுக்கத்துடன்) என்ன இது? உண்மையாகவே ஆரியர் சினங்கொண்டுவிட்டாரா? அப்படித்தான் தோன்றுகிறது.

கோபத் துடிப்பினால் விரிந்து விளங்கும் கண்களிலிருந்து துளிர்த்த நீரால் கழுவப்பட்டிருந்தும் புருவநெறிப்பால் ஏற்பட்ட விகாரமே புகையாகத் தோன்ற, சினத்தால் சிவந்த நேத்திரங்களின் ஒளியால் எதிரிலுள்ள இடம் எரிவதுபோலத் தெரிகிறது.

பரமசிவனுடைய ரௌத்திர ரஸ தாண்டவ கால அனுபவத்தை எண்ணி இந்தப் பூமியும் பயங்கரமாக அதிர்ந்தபடியே எவ்வாறோ இந்த உதையையும் ஒருவாறு தாங்கிக்கொண்டது.

சாணக்: (பொய்க் கோபத்தை அடக்கிக்கொண்டு) விருஷல! விருஷல! அதிகம் வேண்டாம். ராக்ஷஸன் நம்மைவிடச் சிறந்தவன் என்று உனக்குத் தோன்றினால், இதோ, இந்த வாளை அவனுக்கே அளித்துவிடு.

(வாளை யெறிந்துவிட்டு எழுந்து நின்று ஆகாயத்தை நோக்கித் தனக்குள்) ராக்ஷஸ! ராக்ஷஸ! கௌடில்யனுடைய மதிவன்மையை வெல்லப்பார்க்கும் உனது புத்தியின் மேன்மை இதுதானே? சாணக்கியனிடம் பக்தி குன்றிய மௌரியனை எளிதிலே ஜயித்துவிடலா

மென்று நினைத்து நீ எந்த மித்திரபேதம் செய்தாயோ—ஏ, மூடா!—அது முழுவதும் உனக்குத் தீங்கையே விளைவிக்கப்போகிறது.

(போய்விடுகிறான்)

சந்திர: ஆர்ய! வைஹீனரே! இதுமுதல் சாணக்கியனை லட்சியம் செய்யாமல் நாமே அரசுபுரிவோமென்று அனைவருக்கும் அறிவித்து விடும்.

கஞ்சுகி: (தனக்குள்) என்ன, மரியாதை மண்ணாகிவிட்டதே; 'ஆர்யர்' என்னும் பட்டம் போய், 'சாணக்கியன்' என்னும் பட்டம் திட்டத்திலே இறங்கிவிட்டதே! ஆஹா! அதிகாரம் வந்துவிட்டது!

ஆனால் இவ்விஷயத்தில் கொற்றவன்மீது குற்றம் இல்லை. ஏனெனில், ஒரு யானை கொடியது என்னும் கெட்ட பெயர் பெறுவது அதன் பாகனுடைய கவனக்குறைவால்; ஓர் அரசன் தீயன புரிவதும் அமைச்சனுடைய அறிவீனத்தால்தான்.

சந்திர: ஆர்ய! வைஹீனரே! என்ன யோசிக்கிறீர்?

கஞ்சுகி: தேவ! யாதும் இல்லை . . . . உம் . . . . தாங்கள் இப்போது தான் தகுந்த மன்னவன் ஆயினீர்கள்.

சந்திர: (தனக்குள்) இவ்வாறெல்லாம் வெளிக்குத் தோன்றச் செய்தாலும் சரியே; காரிய சித்தியைக் கோரும் ஆரியருடைய கருத்து நிறைவேறுக!

(வெளிப்படையாக) சோணோத்தரே! இந்த வறட்டுச் சண்டையால் தலைவலி வந்துவிட்டது. படுக்கையறைக்குப் போகவேண்டும்.

கஞ்சுகி: அவ்வண்ணமே! விஜயம் செய்யுங்கள்!

சந்திர: (தனக்குள்) ஆரியர் கட்டளையைச் சிரமேல் தாங்கி அதன்படி அவர் கௌரவத்தை மீறி நடந்திருக்கும்போதே என் உள்ளம் ஓடி ஒளிந்துகொள்ள எங்கேனும் ஒரு பொந்தைத் தேடுகிறதே!

உண்மையாகவே சிலர் ஆசானை அவமதிக்கிறார்களே, அவர்கள் மனத்தை வெட்கம் ஏன் பிளப்பதில்லையோ?

(எல்லோரும் போகிறார்கள்)

மூன்றாம் அங்கம் முற்றிற்று

## நான்காம் அங்கம்

(பிரயாணி வேடத்தில் ஒருவன் பிரவேசிக்கிறான்)

பிரயாணி: ஆகா! என்ன ஆச்சரியம்!

தலைவனுடைய தட்டமுடியாத கட்டளை மட்டும் இல்லாமல் இருப்பின் இந்த எட்டு யோஜனையுள்ள நெடுந்தூர மார்க்கமும் கால் நடையாகச் சென்று திரும்பியும் வருபவன் எவன்?

உம்; இருக்கட்டும். அமைச்ச ராக்ஷஸன் வீட்டிற்கே போகிறேன். ஏ, யாரடா, வாயிற்காப்போன்! 'இந்தக் கரபகன் குட்டி யானையைப் போல் கெட்டிக்காரத்தனமாகத் தன் காரியத்தைச் சாதித்துக்

கொண்டு பாடலீபுரத்திலிருந்து வந்திருக்கிறுன்' என்று எஜமானரிடம் போய்த் தெரிவி.

வாயிற்காப்போன்: (பிரவேசித்து) யாரையா அது? உரக்கப் பேசாதே! எஜமானருக்கு இரவெல்லாம் உறக்கம் இல்லே. அரசாங்க அலுவல்களிலே சிந்தனேயைச் செலுத்தித் தலேநோய் கண்டுவிட்டது; இன்னும் படுக்கையை விட்டே எழுந்திருக்கவில்லே. சற்று இரு; சமயம் பார்த்துப்போய், உன் வருகையைத் தெரிவிக்கிறேன்.

கரபகன்: அப்படியே செய்.

(ஆசனத்திலே சகடதாஸனும், படுக்கையில் சிந்தனேயில் ஆழ்ந்த ராக்ஷஸனும்)

ராக்ஷஸன்: (தனக்குள்) காரிய ஆரம்பத்திலிருந்தே அதிர்ஷ்டம் எதிரியாகி விட்டதே! சாணக்கியனேப் பிறவியிலேயே கோணல் மதி பற்றிக்கொண்டது அன்ருே? அதற்கு மாருக நான் செய்த பிரயத் தனங்கள் எல்லாம் பயன் அளிக்காமற் போயினவே! ஏன் இப்படி?

இவற்றை எண்ணி எண்ணி எத்தனேயோ இரவுகள் உறக்கமின்றிக் கழிந்தனவே! மேலும், சொற்பமாக ஆரம்பித்த காரியத்தைப் பின்பு பெரிதாக்கக் கருதிப் பலனேக் கொடுக்கும் தருணத்தையுடைய தந்திர ரகசியங்களின் சாதனேயை யாரும் அறியாதபடி வெளிப்படுத்த மனத் திற்குள்ளாகவே ஆராய்ச்சி செய்துகொண்டு, பெருக்கெடுத்த காரியங் களேயும் சுருக்கமாக்கி வேலேசெய்யும் என் போன்ற அமைச்சரின் கஷ் டங்களே, நாடகங்களே எழுதும் மகா கவிகளன்றி மற்றெவர் அறிய முடியும்? ஆம்; அவர்க்கும் உண்டு இத்தகைய இன்னல்கள்! ஆகவே அந்தத் துராத்துமா சாணக்கியப் பயல் . . . .

வாயிற்காப்போன்: (அருகே வந்து) ஜயம் அடைக! ஜயம் அடைக!

ராக்ஷஸன்: ஏமாற்றப்படக் கூடியவனு?

வா—கா: மந்திரி, எஜமான்!

ராக்ஷஸன்: (இடது கண் துடிப்பதைக் காட்டித் தனக்குள்) ஜயம் பெறுகிறவன் சாணக்கியப் பயல்! ஏமாற்றம் அடைபவன் மந்திரி ராக்ஷஸன்! இவற்றைத் துடிக்கிற என் இடது கண் மூலம் அசரீரி சொல் கிறது. ஆயினும் முன் வைத்த காலேப் பின் வைக்கப் போவதில்லே. (வெளிப்படையாக) அப்பா, யாது செய்தி?

வா—கா: ஐய! பாடலீபுரத்திலிருந்து கரபகன் வந்திருக்கிறுன். தங்களேப் பார்க்க விரும்புகிறுன்.

ராக்ஷஸன்: தடையில்லே; அனுப்பு.

வா—கா: உத்தரவு! (வெளியே கரபகனிடம் சென்று) ஐய! இதோ, அமைச்சர் அழைக்கிறுர், போ.

கரபகன்: (ராக்ஷஸனிடம் வந்து) அமைச்சர் நீடூழி வாழ்க!

ராக்ஷஸன்: (திரும்பிப் பார்த்து) கரபக! உட்காரு.

கரபகன்: கட்டளே! (தரையில் உட்காருகிறுன்)

ராக்ஷஸன்: (தனக்குள்) இவன் எதற்காக அனுப்பப்பட்டான்? காரியங்களின் கலவரத்தில் இதுகூட நினைவுக்கு வரவில்லையே!

(யோசித்துக்கொண்டிருக்கையில் கரத்தில் பிரம்புடன் இன்னொருவன் பிரவேசிக்கிறான்)

அவன்: ஐயா! விலகுங்கள்! விலகுங்கள்! வழிவிடுங்கள். ஏன்? கண்ணில்லையா உங்களுக்கு? கொடுத்து வைக்காதவர்கள் மங்களம் பெருகும் தெய்வங்கள்பாலும், மன்னர்களிடமும், நெருங்கிப் பழகுவது இருக்கட்டும்; தரிசனத்திற்கே அல்லவா தாளம்போட வேண்டும்?

(மேலே பார்த்து)

என்ன நீங்கள் கேட்பது? எதற்காக விரட்டுகிறேன் என்று? "இதோ இளவரசர் மலயகேது, தலைவலியோடு இருக்கும் அமைச்ச ராக்ஷஸரைப் பார்த்துப் போக இந்த வழியாக வருகிறார்" என்பதை, நான் உங்களுக்குச் சொல்லி விரட்டுகிறேன்.

(பாகுராயணனுடனே மலயகேது முன்னாலே வரக் கஞ்சுகி பின்னே வருகிறான்)

மலயகேது: (பெருமூச்செறிந்து, தனக்குள்)

என் தந்தை மரித்து இன்றைக்குப் பத்து மாசங்கள் மறைந்து போயின. இருந்தும் ஆண்பிள்ளை யென்று வீண் பெருமை படைத்த நான் அவருக்காக இதுவரையில் ஒரு கை ஜலமேனும் இறைத்தேன் இல்லை . . ஆம்.

அதற்காகத்தான் முன்னமே சபதம் செய்திருக்கிறேனே, "கையிலுள்ள கல் இழைத்த வளையல்கள் உடையும்படி மார்பிலே அறைந்து கொண்டும், மேல் துணி நழுவியதுகூடத் தெரியாமல் 'ஓ' வென்று கல்லுங்கரையக் கதறியழுதும், பூமியில் விழுந்து புரண்ட என் மாதாவுக்குத் துக்கத்தினால் விளைந்த அந்த நிலையான மாறுபாட்டைச் சத்துரு ஸ்திரீகளிடம் நான் புகுத்திய பின்னரே தந்தைக்குத் தண்ணீர் வார்ப்பது" என்று.

ஒன்று, சுத்த வீரர்க்கு உரியதான என் பிதா யுத்தத்தில் காட்டிச் சென்ற வழியைப் பின்பற்ற வேண்டும்; இன்றேல், என் மாதாவின் நயனங்களில் இருக்கும் நீர்த்தாரையை அப்படியே பெயர்த்து எடுத்துப் பகைவர் பெண்டிரின் நேத்திரங்களில் பதிய வைக்கவேண்டும்.

(வெளிப்படையாக) ஐயா! ஜாஜலீ! நாம் ஒருவர் மட்டுமே திடீரென ஏகி அமைச்ச ராக்ஷஸருக்குச் சந்தோஷத்தை உண்டாக்க வேண்டுமென்று ஆவலுறுகிறோம்; ஆகையால் அவசியமின்றிச் சிரமத்தை ஏற்று நம்மைத் தொடரவேண்டா மென்று அவ்வரசர்களுக்கெல்லாம் அறிவித்து விடும்.

கஞ்சுகி: ராஜகுமார! அவ்வாறே செய்கிறேன். (திரும்பி மேலே பார்த்து) அரசர்களே! இளவரசர் கட்டளை; யாரும் அவர் பின்னால் வரக்கூடாது.

(பார்த்துவிட்டுச் சந்தோஷத்துடன்)

இளவரசே! பார்த்தீர்களா! தங்கள் உத்தரவைக் கேட்டவுடன் எல்லா அரசர்களும் திரும்பிவிட்டார்கள்.

'மர மர' வென்று ஓசை கிளப்பும் கடிவாளங்களை இழுப்பதனால் மிகவும் வளைந்து பருத்த பிடரிகளையுடைய குதிரைகள், சிலரால் நிறுத் தப்பட்டுவிட்டன; அப் புரவிகள் வானத்தைத் தம் குளம்புகளால் வெட்டுவனபோல முன்னங் கால்களைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றன.

மற்றும் சிலர், வேகம் தடைப்பட்டதனால் ஒலிக்காத கழுத்து மணி களையுடைய வேழக் கூட்டங்களுடன் திரும்பிவிட்டனர்.

சரித்திரம் எல்லை மீறுவதில்லை என்பதைப்போல் இவர்களும் தங் கள் கட்டளையைக் கடப்பதில்லை.

மலய: ஐயா! ஜாஜலீ! நீரும் உம்முடன் வந்தவர்களைப் பின்பற்றிப் போம்; பாகுராயணன் மட்டும் நம்முடன் வரட்டும்.

கஞ்சுகி: அவ்வண்ணமே!

(வேலைக்காரனுடன் போகிறான்)

மலய: அன்பா! பாகுராயணா! பத்ர படன் முதலியோர் நம்மை வந்து அடைந்தது ராக்ஷஸனை உத்தேசித்து அல்லவாம்; சந்திரகுப்தன் துஷ்ட மந்திரியான சாணக்கியனோடு சகவாசம் கொண்டதால் அவர் களுக்கு அவ்விடத்தில் வெறுப்புத் தோன்றியதாம்; அதனுடன் நம் மிடம் சில நற்குணங்களைக் கண்டார்களாம். ஆதலால் நம் சேனாபதி 'சிகர சேனன்' மூலமாக நம்மை வந்து அடைந்தார்களாம். அவர்கள் இவ்வாறு என்னிடம் கூறினார்கள். எவ்வளவு யோசித்துப் பார்த்தா லும் அவர்கள் சொன்னதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை.

பாகுராயணன்: இளவரசே! விளங்காதவாறு இதில் ஒன்றும் புதி யது இல்லையே! நற்குணம் அமைந்த ஒருவன் வெற்றிபெற விரும்பு வானாயின் அத்தகைய உதவி புரியும் பலவானை ஓர் அன்பன் மூலமாகத் தான் நாடவேண்டு மென்பது இதன் பொருள். இது நியாயந்தானே?

மலய: நண்பா! அமைச்ச ராக்ஷஸன் நமக்கு மிகவும் அனுகூல மான மித்திரன்தானே?

பாகு: ஆம், அரசே! ஆனாலும், "ராக்ஷஸன் பகைப்பது சாணக்கி யனையே யன்றிச் சந்திரகுப்தனை யல்ல; ஆகையால், ஒருவேளை சந்திர குப்தன் ஜயத்தால் செருக்குற்ற சாணக்கியனை வெறுத்து மந்திரி பதவி யிலிருந்து விலக்கி விடுவானாயின் அப்போது ராக்ஷஸன், நந்த வம்சத்தி லுள்ள அன்பினால், சந்திரகுப்தனுக்கும் அந்த குலத்தின் தொடர்பு உண்டு என்னும் காரணத்தினாலும், பணம், பந்து, நட்பு இவைபோன்ற ஆசையாலும், சந்திரகுப்தனுடன் சமாதானம் செய்து கொள்ளலாம். தன் மூதாதைகள் காலந்தொட்டு வந்தவன் என்னும் விசுவாசத்தால் சந்திரகுப்தனும் ராக்ஷஸனை ஏற்றுக் கொள்ளலாம். அந்தத் தருணத் தில் தங்களுக்கு எங்களிடம்கூட நம்பிக்கையில்லாது போய்விடும்" என் பதுதான் அவர்கள் கூறியதன் பொருள்.

மலய: நியாயந்தான்! பாகுராயணா! ராக்ஷஸன் இல்லத்திற்கு ஏக வேண்டும்.

பாகு: செல்வோம்! வாருங்கள்! (சென்று) இதுதான் அவர் வீடு. உள்ளே போகலாம்.

மலய: போவோம். (இருவரும் போகிறார்கள்)

ராக்ஷ: ஆம்; நினைவிற்கு வந்தது. (வெளிப்படையாக) குசும புரத்தில் வைதாளிகன்—ஸ்தன கலசனை நீ பார்த்தாயா?

கரபகன்: ஆம்; அமைச்ச! பார்த்தேன்.

மலய: (ஒருபுறமாக) அன்ப! குசுமபுரத்தின் விருத்தாந்தத்தைத் தெரிந்து கொள்ள நாம் சமீபத்தில் போகவேண்டியதில்லை. ஏனெனில், மந்திரிகள், மன்னவரின் மந்திராலோசனைக்குப் பங்கம் வராதவாறு எதிரில் ஒருவிதமாகவும், மனம் விட்டுத் தனிமையில் பேசும்போது வேறு மாதிரியாகவும் சம்பாஷிப்பார்கள்.

பாகு: குமாரர் திருவுள்ளம்.

ராக்ஷ: ஆமாம், அந்தக் காரியம் பூர்த்தியாகிவிட்டதா?

பாகு: தங்கள் அருளால் முடிந்தது.

மலய: என்ன காரியம் அப்பா அது?

பாகு: அரசே! ரகசியத்தின் சிகரம் அல்லவா மந்திரியின் விஷயம்? இதற்குள் அதை அறிந்துகொள்ள இயலாது. தாங்கள் முழுக் கவன மும் செலுத்திக் கேட்கவேண்டும்.

ராக்ஷ: விவரமாகச் சொல், அப்பா!

கரபகன்: கேளுங்கள்; தாங்கள் என்னை நோக்கி, "ஏ! கரபக! குசுமபுரம் சென்று வைதாளிகன் ஸ்தனகலசனிடம் போய் நாம் புகன்ற தாகக் கூறு; 'கொடிய சாணக்கியன் அரசாக்ஞையை அவமதிக்கும் போதெல்லாம் சந்திரகுப்தனுக்கு ஆவேச உணர்ச்சி உண்டாகும்படி அவனைப் பாடச்சொல்" என்று உத்தரவிட்டீர்களல்லவா?

ராக்ஷ: உம்! உம்!

கரபகன்: அப்புறம் நான் பாடலீபுரம் போய் ஸ்தனகலசனிடம் இதனைத் தெரிவித்தேன்.

ராக்ஷ: உம்! உம்!

கரபகன்: அந்தத் தருணத்திலே நந்தகுல நாசத்தால் வருத்த மடைந்திருக்கும் குடிகளின் மனத்தைச் சந்தோஷப்படுத்துவதற்காகச் சந்திரகுப்தனால், நிலாக் கொண்டாட்டம் நிறைவேற்றும்படி முரசு அறைவிக்கப்பட்டது. நெடுநாளைக்கு அப்புறம் விழா நடப்பதனால் பிரிந்திருந்த நண்பரோடு சேர்ந்ததுபோல, ஜனங்கள் அந்தக் கொண் டாட்டத்தை ஆவலுடன் வரவேற்றனர்.

ராக்ஷ: (கண்ணீர் வடித்து) ஆ! தேவா! நந்தா! சகல புவனங்களை யும் உவகையில் ஆழ்த்தும் ராஜ சந்திரனாகிய உன்னை இழந்த நிலவுக்கு, அற்பமான ஆம்பல் பூக்களுக்கொப்பான இந்தப் பூவுலகுக்கு மட்டுமே ஆனந்தத்தை அளிக்கும் இந்தச் சந்திரனிலிருந்து (சந்திரகுப்தனிட மிருந்து) எவ்வாறு எழில் ஏற்பட்டுவிடும்? உம்; அப்புறம்?

கரபகன்: அமைச்ச! பிறகு பிரஜைகளின் கண்களுக்குக் களிப் பூட்டும் அந்தக் கொண்டாட்டத்தை அவர்கள் விருப்பத்துக்கு மாறு

45963
015:248
31J8
MADURAI UNIVERSITY LIBRA

கவே தீய சாணக்கியன் தடை செய்துவிட்டான். அதே சமயம் சந்திர குப்தனுக்கு ஆவேச மூட்ட வல்ல சுலோகத்தை ஸ்தனகலசன் பாடினுன்.

ராக்ஷஸன்: என்னவென்று பாடினுன்?

கரபகன்: ''உவமையற்ற வல்லமைக்கு உறைவிடமாகி....மாட் டார்கள்'' (என்பதை அப்படியே பாடிக் காட்டுகிருன்)

ராக்ஷ: பேஷ்; ஸ்தனகலசா! தருணத்திலே ஊன்றிய விதை கட் டாயம் பலனைக்கொடுக்கும்; ஏனெனில், தனது இஷ்டத்துக்கு இடை யூறு விளைவதைச் சாமானியனும் சகிக்கமாட்டான். அப்படியிருக்க ஆக்ஞா சக்கரத்தையுடைய அரசனைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? உம்; பின்னர்?

கரபகன்: உடனே, தனது உத்திரவு உதறித் தள்ளப்பட்டதைக் கண்ட சந்திரகுப்தன் மனங்கலங்கினுன்; அப்போது அவன் தங்கள் பெருந்தன்மையை மிக மிகச் சிலாகித்துப் பேசிச் சாணக்கியப் பயலை வேலையினின்றும் நீக்கிவிட்டான்.

மலய: பாகுராயணு! சந்திரகுப்தன் ராக்ஷஸனைப் புகழ்ந்து பேசி யதிலிருந்து அவனுக்கு இவன் பேரில் விசுவாசம் இருப்பது தெள்ளெனத் தெரிகிறது.

பாகு: குமார! குணத்தைப் புகழ்ந்ததால் மாத்திரமன்று; சாணக் கியனைத் தள்ளி விட்டதா லுந்தான்.

ராக்ஷ: ஆனுல், சாணக்கியன்மீது வருத்தம் உண்டாக்கியது, 'சந்திரிகை உற்சவத்தைத் தடுத்து விட்டான்' என்னும் இந்த ஒரே காரணந்தானு அல்லது வேறு ஏதேனும் உண்டா?

மலய: பாகுராயணு! சந்திரகுப்தன் சினத்திற்கு வேறு முகாந் தரத்தையும் இவன் ஆராய்வதன் நோக்கமென்ன?

பாகு: குமார! விஷயம் இது. மதியூகியான சாணக்கியன் நிஷ் காரணமாக ஏன் சந்திரகுப்தனுக்குக் கோபமூட்டப் போகிருன்? நன்றி மறவாத சந்திரகுப்தனும் எதற்காகத் தனக்குச் சாணக்கியனிடமுள்ள கௌரவத்தைக் களங்கப்படுத்துவான்? ஆகையால், இது ஏதோ ஒரு பெரிய காரணத்தால்தான் நேர்ந்திருக்க வேண்டுமென்றும் அது நீடித் திருக்கும் என்பதுமே அவன் சித்தாந்தம்.

கரபகன்: சந்திரகுப்தன் கோபத்திற்கு இன்னெரு காரணமும் உண்டு.

ராக்ஷ: என்ன? என்ன?

கரபக: முதலில், குமார, மலயகேதுவும் தாங்களும் வெளியேறிய போது சாணக்கியன் ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டானென்பது.

ராக்ஷ: (சந்தோஷத்துடன்) நண்ப! சகடதாஸ! மிகவும் நன்று! சந்திரகுப்தன் இப்போது நம் கைக்கு வந்துவிடுவான்.

சகடதாஸன்: இப்போது சந்தனதாஸனுக்கும் விடுதலை. தாங் களும் பெண்டு பிள்ளைகளுடன் போய் இருக்கலாம். ஜீவசித்தி முதலி யோரின் கஷ்டமும் விடிந்தது.

பாகு: (தனக்குள்) ஜீவசித்தியின் கஷ்டம் நீங்கியது நிஜமே.

மலய: நண்ப! ''சந்திரகுப்தன் இப்போது கைக்குள் வந்துவிடுவான்'' என்றதற்கு அர்த்தமென்ன?

பாகு: வேறென்ன? ''சாணக்கியனை இழந்த சந்திரகுப்தனை வசப்படுத்துவது வெகுசுலபம்'' என்பது அதன் கருத்து.

ராக்ஷ: சரி, வேலையிலிருந்து விலக்கப்பட்ட அந்தப் பயல் இப்போது எங்கே?

கரபகன்: பாடலீபுரத்தில்தான் இருக்கிறான்.

ராக்ஷ: (கோபத்துடன்) அங்கேயே இருக்கிறானா? தபோ வனம் போகவில்லையா? மறுபடியும் பிரதிக்கினை ஏதும் செய்துகொள்ளவில்லையா?

கரபகன்: அமைச்ச! காட்டுக்குப் போவதாக மட்டும் என் காதில் பட்டது.

ராக்ஷ: (ஆத்திரத்துடன்) சகடதாஸ! இது பொருத்தமாகவில்லை. பார். பூலோக இந்திரனாகிய நம் அரசன் முதற் பீடத்திலிருந்து தள்ளிய அவமானத்தையே பொறுக்காதவனான மானம் மிகுந்த சாணக்கியன், தன்னாலேயே பதவிபெற்ற மௌரியன் புரிந்த இப் பெரும் பிழையை எப்படிச் சகிப்பான்?

மலயகேது: பாகுராயணா! சாணக்கியன் அரணியம் போவதிலோ மறுபடியும் சபதம் செய்துகொள்வதிலோ இவனுக்கு வருவதென்ன?

பாகு: குமார! இது எட்டாத விஷயம் அல்லவே! சாணக்கியன் எவ்வளவுக்கு எவ்வளவு தூரப்போகிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு இவனுக்கு நன்மையே.

சகட: அமைச்ச; ஐயம் எதற்கு? பொருத்தமாகவே இருக்கிறதே! நவமணிகளின் ஒளி வீசும் கிரீடங்களையுடைய அரசர்களின் முடிமீது அடிபதித்து நிற்கும் மௌரியன், தன் உப்பை உண்ணுவோரே தன்னை அவமதிப்பதை எவ்வாறு மன்னிக்கமுடியும்? மேலும் சாணக்கியன் கோபமுள்ளோனே ஆயினும் மாரணப் பிரயோகம் முதலிய காரியங்களைச் செய்வதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நன்றாக உணர்ந்திருக்கிறான். தவிரவும், ஒருமுறை தன் சபதத்தை நிறைவேற்றிய அதிர்ஷ்டம் இனிமேலும் தான் செய்யப் புகும் கருமங்களுக்குக் கை கொடுக்குமென்பது என்ன நிச்சயம் என்ற அச்சத்தாலும் மீண்டும் பிரதிக்கினை ஆயுதத்தைப் பற்றாதுவிட்டிருக்கலாம்.

ராக்ஷ: உண்மைதான், சகடதாஸ! நீ கரபகனை அழைத்துப்போய்க் களைப்பாறச் செய்!

சகடதாஸன்: அப்படியே! (கரபகனுடன் போகிறான்)

ராக்ஷ: நானும் இளவரசரைக் காணவேண்டும்.

மலய: இதோ சேவிக்க நானே வந்துவிட்டேன்.

ராக்ஷ: (திரும்பிப் பார்த்து) ஓ, குமாரரே வந்துவிட்டாரே! (ஆசனத்திலிருந்து எழுந்து) இதோ ஆசனம். அங்கீகரியுங்கள்.

மலய: உட்காருகிறேன்; தாங்களும் வீற்றிருங்கள். (இருவரும் அமர்ந்தபின்) தலைவலி கொஞ்சம் தணிந்திருக்கிறதா?

ராக்ஷ: தங்களுக்கு 'இளவரசர்' என்னும் பெயர் மாறி 'மஹா ராஜா' என்ற பெயர்வரும் வரையில் என்னுடைய தலைவலி எவ்வாறு குறையும்?

மலய: ஐய! தங்கள் குறியும் தவறுமா? ஆனாலும், நாம் தகுந்த பலத்தைத் திரட்டிக்கொண்டு தயாராயிருந்தும், இன்னும் எவ்வளவு காலம் இவ்வாறு எதிரியின் பலவீனத்தை எதிர்பார்த்துக்கொண் டிருப்பது?

ராக்ஷ: குமார! இதற்கு அப்புறமும் காலந் தாழ்த்த முடியாது; கிளம்பும் சத்துருவை ஜயிக்க!

மலய: ஆயின், அமைச்ச! இப்போது பகைவன்பால் ஏதேனும் பலவீனம் காணப்படுகிறதா?

ராக்ஷ: அதற்கும் சந்தேகமா?

மலய: எப்படி?

ராக்ஷ: சாணக்கியன் பிரிவுக்கு மிஞ்சின பலவீனம் சந்திரகுப்த னுக்கு வேறென்னவேண்டும்!

மலய: அமைச்ச! மந்திரியை இழந்தது மன்னனுக்கு பலவீனமா?

ராக்ஷ: குமார! மற்ற அரசர்களுக்கு ஒருகால் அப்படியில்லாமல் இருக்கலாம்; சந்திரகுப்தனுக்கு மட்டும் அவ்வாறல்ல.

மலய: இல்லை, ஐயா! சந்திரகுப்தனுக்குத்தான் இது ஒரு பொருட் டல்ல?

ராக்ஷ: காரணம்?

மலய: சாணக்கியனுடைய தீச்செயல்களே சந்திரகுப்தனுடைய குடிகளின் அன்பிலாமைக்குக் காரணம். அவன் நீக்கப்பட்டதால் ஏற் கெனவே சந்திரகுப்தனை நேசித்த பிரஜைகள் இப்போது இன்னும் அதிகமான அன்பை அவனிடம் செலுத்துவார்கள்.

ராக்ஷ: குமார! அது தவறு. இங்கே குடிகள் இரண்டு பிரிவாக இருக்கிறார்கள். சந்திரகுப்தனைச் சார்ந்து நிற்போர் சிலர்; நந்த மரபுக்கு நட்பளிப்பவர் பிறர். இவர்களில் சந்திரகுப்தனை விரும்புவோரும் வெறுப்புறுவதற்குக் காரணம் சாணக்கியனுடைய குற்றங்கள். ஆனால் மற்றையோர்க்கோ தந்தைவமிசமான நந்தவிருக்ஷத்தை நாசம்செய்த துயரமும் வெகுளியும் இவனிடம் துவேஷத்தை மூட்டிவிட்டன. இருப் பினும் புகலிடம் வேறு இல்லாமையால் சந்திரகுப்தன் குடை நிழலி லேயே இருந்துவருகின்றனர். பகைவனை அழிக்கும் பராக்ரமசாலியான உம்மைப் போன்ற ஒரு சுத்த வீரனை அவர்கள் கண்டுவிட்டால் உடனே வேந்தனை விட்டு வீரனுடன் சேர்ந்துகொள்வார்கள். இதற்கு உதார ணம் நாமேயாகும்.

மலய: அமைச்ச! சந்திரகுப்தனை நாம் எதிர்க்கவேண்டி யிருப்ப தற்கு மந்திரியின் பிரிவு தவிர மற்றக் காரணம் ஏதேனும் உண்டா?

ராக்ஷ: இருப்பினும், மற்றவை கிடக்கட்டும். இதனைவிடச் சிறந்தது இன்னொன்று கிடையாது.

மலய: அமைச்சரே! என்ன அப்படிக் கூறிவிட்டீர்கள்? சந்திரகுப்தன் அரசாங்கப் பொறுப்பை வேறொரு மந்திரிக்கு வழங்கியோ, அல்லது தானே வகித்தோ நம்மை எதிர்த்து நிற்க இயலாதா?

ராக்ஷ: கனவிலும் முடியாது!

மலய: ஏன்?

ராக்ஷ: குமார! சுயபுத்தியை உபயோகப்படுத்துவோர்க்கு நீர் புகன்றது ஒருவாறு சாத்தியமாகலாம். ஆனால் எந்நாளும் மந்திரியின் கைப்பொம்மையாகவே இருந்துவிட்ட, உலகமறியாத குருடனான அந்தக் கொடிய சந்திரகுப்தனுக்கு இது எண்ணுதற்கும் இயலாத காரியம். ஆதலால் எப்படி எதிர்ப்பான் அவன்?

மேலும் ராஜ்யலக்ஷ்மி எப்போதும் மந்திரி என்னும் மலையுச்சியின் மேல் ஒரு காலையும், மன்னனின் மடமை என்னும் பள்ளத்தாக்கிலே மற்றொரு காலையும் வைத்து நிற்கிறாள். பெண்மையின் இயல்புப்படி அவள் இந்த இம்சையைத் தாங்கமுடியாமல் இவ்விருவரில் எவனையாவது ஒருவனை விட்டு அகன்றுவிடுவாள் என்பது திண்ணம்.

தவிரவும் பால் மணம் மாறாத குழந்தை, தன் தாயைப் பிரிந்தால் தவிப்பதேபோல், உலக ஞானம் இல்லாத எளிய அரசனும் தன் பாரத்தை எல்லாம் சுமந்துவந்த மந்திரி இறந்துவிட்டால் தானும் மதி குன்றி வாடிக் கிடப்பான்.

மலய: (தனக்குள்) நல்ல வேளை! நான் அமைச்சனது விளையாட்டுக் கருவியாக இருக்கவில்லை!

(வெளிப்படையாக) தாங்கள் சொல்வது உண்மையே; ஆயினும் பகைவனை எதிர்க்கப் பல முகாந்தரங்கள் இருந்தும் மந்திரி இல்லாத காரணம் ஒன்றையே ஊன்றுகோலாய்க் கொண்டு போர் தொடங்குவதால் கட்டாயமாய் வெற்றி கிடைக்கும் என்பதில்லையே?

ராக்ஷ: ஏன் இல்லை? வெற்றி நம் கையில்; நிச்சயம். ஏனெனில், எதிர்க்கப் போகும் தாங்களோ இணையில்லாத வன்மை வாய்ந்த உத்தம அரசர். நகரவாசிகளோ நந்தன்மீது பாசங்கொண்டவர்கள். நகரத்தை ஆளும் கட்டுப்பெட்டியான மௌரியனோ சிங்காதனத்துக்குப் புதியவன். பதவியிழந்த சாணக்கியனோ, "இவன் எக்கேடு கெட்டால் என்ன?" என்று உதாசீனமாய் இருக்கிறான். சுதந்தர புருஷனாக உள்ள நான் (சிறிது வெட்கி) வழி காட்டுவதில் மட்டும் முனைந்திருப்பேன். இவ்வளவும் கைகூடிய பின்பு, நமது வெற்றிக்குத் தடையேது!—தங்கள் ஆயத்தம் ஒன்று தவிர?

மலய: அமைச்ச! அங்ஙனமிருப்பின் தருணத்தில் போர்புரியாது ஏன் வாளாவிருக்கிறீர்கள்?

எனது வேழக் கூட்டங்கள் தமது இறுத்துப் பருத்த தேகங்களோடு பாடலீபுரத்தின் நதிக் கரையிலுள்ள இருண்டு உயர்ந்த காடுகளிற் புகுந்து, சதா தம்முடைய கன்னங்களிலே பெருகும் மத ஜலத்தை வற்

ருத அந்த நதி ஜலத்துக்குக் காட்டி அதனை நாணமுறச் செய்து, அவ் வாற்று நீரை அறவே குடிப்பதற்கு இது ஏற்ற காலமாகும்.

மேலும், அந்த ஆறு ஓசையிடும் அலைகளைக்கொண்டது, என் யானைகளும் சப்திக்கும் வண்டுகளால் சூழப்பட்டவை. அந்த நதி வெள் ளத்தால் தாக்கித் தனது கரைகளைத் தகர்த்து வீழ்த்தும் இந்த வேழங் களும் தம் தந்தங்களால் கரைகளைக் குத்தி இடிக்கும் சுபாவமுடையன. அந்தப் பிரவாகம் சிவப்பு நிறமாயிருப்பது போன்று இக் கரிகளும் செந் தூரம் பூசப்பட்டபோது சிவப்பாகக் காணும். அல்லாமலும், முகிற் கூட்டம் எவ்வாறு வரிசை வரிசையாய்க் கிளம்பி இடிகள் முழங்கிடச் சந்தத் தாரையாக மழை பொழிந்துகொண்டே போய் விந்திய மலை யைத் தாக்குமோ அவ்வண்ணமே என் யானைக் கூட்டங்களும் அணி யணியாகப் புறப்பட்டுப் போய் பிளிறும் ஒலியால் உலகமே செவிடுபட மத ஜலத்தைப் பெருக விட்டுக்கொண்டே எதிரியின் நகரத்தை முற் றுகையிடப் போகின்றன.

(பாகுராயணனுடன் போகிறான்)

ராக்ஷ: யாரடா அங்கே?

பிரியம்வதன்: (ஓடிவந்து) அடியேன் காத்திருக்கிறேன். கட்டளை எதுவோ?

ராக்ஷ: பிரியம்வத! வாசலில்போய் ஜோதிட நிபுணரில் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து வா.

பிரியம்: உத்தரவு (போய் வந்து)
சுவாமீ! க்ஷபணகர் இருக்கிறார்.

ராக்ஷ: (தனக்குள்; சகுனம் சரியாயில்லை என்று எண்ணி) என்ன? ஆரம்பத்திலேயே ஆண்டி தரிசனமா?

பிரியம்: ஜீவசித்தி வந்திருக்கிறார்.

ராக்ஷ: (வெளிப்படையாக) உம்; அவதூதமாகவோ, வேறு வித மாகவோ இல்லாமல் இருக்கட்டும். விகாரத்தை மாற்றி விரைவில் அழைத்து வா.

(பிரியம்வதன் போகிறான்; க்ஷபணகன் வருகிறான்)

க்ஷபணகன்: அறிவீனப் பெரும் பிணிக்கு அருமருந்தை அளிப்பவர் கள் மகான்களான புத்த சந்நியாசிகள். அந்த ஔஷதம் அவர்களு டைய நல்லுபதேசம். அது முதலில்தான் கசக்குமேயன்றி இறுதியில் இனித்து நலத்தை நல்கும். ஆதலின் அந்த மகாத்மாக்களின் கட்ட ளையை எல்லோரும் பின்பற்றி நடவுங்கள்.

(நெருங்கி வந்து)

ஹே! உபாஸக! உனக்குத் தருமம் கிட்டுமாக!

ராக்ஷ: பதந்த! நாம் புறப்படுவதற்கு நன்னாள் ஒன்றைப் பார்த் துக் கூறும்.

க்ஷபணகன்: (ஆலோசித்துவிட்டு) உபாஸக! உற்ற நாள் உணரக் கிடைத்தது. இன்று நடுப் பகலுக்குப் பின்பு முழுமதி சேர்ந்த பௌர் ணமித் திதி மிகவும் சிறந்தது; அதில் ஏழு நாழிகை ஏற்கெனவே செல

வாகிவிட்டது, வடக்கிலிருந்து தெற்கே போகும் உனக்கு நட்சத்திரமும் தக்ஷிணத்தைச் சார்ந்தே இருக்கிறது. அதுவுந் தவிர ஆதித்தன் அஸ்தமிக்கும் அவஸரம்: சந்திரன் தன் முழுவடிவத்தோடு உதயமாகும் சந்தர்ப்பம். கேது உதித்து மறைந்திருக்கும் தருணம். இத் தறுவாயில் புதனுடைய லக்கினத்திலே புறப்பட்டுவிட்டால் பிரயாணம் ஒருபோதும் பின்னடையாது.

ராக்ஷ: என்ன, பதந்த! முக்கியமாகத் திதியே நன்ருயில்லேயே!

க்ஷபணகன்: திதியின் தன்மை ஒரு மடங்கென்ருல் நட்சத்திரமோ நாலு பங்கு! லக்கினமோ அறுபத்து நான்கு பங்கு அதிகமானது. இது வாய் அளப்பு அல்ல! சோதிட சாஸ்திரத்தில் நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ள நியதி! இங்கே லக்கினத்துக்கே முக்கிய ஸ்தானம்; அது திறம் பெற்றுத் திகழ்வதால் மற்றக் கிரகங்கள் மறைதற்கு உரியன. சந்திரனுடைய பலத்தைக் கொண்டு விசேஷ ஊதியம் பெறுவீர். செல்க!

ராக்ஷ: பதந்த! இன்னுமுள்ள இதர சோதிடருடனும் கலந்து முடிவுக்கு வாரும்.

க்ஷபண: ஓ! அது உபாஸகனே செய்யவேண்டியது; நான் வீட்டுக்குப் போகிறேன்.

ராக்ஷ: என்ன—கோபம் வந்துவிட்டதா?

க்ஷப: உனது பேரில்தானே? . . . எனக்கல்ல கோபம்!

ராக்ஷ: மற்ற யாருக்கு?

க்ஷப: (தனக்குள்) அதிர்ஷ்டத்திற்குத்தான். இல்லாவிட்டால் உற்ருரை விட்டுவிட்டு ஊராரை நம்புவாயா? (போய்விடுகிருன்)

ராக்ஷ: பிரியம்வத! நாழிகை என்ன ஆயிற்று? பார்த்து வா.

பிரியம்: அவ்வாறே! (பார்த்து வந்து) கதிரவன் மறையும் தருணம்.

ராக்ஷ: (ஆசனத்திலிருந்து எழுந்து பார்த்து) ஆஹா! மார்த்தாண்டன் மறையும் தறுவாயில் இருக்கிருனே! என்னே! இந்தச் சூரியன் உதயகிரியிலிருந்து கிளம்பினபோது தங்கள் நிழல்களுடனே வெகுதூரம் இவனைப் பின்தொடர்ந்து சென்ற விருக்ஷங்கள் இப்போது பாஸ்கரன் வேருெரு திசையில் சாயும் நேரத்தில் அவனைவிட்டுப் பிரிந்து மிகவும் வேகமாய்த் திரும்பி விட்டனவே! ஆம்! இதைப் போன்றுதான் தலைவனுக்குத் தனம் குறைந்தால், அண்டிப் பிழைத்தவர்கள் அவனைக் கைவிட்டு அப்புறம் போய்விடுகின்றனர்! இதுவே உலக இயல்பு!

(எல்லோரும் போகிருர்கள்)

நான்காம் அங்கம் முற்றிற்று

# ஐந்தாம் அங்கம்

(முத்திரையிட்ட ஆபரணப் பெட்டியையும் ஒரு லிகிதத்தையும் எடுத்துக்கொண்டு சித்தார்த்தகன் பிரவேசிக்கிருன்.)

சித்தார்த்தகன்: ஆஹா! என்ன ஆச்சரியம்! உபாயமென்னும் கொடிக்கு இடம், பொருள், ஏவல் என்னும் குடங்களால் புத்தி என்னும் ஜலத்தை நிறைய ஊற்றிச் சாணக்கியன் அதை நன்ருக வளர்த்துவிட்டார்.

அது இப்போது அரும் பலனை அளிக்கப் போகிறது. முதலில் எழுதி ராக்ஷஸனுடைய கணையாழியால் முத்திரை இடப்பட்ட நிருபத்தை நான் பெற்றுக்கொண் டிருக்கிறேன். இந்தப் பேழைக்கும் அந்த முத்திரை வைக்கப்பட்டுள்ளது. பாடலீபுரத்திற்குப் போகப் பிரயாணமாகினேன்! இதோ போகிறேன்.

(இரண்டடி நடந்து நோக்கி)

என்ன? எதிரில் க்ஷபணகன் வருகிருனே! சந்நியாசியைப் பார்த்துப் போவது சகுனத் தடையல்லவா? ஆம்; இதுவும் எனக்குச் சம்மதமே. ஆகையால் இதற்கு நான் பரிகாரம் செய்ய விரும்பவில்லை.

(க்ஷபணகன் எதிரில் வருகிருன்)

பௌத்த குருமார்களுக்கு வந்தனம். ஏனெனில் அவர்கள் உலகத்தில் உத்தமமான பாதைகளிற் சென்று ஆழ்ந்த அறிவினுல் சித்தியைக் காண முயலுகிருர்கள்:

பதந்தா! வந்தனம்.

க்ஷபணகன்: உபாஸக! அறத்தின் நலத்தை அடைவாயாக! (உற்றுக் கவனித்து) அன்ப! பிரயாணத்திற்கென்று புறப்பட்டிருப்பது போல் தெரிகிறதே.

சித்: எவ்வாறு தெரிந்தது பதந்தருக்கு?

க்ஷப: உபாஸக! கஷ்டமில்லையே. இதில் மார்க்கமென்னும் கப்பலுக்கு மாலுமிபோல் விளங்கும் உனது நிருபமே தெள்ளெனத் தெரிவிக்கிறதே.

சித்: ஓ! பதந்தருக்குப் புரிந்துவிட்டது. பதந்த! தேசாடனம் செய்வதற்காகக் கிளம்பிவிட்டேன். இன்றைக்கு நாள் எப்படி இருக்கிறது?

க்ஷப: (சிரித்து) உபாஸக! க்ஷவரம் செய்துகொண்ட பின்பு ஓணம் கேட்கிருயே?

சித்: பதந்த! இப்போதுதான் என்ன பாதகம்? அனுகூலமாக அமைந்தால் போகிறேன். இல்லையேல் திரும்பிவிடுகிறேன். உள்ளதை உரைப்பீராக!

க்ஷப: உபாஸகர்களுள் நல்லோர் தீயோர் எவராயினும் மலயகேதுவின் ராணுவ அதிகாரிகளிடமிருந்து அடையாளச் சீட்டுப் பெருமல் வெளியே புறப்படுவதே கிடையாது.

சித்: பதந்த! எதற்காக இவ்வாறு?

க்ஷப: உபாஸக, கூறுகிறேன் கேள். முன்பெல்லாம் மலயகேதுவின் வட்டாரத்துக்குள் நுழைவதற்கோ, வெளியேறுவதற்கோ சாத்தியமாயிருந்தது. ஆனுல் இப்போது குசுமபுரம் இவ்விடத்திற்கு மிகவும் சமீ

பத்தில் இருப்பதை உத்தேசித்து அடையாளச் சீட்டு இல்லாதவர்க்கு உள்ளே போகவோ வெளிச் செல்லவோ அனுமதி கிடைப்பதில்லை. ஆகையால் பாகுராயணனுடைய முத்திரை நிருபம் நின்னிடம் இருப்பின் தைரியமாய்ச் செல்; இல்லையேல், காவற்காரர் கையிற் சிக்கிக் கைகால்களில் விலங்கிடப்பட்டு ராஜசபையில் நிறுத்தப்படாமல், வந்த வழியே நிம்மதியாய்த் திரும்பிப் போய்ச் சேர்.

சித்: என்னைப் பதந்தருக்குத் தெரியாதா? நான் அமைச்ச ராக்ஷஸன் அருகிலேயே அமர்ந்திருக்கும் சித்தார்த்தகன் அல்லவா? ஆகையால் அடையாளச் சீட்டு இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னை யார் தடுக்கக்கூடும்?

க்ஷப: உபாஸக! நீ ராக்ஷஸனுக்கல்ல; பிசாசுக்கு வேண்டுமானுலும் வேண்டியவனுக இருக்கலாம். ஆனுல் முத்திரைச் சீட்டு இல்லாமல்மட்டும் வெளியே போகமுடியாது.

சித்: பதந்த! சினம் வேண்டாம். காரிய சித்தி உண்டாகுமாறு நல்வாக்கு நல்கும்.

க்ஷப: உபாஸக! நிறைவேறுக நின் காரியம்! செல்க! யானும் பாகுராயணனிடம் போய்ச் சீட்டுப் பெறுகிறேன்.

(போய்விடுகிருர்கள்)

(பாகுராயணனும் பின்னுல் ஒரு வேலைக்காரனும் வருகிருர்கள்.)

பாகுராயணன்: (தனக்குள்) ஆஹா! ஆரிய சாணக்கியருடைய தந்திரமே விநோதமானது. ஏனெனில்,

அது காரிய ரூபத்தில் வரும்போது ஒரு சமயம் வெளிப்படையாகத் தெரியும்; மற்றொரு வேளை யாதும் அறிய இயலாதபடி ரகசியமாய் மறைந்திருக்கும். இன்னெரு தருணம் பூர்த்தியான உருவைப்போல் பொலிவுடன் விளங்கும். வேறொரு காலம் மிகமிக மெலிந்ததெனத் தோன்றும். இன்னுமொரு பொழுது மூலகாரணமே அழிந்துவிட்டதைப்போல் காணும். சிறிது கழித்துச் சிறந்த பலனைத் திரட்டியளிப்பதைப்போலவும் புலப்படும். ஆஹா! ராஜ நீதியை அறிந்த நிபுணனுடைய உபாயம் விதியைப்போல விசித்திரமானதே!

(வெளிப்படையாக) அன்ப! பாஸுரக! நான் பிரிந்திருப்பது குமாரருக்குப் பிடிக்காது; ஆகையால், கொலு மண்டபத்திலேயே எனக்கும் ஆசனம் போடு.

பாஸுரகன்: அப்படியே (ஆசனமிட்டு) இதோ ஆசனம்; உட்காரலாம்.

பாகு: பாஸுரகா! சீட்டுக்காக யாரேனும் என்னைக் காணவந்தால் உடனே அவர்களை உள்ளே அனுப்பு.

பாஸு: அவ்வண்ணமே! (போகிருன்)

பாகு: (தனக்குள்) அநியாயம்! என்பேரில் நம்பிக்கைவைத்து நட்புப் பூண்டிருக்கும் மலயகேதுவை நானே வஞ்சிக்கவேண்டியிருப்பது எப்படிப்பட்ட கொடுமை?

ஆயினும். நாணமும் நற்குடியும் மானமும் மாபுகழும் மறந்து

ஹீனனுன தனிகனிடம் சிறிய ஊதியத்திற்காக உடலேயே விற்று அவனுக்கு அடிமையாகத் தொண்டுபுரிவோன், நன்மை தீமைகளேப் பகுத்துணரும் மந்திராலோசனேயில் இறங்கலாமா?

(மலயகேது சேவகனுடன் பிரவேசிக்கிருன்)

மலயகேது: (தனக்குள்) ஆஹா! ராக்ஷஸனேப்பற்றி எழும் சந்தேக விபரீதங்களால் கலக்கமுற்றிருக்கும் என் புத்திக்கு எதுவும் நிச்சயமாய்த் தெரியவில்லேயே! ராக்ஷஸனுக்கு நந்தகுலத்திலே வேரூன்றிவிட்ட பக்திக்கு எல்லேயில்லே; அதனுல் அவன், மௌரியனேயும் நந்த மரபினன் தானே என்றெண்ணி, சாணக்கியன் விலகிவிட்டதால் மௌரியனுடன் சௌகரியமாக உறவு பூண்டுவிடுவானு? அல்லது என்னிடம் வைத்திருக்கும் நேசத்தையே நிலேயாக்கித் தான் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றிக்கொள்வானு? இந்த ஐயங்களால் என் உள்ளம் குயவன் சக்கரத்தின்மேல் வைக்கப்பட்ட மண் பாண்டத்தைப் போன்று வெகு நாட்களாகச் சுழன்றுகொண்டிருக்கிறதே!

(வெளிப்படையாக) விஜயா! பாகுராயணன் எங்கே?

விஜயன்: குமார! இதோ, நமது வட்டாரத்திலிருந்து வெளியே போவோருக்குச் சீட்டுக் கொடுக்கும் வேலேயைக் கவனிக்கிருர்.

மலய: விஜயா! சற்றும் ஓசைப்படாமல் நட; மறுபுறம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவன் கண்களேப் பொத்துகிறேன்.

விஜய: கட்டளே!

(பாஸுரகன் வருகிருன்)

பாஸுரகன்: ஐயா, க்ஷபணகர் முத்திரைக்காக வந்திருக்கிருர்; தங்களேப் பார்க்க விரும்புகிருர்.

பாகு: அனுப்பு.

பாஸு: உத்தரவு! (போகிருன்)

க்ஷப: (உடனே) உபாஸகர்களிடம் தருமம் தழைத்தோங்குக!

பாகு: (நிமிர்ந்து பார்த்துத் தனக்குள்) ஓ! இவன் ராக்ஷஸனின் அன்பனுன 'ஜீவசித்தி.'

(வெளிப்படையாக) பதந்தர் போக விரும்புவது ராக்ஷஸன் காரியமாக அல்லவே!

க்ஷப: (காதுகளே மூடிக்கொண்டு) மகா பாபம்! உபாஸக! ராக்ஷஸம், பைசாசம் என்னும் பெயர்கள் கூடக் காதிற்படாத ஓரிடத்திற்கு நான் போகவேண்டும்.

பாகு: பதந்த! சிநேகன் மீது பிரணய கோபம் பெரிதாக இருக்கிறதே! பதந்தர்பால் ராக்ஷஸன் புரிந்த பிழை என்னவோ?

க்ஷப: ராக்ஷஸன் குற்றமிழைக்கவில்லே. என் செயல்களேக் குறித்தே நான் நாணமுறுகிறேன்.

பாகு: பதந்த! என் ஆவலேத் தூண்டிவிடுகிறீரே! கேட்கவேண்டும்.

மலய: (தனக்குள்) எனக்குந்தான்.

பாகு: கேட்க ஆவலுறுகிறேன்.

மலய: நான் கூட!

க்ஷப: உபாஸக! கேட்கத்தகாத இதனைக் கேட்பதால் என்ன பயன்?

பாகு: பதந்த! ரகசியமாயிருந்தால் பகரவேண்டாம்.

க்ஷப: உபாஸக! அவ்வாறு ஒன்றுமில்லை.

பாகு: நானும் சீட்டுக் கொடுக்கப்போவதில்லை,

க்ஷப: (தனக்குள்) இவ்வளவு தூரம் கேட்கையில், இனிக் கூறிவிடலாம். (வெளிப்படையாக) வேறு வழியில்லை; சொல்லிவிடுகிறேன், கேளுங்கள்.

துர்ப்பாக்கியசாலியாகிய நான் பாடலீபுரத்திலிருந்தபோது ராக்ஷஸனுடன் நட்புப் பூண்டு இருந்தேனல்லவா? அந்தச் சமயத்தில் ராக்ஷஸன் ஒரு விஷகன்னிகையை உண்டாக்கி அதனால் பர்வதேசுவரனைக் கொன்றுவிட்டானல்லவா?

பாகு: பதந்த! பிறகு?

க்ஷப: பின்பு, நான் ராக்ஷஸனுக்கு உடந்தையானவன் என்னும் காரணத்தால் சாணக்கியனுடைய கோபத்திற்கு ஆளாகி மானபங்கம் செய்யப்பட்டுத் துரத்தவும்பட்டேன். அதுதான் அப்படி என்றால், இப்போது மீண்டும் ராஜதந்திரங்களில் தேர்ந்தவனான ராக்ஷஸன் முன்னதைப்போன்ற மற்றொரு சதிக்கு அடிகோலி ஆரம்பித்தும்விட்டான். இந்தக் காரியத்தால் நான் மண்ணுலகிலிருந்தே கூடத் துரத்தப்படலாம்.

பாகு: பதந்த! பாதி ராஜ்யத்தைக் கொடுத்துத் தொலைக்கவேண்டுமே என்னும் ஆத்திரத்தால், குறுகிய மதியையுடைய சாணக்கியன், தன் வாக்குறுதியைக் கொல்லமுடியாமையால், பர்வதேசுவரனையே கொன்றுவிட்டான் என்றல்லவோ கேள்வியுற்றோம்.

க்ஷபண: (செவிகளை மூடி) அபாண்டம்! சாணக்கியனுக்கு ''விஷகன்னிகை''யின் விருத்தாந்தமே தெரியாது. இந்தக் கொடுஞ் செயல் புரிந்தவன் ராக்ஷஸனே.

பாகு: பதந்த! முத்திரை தருகிறேன். வா! குமாரரிடம்போவோம்.

மலய: செவியுற்றேன்; மித்திரா!—நண்பன் பகர்ந்த சத்துருவின் சூழ்ச்சியைப்பற்றிய கர்ண கடூரமான வார்த்தைகளைக் கேட்டேன். இப்போதைக்கு நம் தந்தை இறந்து வெகுநாட்களாகியும், இச்சமயம் அந்தத் துயரம் இரு மடங்காகப் பெருகிவிட்டது.

க்ஷப: (தனக்குள்) ஆ! மலயகேதுவே கேட்டுவிட்டான். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. (போகிறான்)

மலய: (வானத்தைப் பார்த்து, நேரில் ராக்ஷஸன் இருப்பதாகப் பார்த்து) ராக்ஷஸ! இது நியாயமே. என் பிதா உன்னை 'நண்பன்' என்று நம்பித் தம் பொறுப்பை எல்லாம் உன்னிடமே விட்டதற்கு நீ, அவரையே கவிழ்த்துவிட்டாய்; அவருடைய சுற்றத்தாரையும் சிநேகிதர்களையும் கண்ணீர் பொழியக் கதறவிட்டாய். ஹே! ராக்ஷஸ!

உண்மையில் ராக்ஷஸனே ஆயினே நீ.

பாகு: (தனக்குள்) இதிலே ராக்ஷஸனுடைய உயிருக்கு ஆபத்து வரக்கூடாதென்பது ஆரியரிட்ட கட்டளே. அதற்காக....ஆம்.... இவ்வண்ணம் செய்கிறேன். (வெளிப்படையாக) குமார! பதருதீர். ஒரு விஷயம் இருக்கிறது; ஆசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்புறம் சொல்கிறேன்.

மலய: (உட்கார்ந்து) என்ன, அன்ப! நீ சொல்ல விரும்புவது?

பாகு: குமார! சாமானிய ஜனங்களுக்கு நட்பும் பகையும் மத்திய நிலேமையும் உண்டாவது அவர்களுடைய சுய மன உணர்ச்சிகளால். ஆனுல், இங்கே பொருளாதார சாஸ்திர நிபுணர்களுக்கு அப்படி இல்லே. அவர்களுடைய மனே வேகம் பொருளே மட்டுமே பற்றி நிற்கிறது. அதனுல்தான் சர்வார்த்த சித்தியை அரசனுக்க வேண்டுமென்று விரும்பிய ராக்ஷஸனுக்குத் தங்கள் தந்தையாரே சந்திரகுப்தனேக் காட்டிலும் பொருள் பறிக்கும் பெரிய விரோதியாகப் புலப்பட்டார். அதனுல் அச்சமயத்தில் இதைச் செய்தது தவறு என்று சொல்வதற்கில்லே. மேலும் பொருளாதார தத்துவம் அப்படித்தான்!

நிதியின் காரணமாக, அது மித்திரனேச் சத்துருவாக்கும்; சத்துருவை நண்பனுக்கும். உயிருடன் இருக்கும்போதே ஒருவனுக்குப் பழைய நினேவுகளே மறக்கச் செய்து மறு பிறவியும் கொடுத்துவிடும். ஆகையால் இந்த விஷயத்தில் அவனே நிந்திப்பதில் பயனில்லே. நந்த ராஜ்யம் நமது கைக்கு வரும் வரைக்கும் ராக்ஷஸனுக்கு நாம் நன் மதிப்புக் கொடுத்தே தீரவேண்டும். நமது கருத்து நிறைவேறிய பின்பு அவனே ஏற்பதா, அன்றி வெறுப்பதா என்பதை ஆலோசித்து அதன்படி நடத்துவோம்.

மலய: நீ மொழிவது மிகமிகப் பொருத்தமானது. அவ்வாறே செய்வோம். ஆம்; இப்பொழுது இவனே ஒழித்துவிட்டால், மக்களிடையே கலவரம்பெருகி அதன் விளேவாக நமது வெற்றிக்கு இடையூறு நேர்ந்துவிடும்.

(ஒருவன் பிரவேசித்து) குமாரருக்கு மங்களங்கள். சாவடிக்காரன் நெடுங்கண்ணன் தகவல் தெரிவிக்கிருன். கரத்திலே ஒரு கடிதம் தாங்கி வெளிச்செல்ல முயன்ற ஒருவன் பிடிக்கப்பட்டிருக்கிருனும். அவனேத் தாங்கள் நேரில் காண வேண்டுமாம்.

பாகு: அவனே இங்கே அனுப்பு.

வந்தவன்: கட்டளே.

(கட்டுண்ட சித்தார்த்தகனும் பின்புறம் சேவகனும் பிரவேசிக்கிருர்கள்)

சித்: (தனக்குள்) குற்றங்களே எண்ணுது குணத்தைமட்டுமே ஏற்றுக்கொள்ள ஆற்றல் அளிக்கும் சுவாமி பக்தியே எம்போலியர்க்குத் தாயாகும்! அதற்கு வந்தனம்!

வந்தவன்: ஐய! இதோ—அந்தப் பேர்வழி.

பாகு: (பார்த்து) என்னப்பா! இவன் புதிய ஆசாமியா அல்லது இங்கேயே எவரிடமேனும் இருந்து பிழைப்பவனு?

சித்: ஐய! நான் அமைச்சர் ராக்ஷஸனுடைய அந்தரங்க ஏவலாள்!

பாகு: ஆயின், வெளிச் செல்லுகையில் நீ ஏன் சீட்டுப் பெற வில்லை?

சித்: சுவாமி! காரியத்தின் நெருக்கத்தால் அவசரமாகப் போய் விட்டேன்.

பாகு: என்ன? செங்கோலைக்கூட லட்சியம் செய்ய முடியாத காரி யம் எத்தகையதப்பா அது?

மலய: பாகுராயணு! அவனிடமுள்ள நிருபத்தை வாங்கிப் பார்.

பாகு: (சித்தார்த்தகனிடமிருந்து கடிதத்தை வாங்கி முத்திரை யைப் பார்த்து) குமார! இதில் ராக்ஷஸன் பெயரிட்ட முத்திரை இருக் கிறது.

மலய: சரி; முத்திரை கலையாமல் உடைத்து எடு.

பாகு: (செய்து) இதோ! (கொடுக்கிறுன்)

மலய: (படிக்கிறுன்)

"க்ஷேமம். எங்கிருந்தோ, யாரோ ஒருவர், எவரோ ஒருவருக்கு, அறிவிப்பதாவது: தாங்கள் எமது விரோதியை விலக்கிவிட்டு உண் மைக்கு உயிர் கொடுத்தது எம் உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது. ஏற் கெனவே ஏற்பட்டுள்ள நமது ஒப்பந்தப்படி, நண்பர்களுக்குச் சொல்லி யுள்ளவாறு கைம்மாறு செய்வதாய் உற்சாகமூட்டி மேலும் மேலும் அவர்களுடைய நேசத்தை வளர்த்து, சத்தியத்தை நிலை நிறுத்தவும், இவ்வாறு அருள்புரிந்தால் இவர்களும் தங்கள் எஜமானன் அழிந்ததும் உதவிபுரிந்த உங்களையே நாடுவார்கள்.

அல்லாமல் இன்னுமொரு விஷயம். தாங்கள் மறந்திருக்கமாட்டீர் கள்; இருந்தாலும் நினைவுக்குக்கொண்டு வருகிறோம்.

இவர்களில் சிலபேர் எதிரியின் நிதியைப் பெற ஆசைப்படுகிறுர்கள்; இன்னும் சிலர் விரோதியான அதிகாரத்தைப் பிடுங்கிக்கொள்ள ஆவ லுறுகிறுர்கள். மற்றும் சிலர், தேசத்தையே விரும்புகிறுர்கள். தாங்கள் அன்புடன் அனுப்பிய ஆபரணங்கள் மூன்றும் வந்து சேர்ந்தன. நாமும் வெற்றுக் கடிதம் கூடாதென்று இந்த நிருபத்துடன் ஒரு பூஷணத்தை யும் அனுப்பி யிருக்கிறோம். ஏற்றருள்க!

தவிரவும், லிகிதத்தில் எழுதப்படாத விஷயங்களை இதனைக் கொண்டுவரும் பரம நண்பன் நேரிலே கூறுவான். கேட்டருள்க!"

மலய: பாகுராயணு! என்ன கடிதம் இது?

பாகு: சித்தார்த்தகா! இந்தக் கடிதம் யாருக்கு?

சித்: தெரியாது ஐயா!

பாகு: துன்மார்க்கா! கடிதம் கொண்டு வந்திருக்கிறுய். இன் ஞருக்கென்பது தெரியாதா? இருக்கட்டும்; யாருக்கு நீ நேரிலே சங்கதிகளைச் சொல்லவேண்டும்?

சித்: (பயந்தவன்போல் நடித்து) உங்களுக்குத்தான்!

பாகு: எங்களுக்கா?

சித்: ஆம்; உங்களிடம் அகப்பட்டுக்கொண்டேன். இனி.... என்ன சொல்வதென்பதே...புரியவில்லை.

பாகு: (கோபத்துடன்) புரியவில்லையா? புரியவைக்கிறேன் பொறு. பாஸுரகா! வா இங்கே! "மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்காது" வெளியே இழுத்துப் போய் உதைத்து உதிரச் செய்.

பாஸு: அப்படியே! (அவனுடன்போய்த் திரும்பிவந்து) முத்திரையிடப்பட்டுள்ள இந்தப் பெட்டி அவன் கட்கத்திலிருந்து விழுந்தது.

மலய: ஓ! வெற்றுக் கடிதமாய் வேண்டாமென்று ஆபரணமும் அனுப்பி யிருப்பதாக்கும். இதனை முத்திரை கலையாமல் திற.

(பாகுராயணன் திறக்கிறான்)

மலய: (பார்த்து) ஆ! நான் என் சரீரத்திலிருந்து கழற்றி ராக்ஷஸனுக்கு அனுப்பிய ஆபரணமல்லவா இது? இப்போது தெளிவாகத் தெரிகிறது சந்திரகுப்தனுக்கு வரையப்பட்ட நிருபம் இது.

பாகு: குமார! இதோ! சடுதியில் தீர்த்துவைக்கிறேன் சந்தேகத்தை; பாஸுரகா மேலும் பூசை போட்டு உள்ளதை வாங்கி விடு.

பாஸு: இதோ செய்கிறேன் (போய்ச் சித்தார்த்தகனுடன் திரும்பிவந்து)

ஐய! அடி மேல் அடி விழுந்ததால், சகலமும் தங்களிடமே தெரிவித்து விடுவதாக உரைக்கிறான் இவன்.

மலய: சரி; நம்மிடமே சொல்லட்டும்.

சித்: (காலில் விழுந்து) ஐய! தயை செய்து அபயதானம் அருள வேண்டும்.

மலய: அடிமைக்கு எந்நாளும் அபயம் உண்டு. உள்ளதை ஒளிக்காதே; உரைத்து விடு.

சித்: குமார! லிகிதம் தந்தவர் ராக்ஷஸன்; கொண்டுபோவது சந்திரகுப்தனிடம்.

மலய: சரி; நேரிலே கூறவேண்டியது யாது?

சித்: குமார! ராக்ஷஸன் சொற்களை அப்படியே உரைக்கிறேன். "என் அன்புக்குரிய ஐந்து அரசர்கள் உன்னிடம் சிநேகம் பூண்டு இருக்கிறார்கள். அவர்கள் குலூதாதிபன் சித்திரவர்மா; மலையரசன் சிம்மநாதன்; காச்மீர தேச மன்னன் புஷ்காக்ஷன்; சிந்து நாட்டுத் தலைவன் சிந்துசேனன்; பாரசீகத்து வேந்தன் மேகநாதன் ஆகியோர். இவர்களில் முதல் மூவர் மலயகேதுவின் தேசத்தையும் மற்றையோர் அவனுடைய யானைப் படையையும் பொக்கிஷத்தையும் பெறுவதற்கு ஆவல் மிகுந்திருக்கிறார்கள். ஆகையால், சாணக்கியனை நீக்கி எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்ததுபோல, இவர்களுக்குத் தாங்கள் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றி அவர்கள் விருப்பத்தையும் ஈடேற்றிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வண்ணம் இயம்பும்படி ராக்ஷஸனால் கட்டளையிடப்பட்டுள்ளேன், ஐயா!

மலய: (தனக்குள்) என்ன? சித்திரவர்மா முதலியோர்கூட எனக்குத் துரோகம் புரிகிருர்களா! அதனுல்தான் அவர்களுக்கு ராக்ஷஸனிடம் அவ்வளவு பிரேமைபோலும்!

(வெளிப்படையாக) விஜயா! நாம் ராக்ஷஸனைக் காணவேண்டும்.

விஜயன்: இதோ அழைத்து வருகிறேன். (போகிருன்)

(ராக்ஷஸன் தன் வீட்டில் ஆசனத்தில் இருந்தபடியே சிந்தனையில் ஆழ்ந்திருக்கிருன்; பணியாள் பின்புறம் நிற்கிருன்)

ராக்ஷஸன்: (தனக்குள்) என் சேனையில் சேர்ந்திருப்போர் அத்தனை பேரும் சந்திரகுப்தருடைய ஆட்களே. அதனுல் என் மனத்திற்குச் சற்றேனும் நிம்மதி இல்லை.

உண்மையான சைனியம் ஒருபோதும் தலைவனைவிட்டு அகலாது; பகைவனிடம் அன்புகொள்ளாது; எதிரியைக் கட்டாயம் ஜயிக்கும் என்னும் நம்பிக்கையை எஜமானனுக்கு உண்டாக்கும். அத்தகைய சேனையாலேயே காரியசித்தி ஏற்படும். அவற்றின்றி 'இரண்டாட்டிலும் ஊட்டுகின்ற குட்டி' களைப்போன்ற புல்லுருவிகள் நிறைந்த வஞ்சகப் படையால் அவமானந்தான் வந்துசேரும்.

தவிரவும், எவர்களுடைய வெறுப்புக்குக் காரணம் எனக்குத் தெரிந்திருக்கிறதோ—யாவரின் பிரிவினையை யான் அறிவேனே—அத்தகையோரே இங்கே குழுமி யுள்ளனர். ஆகவே, (வெளிப்படையாக) பிரியம்வத! குமாரனைச் சேர்ந்த அரசர்களிடம் போ. நாம் சொன்னதாகத் தெரிவி. என்னவெனில்; 'நாளுக்குநாள் குசுமபுரம் நமக்குச் சமீபமாகிறது. ஆகையால் அணிவகுத்த சைனியத்துடன் ஆயத்தமாய்ப் புறப்பட வேண்டும்' என்று சொல். எப்படித் தெரியுமா? 'கசம், மகதம்' இந்த நாட்டு அதிபர்கள் அணிவகுத்த சேனையோடு என்னை பின்பற்றி முதலில் வரட்டும். காந்தார தேசத்துக் காவலர்கள் மிலேச்ச மன்னர்களோடு சேர்ந்து மத்தியில் போக முயற்சி செய்யட்டும். சக நாட்டு வீரவேந்தர் சேதி நாட்டு அரசர்களுடனும், ஹூணர்களுடனும் பின்னுலே தொடர்ந்து வரட்டும். எஞ்சியுள்ள கௌலூதர் முதலிய ராஜாக்கள் மார்க்கத்தில் குமாரனைச் சூழ்ந்து வரட்டும்.'

பிரியம்: அப்படியே தெரியப்படுத்துகிறேன். (போகிருன்)

வாசற்காப்போன்: (வந்து) மங்களங்கள் மந்திரிக்கு! குமாரர் தேவரீரைத் தரிசிக்க ஆவலுறுகிருர்.

ராக்ஷ: அப்படியா? சற்று இரு. யாரடா அங்கே?

சேவகன்: (ஓடிவந்து) காத்திருக்கிறேன் கட்டளைக்கு.

ராக்ஷ: குமாரர் நமக்கு ஆபரணம் அளித்து அணியச் செய்தார். அது இல்லாமல் இப்போது அவரைப் போய்ப் பார்ப்பது மரியாதையாக இருக்காது. ஆகையால் நீ உடனே சகடதாஸனிடம் போய், விலைக்கு வாங்கிய மூன்று நகைகளில் ஒன்றை நாம் கேட்டோமென வாங்கி வா.

சேவகன்; (போய்வந்து) இதோ அணிகலன்.

ராக்ஷ: (வாங்கி அணிந்த பின்பு எழுந்து) எங்கே, அரசர் இருக்குமிடம் காண்பி!

சேவகன்: வருக! வருக!

ராக்ஷ: (தனக்குள்) அரசாங்கம் எனிலே நிரபராதிக்கும் அச்சமே ஏற்படுகிறது. பணியாள் தன் தலைவனுக்குப் பயப்படுகிருன். பிறகு தலைவனைச் சார்ந்த மற்றவர்க்கும் எப்போதும் அஞ்சி நடக்கிருன். இங்ஙனம் தகுதியான தலைவனுடைய பதவியானது, துஷ்டர்களுக்குத் துவேஷத்தை உண்டுபண்ணுவதாய் எப்போதும் வீழ்ச்சியை எதிர் நோக்கும்படி செய்து விடுகிறது.

சேவகன்: (நடந்து சென்று) அமைச்ச! குமாரர் இதோ எழுந் தருளியிருக்கிருர்; சந்திக்கலாம்.

ராக்ஷ: (பார்த்துத் தனக்குள்) ஆஹா! குமாரரது பார்வை அவரது பாதத்தின் மீது அசையாமல் அமைதியாகப் பதிந்திருக்கிறது. கண்கள் ஒப்புக்கு மட்டும் அவரது நுனிக் காலை நோக்குகின்றனவே யன்றி, உண்மையில் அவர் அந்தக் காலைக்கூடச் சரியாகக் கவனிக்க வில்லை. கடினமான காரியங்களின் பளுவினுல் அவருடைய முகசந்திரன் வளைந்திருக்கிறது. அதனைத் தமது கையால் தாங்கிய வண்ணம் அவர் வீற்றிருக்கிருர். (வெளிப்படையாக) குமாரருக்கு வெற்றி.

மலய: ஐயா! வந்தனம்; இதோ ஆசனம்; அமர்வீராக!

(ராக்ஷஸன் உட்காருகிருன்)

மலய: அமைச்ச! நெடுநேரமாய்த் தங்களைக் காணுததால் மனத் திற்கு வேதனை உண்டாகிவிட்டது.

ராக்ஷ: பிரயாண ஏற்பாடுகளில் முனைந்திருக்கிறேன். அதனுல் தங்கள் வருத்தத்திற்குப் பாத்திரமாக நேர்ந்தது.

மலய: என்னென்ன ஏற்பாடுகள் ஆகியுள்ளன?

ராக்ஷ: தங்களைப் பின்பற்றும் அரசர்களுக்கு இவ்வாறு சொல்லி யுள்ளேன். என்னவெனில்;

(''நாளுக்கு நாள் குசுமபுரம்'' என்று தொடங்கி, ''குமா ரனைச் சூழ்ந்து வரட்டும்'' என்பதுவரை முன்பு சொன்ன தையே சொல்லுகிருன்.)

மலய: (தனக்குள்) நன்ருகத் தெரிகிறது! என்னை ஒழித்துவிட்டுச் சந்திரகுப்தனிடம் சேவைபுரிய யார் விரும்புகிருர்களோ அவர்களே என்னைச் சூழ்ந்து வருகிருர்கள். (வெளிப்படையாக)

ஆர்ய: குசுமபுரத்திற்குப் போகிறவனே, அல்லது அங்கிருந்து வருகிறவனே, ஒருவன் இங்கே வந்திருக்கிருன்.

ராக்ஷ: குமார; போகவோ வரவோ இப்போது அவசியமில்லையே; நாமே இன்னும் சில நாட்களில் இங்கே இருக்கப் போகிருேமே.

மலய: (தனக்குள்) வெட்டவெளிச்சம்!

(வெளிப்படையாக) அப்படியாயின் இவனைக் குசுமபுரத்திற்கு எதற்காகத் தாங்கள் கடிதம் கொடுத்து அனுப்பினீர்கள்?

ராக்ஷ: (பார்த்து) சித்தார்த்தகனு? என்ன அப்பா இது?

சித்தா: (கண்ணீர்விட்டு வெட்கத்துடன்) மன்னிக்க வேண்டும்;

மன்னிக்க வேண்டும். அடிமேல் அடி விழுந்தது; என்ன செய்வேன்; தங்கள் இரகசியத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

ராக்ஷ: ரகசியமா? என்ன அது? விளங்கவில்லையே!

சித்: அதுதான் சொன்னேனே! முதுகு நிமிர்ந்து விட்டது. அதனால்......நான்......

(பயத்தால் தலை குனிகிறான்)

மலய: பாகுராயணா! எஜமானனிடம் அச்சம் ஒரு பக்கம்; நாணம் ஒரு புறம். ஆதலால் இவன் சரியாகச் சொல்லமாட்டான். நீயே அவரிடம் கூறு.

பாகு: அவ்வாறே! அமைச்ச, இந்த நிருபத்தையும் நேரிலே புகல வேண்டிய சில விஷயங்களையும் இவன் மூலமாகத் தாங்கள் சந்திர குப்தனுக்கு விடுத்ததாக இவன் விளம்புகிறான்.

ராக்ஷ: (படித்து) குமார! குமார! தெரிந்துவிட்டது; சத்துருவின் சூழ்ச்சியே இது!

பாகு: கடிதம் மட்டுமேயல்ல; இதோ பாருங்கள், தாங்கள் கொடுத்து அனுப்பிய ஆபரணமும் இருக்கிறது. இப்போது, இது யாருடைய சூழ்ச்சி?

ராக்ஷ: (நகையை உற்று நோக்கி) நான் இதை அனுப்பவேஇல்லை. இது குமாரரால் எனக்கு அருளப்பட்டது. பின்பு, ஒரு சமயம் சித்தார்த்தகனுக்கு என்னால் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

பாகு: அமைச்ச, இத்தகைய ஆபரணம்—அதிலும் குமாரரால் தம் சரீரத்திலிருந்து கழற்றி அருளப்பட்டது—இதனை, உதறித் தள்ள இதுதானா இடம்?

மலய: நேரிலே கூறவேண்டியதை இந்தப் புனித நண்பன் புகலுவான் எனவும் வரைந்திருக்கிறீர்களே!

ராக்ஷ: நேரிலாவது, மறைவிலாவது? யாருக்கு யார் கடிதம் கொடுப்பது? இந்த நிருபமே நம்முடையதல்ல.

மலய: அப்படியானால்......இந்த முத்திரை எவருடையதோ?

ராக்ஷ: குமார! கயவர்களால் கபட முத்திரைகூடத் தயாரிக்க முடியும்.

பாகு: குமார, அமைச்சர் கூறுவது மிகவும் சரியானது. சித்தார்த்தக, இந்தக் கடிதம் யாரால் எழுதப்பட்டது?

(சித்தார்த்தகன் ராக்ஷஸன் முகத்தைப் பார்த்துப் பேசாமல் தலை குனிகிறான்.)

பாகு: ஏனப்பா! இன்னும் அதிகமாக உடம்புக்கு வலி உண்டாக்க வேண்டுமா? சீக்கிரம் சொல்லிவிடு.

சித்: ஐயா, சகடதாஸனால் எழுதப்பட்டது.

ராக்ஷ: குமார, சகடதாஸன் எழுதியதாயின் நாம் எழுதியதே ஆகும்.

மலய: விஜயா, சகடதாஸனை அழைத்து வா!

விஜய: ஆக்ஞை.

பாகு: (தனக்குள்) சாணக்கியனுடைய ஆட்கள் தீர்மானம் இல்லாதவற்றைத் தெரிவிக்க மாட்டார்கள். இருப்பினும், ஒரு சமயம் சகடதாஸன் நினைவு கூர்ந்து, ''சாணக்கியன் சொற்படி வரையப்பட்ட நிருபம் இது'' என்று கூறி விடுவானுயின் காரியம் முற்றிலுமே கெட்டு விடும். உடனே மலயகேது சந்தேகங்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தில் ஊக்கம் குன்றி விடுவான். அதனுல்—

(வெளிப்படையாக) குமார! அமைச்சர் எதிரிலே சகடதாஸன் தானே எழுதியதாக ஒப்புக்கொள்ள மாட்டான்; ஆகையால் அவனுல் எழுதப்பட்ட வேறு பிரதி ஒன்றைக் கொண்டுவந்து எழுத்தை ஒத்திட்டுப் பார்த்துவிட்டால் எல்லாம் தெளிவாகிவிடும்.

மலய: விஜயா, சகடதாஸனின் கையெழுத்துப் பிரதி ஒன்றைக் கொண்டு வா.

பாகு: குமார, முத்திரையும் வரவேண்டும்.

மலய: விஜயா, இரண்டையும் எடுத்து வா.

விஜயன்: கட்டளே! (போய் வந்து) குமார, இது சகடதாஸன் தன் கைப்பட எழுதியது. இதோ முத்திரை.

மலய: (இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்து) ஐயா! எழுத்துக்களில் எள்ளளவும் வித்தியாசம் காணவில்லை.

ராக்ஷ: (தனக்குள்) எழுத்துக்கள் ஒத்திருக்கின்றன. ஆயினும் சகடதாஸனே என் நண்பன் என்று நினைக்கும்பொழுது, அவை ஒத்திருக்கவில்லை. . . . . . அல்லது சகடதாஸனேகூட, நிலையற்ற பொருளின் மோகத்தால் அழிவற்ற புகழை அலட்சியம் செய்து, தன் பெண்டு பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக எஜமான பக்தியை ஏன் கொன்றிருக்கலாகாது? . . . . .

இதிலே இன்னும் என்ன சந்தேகம்? முத்திரை மோதிரம் எப்போதும் அவன் விரலிலேயே இருப்பது. சித்தார்த்தகனும் அவனை விட்டுப் பிரியாத நிழல். சூழ்ச்சியே உருக்கொண்ட இந்நிருபம் அவன் எழுதியதே என்பதை அவனுடைய மற்ெருரு கையெழுத்துப் பிரதி நிருபிக்கிறது. ஆகவே சகடன் தந்திரத்தில் தேர்ந்தவர்களான பகைவர்க்கு உடந்தையாகிப் பாழும் உயிரைச் சுமப்பதற்காக உப்பிட்டவனையும் நினையாது உதறித் தள்ளி மனம்வந்து இயற்றிய மோச கிருத்தியமே இது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது.

மலய: ''ஆரிய! தாங்கள் அனுப்பிய ஆபரணங்கள் மூன்றும் வந்து சேர்ந்தன'' என்று வரைந்திருக்கிறீர்களே; அந்த அணிகலன்களில் ஒன்ரு இது?

(உற்றுப் பார்த்து தனக்குள்) ஆஹா! என் தந்தையார் தரித்திருந்த ஆபரணம் அல்லவா இது! (வெளிப்படையாக) ஐயா, இந்தப் பூஷணம் தங்களுக்கு ஏது?

ராக்ஷ: வியர்பாரிகளிடம் விலைகொடுத்து வாங்கினேன்.

மலய: விஜயா, இந்த ஆபரணத்தைப்பற்றி உனக்கு ஞாபகம் வருகிறதா?

விஜயன்: (நன்கு நோக்கிக் கண்ணீர் உகுத்து) குமார! அவர்தாம் மறைந்தார்; நினைவுமா மறைந்து போகும்? ராஜ கம்பீரர் பர்வதேசுவரர் அணிந்திருந்த ஆபரணமாயிற்றே இது!

மலய: ஹே பிதா, அலங்காரப் பிரிய! தாங்கள் வான மீன்கள் சூழ்ந்த மாமதியோடுகூடிய சரத்காலத்து மாலை வேளையைப் போல, உடலுக்கு ஏற்றதான இந்த ஆபரணங்களைப் பூண்டு அழகிய வதனத்துடன் அலங்காரத் தோற்றம் அளிப்பீர்களே, ஆஹா!

ராக்ஷ: (தனக்குள்) பர்வதேசுவரன் பூண்டிருந்தது என்று புலம்புகிறனே—என்ன இது? (வெளிப்படையாக) ஆம்; தெரிந்துவிட்டது. இதுவும் சாணக்கியன் அனுப்பிய வியாபாரிகளால் நம்மிடம் விற்கப் பட்டது.

மலய: ஆரிய! என்ன? என் தந்தையர் தரித்திருந்தவை; வியாபாரிகளுக்கு விற்கக் கிடைத்தன என்றால் சற்றும் பொருத்தமாக இல்லையே. . ஓ! ஆம், ஐய! பொருத்தமாகவே இருக்கிறது. சந்திரகுப்தன் பெரிய லாபத்துக்காக ஆபரணத்தைத் தங்களுக்கு விற்றான். கொடிய நெஞ்சம் படைத்த தாங்கள் அதற்கு விலையாக அவனுக்கு என்னைக் கொடுத்துவிட்டீர்கள்.

ராக்ஷ: (தனக்குள்) ஆஹா! எதிரியின் சூழ்ச்சி போற்றத்தக்கது. ஏனெனில், கடிதம் என்னுடையதல்ல வென்றால்முத்திரை என்னுடையதாக இருக்கிறதே! சகடனுக்கும் எனக்கும் நட்பு முறிந்துவிட்டது என்பதும் நம்பமுடியாததேஆகும். அரசனான மௌரியன் ஆபரணத்தை விற்றான் என்றால் அது கற்பனைக் கதை என்றே அனைவரும் கருதுவர். இதனையும் யோசித்துப் பார்க்கையில் அற்பத்தனமாகப் பதிலுரைத்து வாதாடுவதைக் காட்டிலும் ஒத்துக்கொள்வதே உசிதமெனத் தோற்றுகிறது.

மலய: ஆரியரை ஒன்று கேட்கவேண்டும்.

ராக்ஷ: யார் ஆரியரோ அவரைப் போய்க் கேளும்; நாம் இப்பொழுது ஆரியரல்லாதவர் ஆகிவிட்டோம்.

மலய: மௌரியன் உனக்கு எஜமானனுடைய புத்திரன்; நானோ உன்னிடம் சேவை புரிபவன், அவன் உனக்குப் பொருள் கொடுப்பவன். நானோ நீ கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறேன். அங்கே நீ என்னதான் அமைச்சன் ஆனாலும் அது மரியாதை மிகுந்த அடிமைத் தொழில் தானே? இவ்விடத்திலோ என்றால் முழு அதிகாரமும் உனக்கே உரியது, இப்படி இருக்கையில் எந்த மிதமிஞ்சிய தன்னலம் உன்னை 'அநாரியன்' ஆக்கிவிடுகிறது!

ராக்ஷ: குமார! என்னைக் குற்றவாளியாகவே தீர்மானித்துக் குத்தலாகப் பேசும் உம் வார்த்தைகளாலேயே எனக்குச் சரியான பதிலும் கிடைத்துவிட்டது.

("மௌரியன் உனக்கு" என்று தன்மை முன்னிலைச் சொற்களை மாற்றி யுரைக்கிறான்.)

மலய: (கடிதத்தையும் நகைப்பெட்டியையும் காண்பித்து) இவை என்னவோ?

ராக்ஷ: விதியின் விபரீத விளையாடல்! சாணக்கியன் பேரிலும் பழி சுமத்துவதற்கில்லை. ஏனெனில் நன்றி மறவாத எந்த எஜமானர்கள் இருக்கையில் நாம் அவமானத்தின் சிகரமான அடிமைத் தொழிலில் இருந்தும் அவர்களுடைய புத்திரர் போலவே இருந்தோமோ, உலகத் தின் துலாக்கோல் போன்ற அந்த மன்னர்களும், மனிதரின் முயற்சியை வேரோடு வீழ்த்தும் எந்தப் பாழும் தெய்வத்தால் அழிக்கப்பட்ட னரோ அதே தெய்வத்தின் திருக்கூற்றுகும் இது!

மலய: (சீற்றங் கொண்டு) உம்? இன்னுமா மறைக்கிறாய்? விதி யின் கூற்று! பேராசையின் கூற்றல்ல?..அற்பப் பயலே! தீவிரமான விஷப் பிரயோகத்தால் கொடூரமான ஒரு கன்னிகையை உண்டாக்கி உன்னை நம்பியிருந்த என் தந்தையை முதலிலே நாசம் செய்தாய். நன்றிகெட்டவனே! இருந்தும் உன்னை மரியாதையாக மந்திரிப் பதவி யில் வைத்ததற்கு இப்போது எதிரியின் நல்லுறவைத் தேடி எம்மை வெறும் மாமிச மூட்டைபோல் அவனுக்கு விற்றுவிட முன் வந்தாய்.

ராக்ஷ: (தனக்குள்) பிளவை மீது மற்றொரு கொப்புளம் இது! (வெளிப்படையாகக் காதுகளை மூடிக்கொண்டு) மகாபாவம்! நச்சுக் கன்னியை நான் ஏவவில்லை. நிச்சயமாய் நான் நிரபராதி.

மலய: ஆயின், எமது பிதா இறந்தது யாரால்?

ராக்ஷ: ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

மலய: ஓ! ஆண்டவனைப் போய்த்தான் கேட்கவேண்டுமா? சந்நி யாசி ஜீவசித்தியைக் கேட்டால் தெரிந்துவிடாதா?

ராக்ஷ: (தனக்குள்) என்ன விந்தை! ஜீவசித்தியும் சாணக்கிய னுடைய ஒற்றனா? விந்தையிலும் விந்தை! மாற்றான் என் மனத்தை யும் பறித்துக் கொண்டான்!

மலய: (கோபமாக) விஜயா, போ, சேனாதிபதி சிகரசேனனுக்கு நமது ஆக்ஞையை அறிவி.

குலூத ராஜன் சித்திர வர்மா, மலய நாட்டரசன் சிம்மநாதன். காஷ்மீரத்துப் புஷ்கராக்ஷன், சிந்து ராஜன் சுஷேணன், பாரசீக மேகாக்ஷன் ஆகிய இந்த ஐந்து அரசர்கள் ராக்ஷஸனுக்கு நண்பராகி, சந்திரகுப்தனுக்குச் சகாயம் செய்ய எண்ணி நம்மைக் குழி தோண்டிப் புதைப்பதற்காகக் குறி வைத்திருக்கிறார்கள்.

அவர்களில், முதலில் கூறிய மூவர் நம் தேசத்தையே பெறுவதற்கு ஆசை வைத்துவிட்டார்கள். அந்த மூன்று பேரையும் ஆழமாகக் குழி தோண்டி அதிலே இட்டு மண்ணால் மூடவேண்டியது. மற்ற இரண்டு பேரும் யானைப் படையை அடைய எதிர்பார்க்கிறார்கள். அவர்களை யானையின் காலாலேயே இடறச் செய்து யமன் ஊருக்கு அனுப்ப வேண்டியது.

விஜயன்: கட்டளை. (போகிறான்)

மலய: (சினத்துடன்) ராக்ஷஸ! நம்பிக்கைத் துரோகம் செய்த நயவஞ்சக ராக்ஷஸன் அன்று நான்; மலயகேது என்பதை மனத்தில் வை. ஆகையால் எல்லா வகையிலும் சந்திரகுப்தனிடமே போய்ச் சேர்ந்து கொள். போ.

ஆனால், தீய ஒழுக்கம் முப் பயனையும் அழிப்பது போல, உன்னுடன் விஷ்ணுகுப்தன், மௌரியன் இவ்விருவரும் சேர்ந்து வந்தபோதிலும் உங்கள் மூவரையும் முறியடிக்க நமக்கு வல்லமை யுண்டு.

பாகு: குமார, காலம் தாழ்த்தவேண்டாம். குசுமபுரத்தை முற்றுகையிட நமது சேனை விரைந்து கிளம்பட்டும்.

குதிரைகளின் குளம்பு வெட்டுக்களால் மேல் எழுந்த தூசுப் படலம், யானைகளின் மதநீர்ப் பெருக்கால் அடங்கிவிடுமுன் விரைந்து சென்று பகைவருடைய தலைமேற் படியட்டும்.

அவ்வாறே, அவர்கள் பெண்டிரின் வண்டுக் கூட்டமெனக் கறுத்துச் சுருண்ட முன்னுச்சி மயிரை வெளுக்கச் செய்து, ஏழிலைப் பாலை மலர்களின் தூளி பூசியதால் வெண்ணிறமுற்று நறுமணத்தோடு திகழும் கௌட ஸ்திரீகளின் கன்னங்களை அழுக்காக்கட்டும்.

(மலயகேது பரிவாரங்களுடன் போகிறான்)

ராக்ஷஸன்: சீ! கஷ்டம்! எளிய சித்திரவர்மா முதலியோரும் ஒழிந்தனர்; ராக்ஷஸன் விரோதிகளைத் தொலைப்பதற்குப் பதிலாக நண்பர்களை அழிப்பதற்கே அரும்பாடு படுகிறானா?

நான் மகா துர்ப்பாக்கியசாலி! இப்பொழுது என்ன செய்யட்டும்?

தவம் புரியக் காட்டுக்குப் போகட்டுமா? ஊஹூம்; மனத்திலுள்ள பகைமை மாளாத வரையில் தவத்தினால் அந்த மனத்திற்குச் சாந்தி யேது?

அல்லது, எஜமானன் இருப்பிடத்துக்கே ஏகினால்? . . சே! ஸ்திரீகளுக்கல்லவா இது உரியது? . . . . இல்லையேல், கையிலே வாளேந்திப் பகைவன் படையிலே பாய்ந்தாலோ? . . . .

இதுவும் ஏற்றதன்று; ஏனெனில், என் உள்ளத்திலே நன்றி என்பது ஒரு துளியேனும் ஒட்டிக்கொண்டிருக்குமாயின் அது என்னை இந்தத் தீர்மானத்தினின்றும் தடுத்து, சந்தனதாஸனை விடுவிக்கவே முதலில் செலுத்தும்.

(எல்லோரும் போகிறார்கள்)

ஐந்தாம் அங்கம் முற்றிற்று

# ஆறாம் அங்கம்

(ஆடையாபரணங்களை அணிந்து அகமகிழ்ந்து சித்தார்த்தகன் பிரவேசிக்கிறான்.)

சித்தார்த்தகன்: கேசியை அழித்த காரொளி வண்ணன் கேசவன் வாழ்க! மக்களின் கண்களுக்கு மதிதனைப்போன்ற மன்னன் சந்திரகுப்தன் வாழ்க! வாழ்க! சேனையைப் பயன்படுத்தாமலேயே பகைவரை வென்று வெற்றிக்கொடி தாங்கி நிற்கும் வேதிய சாணக்கியனின் நீதிக்கலை நீடூழி வாழ்க!

வெகுநாளைய நண்பனான சமித்தார்த்தகனைக் காணச்செல்கிறேன். (சற்றே நடந்து எதிரே நோக்கி) . . இதோ! குறுக்கே வருகிறதே கும்

பிடப்போன தெய்வம்! ஆம், இவன் என் உயிர்த் தோழன். அருகில் போகிறேன்.

சமித்தார்த்தகன்: (பிரவேசிக்கிருன்; தனக்குள்) சங்கடம் வந்த காலத்தில் சந்திரனைப்போல் சந்தோஷமளிக்கும் அன்பர்கள்; கொண்டாட்டக் காலங்களில், கூட இருந்து சுகத்தைக் கொடுக்கும் தூய நண்பர்கள்; எப்போதும் மனத்திலே இடம் பெற்றுவிட்ட இனியர்கள்; இவர்கள் பிரிந்திருக்கும் நாளெல்லாம் பிறவா நாளே! அப்பொழுது சூழ்ந்திருக்கும் செல்வங்களால் எய்தும் இன்பமும் துன்பமேயாம்.

அத்தகைய அருந்தோழன் சித்தார்த்தகன்; அவன் இங்கே வந்திருப்பதாகச் செவியுற்றேன். அவனைத்தான் தேடுகிறேன் (எதிரே நோக்கி) இதோ—சித்தார்த்தகன்!

சித்: (எதிரே வந்து) ஆ! சமித்தார்த்தகா! நண்ப! நலந்தானு? (ஆலிங்கனம் செய்து கொள்ளுகிருர்கள்.)

சமித்: நலம் எங்கிருந்தப்பா வரும்? நீதான் வெகுநாட்களாக வெளியூருக்குப் போய்விட்டாயே? இப்போது ஊருக்கு வந்திருந்தும் என் இல்லத்தை எட்டியும் பார்ப்பதில்லையே?

சித்: கோபியாதே! என்ன செய்ய? ஆரியர், சாணக்கியன் என்னைப் பார்த்தாரோ இல்லையோ, உடனே உத்தரவிட்டுவிட்டார். அதன்படி ஒரு நற்செய்தியைச் சந்திரகுப்த தேவனுக்குத் தெரிவித்துவிட்டு அவரால் இந்தப் பிரசாதங்களை யெல்லாம் அளிக்கப் பெற்று உன்னைக்காண்பதற்காகவே உன் வீட்டுக்குப் புறப்பட்டேன்.

சமித்: ஆணழகன் சந்திரகுப்தனுக்கு நீ கொண்டு போன சுப செய்தியை நான் அறியலாமா?

சித்: உன்னிடம் கூறத் தகாத விஷயமும் உண்டா? கேள்; சாணக்கியனின் தந்திரத்திற்கு மதியைப் பலிகொடுத்த மலயகேது ராக்ஷஸனை அகற்றிவிட்டுத் தனக்கு உதவியாயிருந்த சித்திரவர்மா முதலிய அரசர்களையும் கொன்றனன் அன்றே? அந்தத் தீச் செயலைப் பார்த்த மற்ற மன்னர்களும் அச்சமுற்று இவனுடைய சகவாசத்தை வெறுத்தனர். அவர்கள் இந்த மடையனுல் தீங்கே விளையுமென்றெண்ணி இவனைக் கைவிட்டுச் சிதறிக்கிடந்த சிறிது சேனைகளோடு தத்தம் ஊர் போய்ச் சேர்ந்தனர். மிஞ்சிநின்ற சிற்றரசர்கள் எதுவுந் தோன்ருது அஞ்சியிருக்கையில், பத்ரபடன், புருஷதத்தன், டிங்கராதன், பலகுப்தன், ராஜசேனன், பாகுராயணன், லோகிதாக்ஷன், விஜயவர்மன் முதலியோர்கள் மலயகேதுவைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

சமித்: என்ன இது? 'பத்ரபடன் முதலியோர், சந்திரகுப்தனிடம் துவேஷம்கொண்டு மலயகேதுவோடு சேர்ந்துகொண்டனர்' என்றல்லவா எங்கும் சொல்லிக்கொண்டார்கள்? அங்ஙனம் இருக்க, நீ செப்பும் செய்தி கல்லாத கவி இயற்றிய நாடகத்தைப் போன்று முன்னுக்குப் பின் முரணுக உள்ளதே?

சித்: தோழா! சாணக்கியனுடைய சூழ்ச்சிக்கு இதோ வந்தனம்! விதியின் போக்கைப்போல அதன் போக்கும் எவராலும் ஊகித்தறிய இயலாது.

சமித்: ஊம், அப்புறம்?

சித்: உடனே, திறமை மிகுந்த சேனையோடு ஆரிய சாணக்கியன் அங்கே சென்றார். தலைவரைப் பிரிந்திருந்த அந்த மிலேச்சப்படை முழுவதையும் இலகுவில் வளைத்துப் பிடித்துவிட்டார்.

சமித்: ஆயின் அவை யாவும் எங்கே இப்பொழுது?

சித்: அதோ, பார், அந்த யானைகளை! நீருண்ட முகிலைப் போல் கறுத்துப் பெருத்த சடலங்களுடன் மத ஜலத்தைப் பெருகவிட்டுக் கொண்டே திரிகின்றன.

அங்கே பார்த்தாயா, அந்தப் பரிகளை? வெற்றி முரசைச் செவியுற்று, கசையடிக்குப் பயப்பட்டு உடலை நெளித்துக்கொண்டு துள்ளுகின்றன.

சமித்: இது சரி; ஆனால் அனைவருக்கும் எதிரிலே அதிகாரத்தை வீசி யெறிந்த சாணக்கியன், மீண்டும் அதே அமைச்ச பதவியில் தொத்திக்கொண்டுவிட்டாரா?

சித்: சாணக்கியன் திட்டத்தை ஆழங்காண அமைச்ச ராக்ஷஸனாலேயே ஆகவில்லையே, முழு மூடமான உன்னால் இயலுமா?

சமித்: ஆமாம். நண்பா! ஆயின், அமைச்ச ராக்ஷஸன் இப்போது எங்கிருக்கிறார்?

சித்: 'உதும்பரன்' என்னும் ஓர் ஒற்றன் மலயகேதுவின் வட்டாரத்திலிருந்து சாணக்கியனிடம் வந்தான்; அவன் அந்தப் பயங்கரமான சந்தர்ப்பத்தை வருணித்தான். அப்போது ராக்ஷஸன் இந்தப் பாடலீபுரத்திற்கே வந்திருப்பதாகக் கூறினான்.

சமித்: உம், அமைச்ச ராக்ஷஸன் நந்த ராஜ்யத்தை மீட்பதற்கு என்னென்னவோ முயற்சி செய்து வேகமாக வெளியேறினார். மனக்கோட்டை மண்ணாகிவிடவே மறுபடியும் இருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தாரே!

சித்: அது சந்தனதாஸன்மேல் உள்ள நட்பின் வன்மையால்தான் என்று நினைக்கிறேன்.

சமித்: ஓ! ஆயின், சந்தனதாஸனுக்கு விடுதலை ஆகிவிடும் என்று தோன்றுகிறது.

சித்: அந்தப் பாவிக்கா! பூலோகத்திலிருந்துதான் விடுதலை! ஆரியர் ஆக்ஞைப்படி நாம் இருவரும் அல்லவா அவனைக் கொலைக் களத்துக்குக் கொண்டுபோய் கொல்லவேண்டி யிருக்கிறது!

சமித்: (கோபத்துடன்) என்ன? ஆரிய சாணக்கியனுக்கு வேறு ஆட்கள் இல்லையா? இந்தப் பெரும்பாதகம் புரிவதற்கு நாம்தானா கிடைத்தோம்?

சித்: சமித்தார்த்தகா! இந்த உலகத்தில் தன் உயிரின் மேல் ஆசை வைத்திருக்கும் எவன்தான் ஆரியர் கட்டளையை அவமதிக்கத் துணிவான்? வா, சண்டாள வேடந்தாங்கிச்சந்தனதாஸனைத்தூக்குமேடைக்குத் தள்ளிக்கொண்டு போவோம்!

(இருவரும் போகிறார்கள். கையில் கயிற்றுடன் ஒருவன் பிரவேசிக்கிறான்.)

அவன்: ஆறு குணங்களைப் போன்ற ஆறு வடங்களாலே பிணைக்கப் பட்டு மிகவும் உறுதி பூண்டும், உபாயங்களின் போக்கினுல் நுனியில் நன்ருக முடியிடப்பட்டும், சத்துருவைக் காட்டுவதற்குத் தயாராயிருக் கும் சாணக்கியனுடைய இந்த நீதிக் கயிற்றுக்கு ஜய!

(சிறிது நடந்து எதிரே நோக்கி)

ஆரியரிடம் உதும்பரன் கூறிய இடம் இதுதான்! இங்கேதான் நான் ராக்ஷஸனை எதிர்பார்க்க வேண்டும். (உற்று நோக்கி)

அதோ அமைச்சர ராக்ஷஸர்! ஏது—தலையிலே முட்டாக்கு இட்டிருக் கிருர்! ஆம். இப்பக்கமே வருகிருர். நான் சற்று இந்தத் தோப்பின் மரங் களுக்கிடையே மறைந்து நின்று, அவர் உட்காரும் இடத்தைக் கவனிக் கிறேன். (சற்று விலகிப் போகிருன்)

ராக்ஷஸன்: (கையில் வாளேந்தித் தலையில் போர்வையிட்டுப் பிர வேசிக்கிருன்; கண்ணீர் வழிய)

ஆஹா! என்ன விபரீதம்! ஓர் ஆசை நாயகன் அகன்ருல் மற்ருெரு வனைப்பற்றிக் கொள்ளும் வேசியைப் போல இந்த ராஜ்யலக்ஷ்மியும் வேருெருவனை அடைந்துவிட்டாள். பாமர மக்களும் பழைய அன்பை மறந்துபோய், ஆட்டுமந்தை சாய்வதைப்போல் அந்த தன்மையையே அனுசரிக்கலாயினர். உயிருக்கு உயிரானவர்கள்கூடத் தங்கள் சாமர்த்தி யம் பலிக்காமற் போனதும் பொறுப்பை வகிக்க மறுத்துவிட்டனர்; அல்லது ஏற்றுக்கொண்டுதான் தலையற்ற முண்டம் போன்ற அவர் களால் என்ன செய்யமுடியும்?

கீழ்மகனைப் போன்ற இந்தச் செல்வம், குலத்தில், சிறந்த சக்கர வர்த்தியான தேவனைப் பிரிந்து 'செல்வோம்' எனக் கூறிக்கொண்டே விருஷலனிடம் சென்றுவிட்டது; சென்று நிலைத்தும்விட்டது. இனி, நான் செய்யவிருப்பது யாது? என் தீவிரமான முயற்சிகளைக்கூட, விதி யல்லவா விரோதியாக நின்று வீணுக்குகிறது!

தேவருக்கு அத்தகைய கோர மரணம் சம்பவித்திருக்கக்கூடாது. உம்..என்ன செய்ய..போய்விட்டார். அப்புறம் பர்வதராஜனை அடுத்து முயன்றேன். அவனும் மாண்டான். பிறகும் விடவில்லை. அவன் குமாரனைக் கொண்டு காரியத்தைத் தொடங்கினேன். அதனுலும் தோல்வியே! இவ்வாறு நந்தமரபுக்குத் தெய்வமேதான் வைரியாய்விட் டதேயன்றி அந்தப் பிராமணன் அல்ல.

ஆஹா! என்ன அந்த மலயகேதுவின் மடமை! எஜமானர்களே அடியோடு அழிவுற்றும் அவர்களை நினைந்து பொறுப்பை வகித்து நடத் தும் ராக்ஷஸன் உயிரோடு இருக்கும்வரை அவர்களுடைய விரோதி யான விருஷலனுடன் சமாதானம் செய்துகொள்வானு? இதனை அந்த மூளைகெட்ட மிலேச்சன் ஏன் யோசிக்கவில்லை? ஆம்; விதி மாண்டால் மதியும் அடியோடு தலைகீழாய்விடும்.

இப்போதும் இந்த ராக்ஷஸன் பகைவரிடம் சிக்கிக்கொண்டால் பிராணனை இழப்பானேயன்றி, சந்திரகுப்தனுக்குத் தலைவணங்கப் போவது சொப்பனத்திலும் இல்லை. ஒரு சமயம் 'பொய்யன்' என்னும் பழிச்சொல் வந்தால் அதையாவது அவன் சுமக்கட்டும்; எதிரியின்

தந்திரத்தால் ஏமாந்தான் என்னும் இழிசொல் மட்டும் அவனுக்கு வாய்க்கவேண்டாம்.

(நாற்புறமும் நோக்கி)

இந்தக் குசுமபுரத்தின் எல்லைப்புறங்களெல்லாம் என் ஐயனின் திருவடி சம்பந்தத்தால் அடிக்கடி புனிதமாகிய புண்ணிய ஸ்தலங்கள். இவ்விடத்தில்தான் எனது தேவன் புரவியின்மேல் ஆரோகணித்துக் கடிவாளங்களைத் தளர்த்திவிட்டு மிகவும் விரைவாக அதனை ஓடச் செய்து, பாய்ந்தோடும் விலங்குகள் மீது பாணங்கள் எய்தார். அணி வகுத்தாற்போல விளங்கும் இந்தத் தோட்டங்களில் வீற்றிருந்தார்.. இங்கே பேசினர்;.. அவர்கள் இல்லாதபோது தனித்துப் பார்க்கையில் இவ்விடங்களெல்லாம் துக்கத்தையே அதிகமாக்குகின்றன

ஆகையால், இப்பாவியேன் எங்கே செல்வேன்? (எதிரே நோக்கி) உம், இதோ! ஒரு பாழடைந்த தோட்டம் தென்படுகிறது. இதற்குள் ஏகி, சந்தனதாஸனைப்பற்றிய தகவல் ஏதேனும் கிடைக்குமா என்று பார்க்கிறேன்.

(சிறிது நடந்து, தனக்குள்)

ஆஹா! மானிடனுக்கு நற்காலமோ தீயவேளையோ எதுவும் வருமுன் தெரிவதில்லையே! எப்படியெனில்,

அன்று நான், புர ஜனங்களெல்லாம் சந்திரனைக் காட்டுவதைப் போல் 'இதோ, இதோ' என்று என்னையே சுட்டிக் காட்டவும், பல்லரசர்கள் புடை சூழவும், ஒரு சக்கரவர்த்தியைப் போலக் கம்பீரமாக நடந்து நகரத்தினின்றும் வெளியேறினேன்:

ஆனல் இன்றோ முயற்சிகளால் முறியடிக்கப்பட்டவனாகி அதே பட்டணத்திலே இந்தத் தோப்பில் நுழைவதற்குக்கூட அச்சமுற்றுக் கள்வனைப்போல் காலை வைக்கிறேன்.

ஏன்? இவ்வளவும் யாவரின் அருளால் இருந்தனவோ அவர்களே இப்போது இல்லை அல்லவா?

(உட்சென்று பார்த்து)

என்ன.. தோட்டத்தின் விகாரமான தோற்றம்!

இந்த மாடியின் மேற்றளம் இடிந்து கிடப்பது, பிரம்மாண்டமான தருமம் செய்து வந்த ஒரு நற்குலமே நாச முற்றதுபோல் தோன்றுகிறது. இந்தப் பொய்கையோ உற்ற நண்பனுக்கு ஏற்பட்ட அழிவால் ஒரு சாதுவின் மனம் வாடுவதைப்போல் வறண்டு கிடக்கிறது. கொடுங்கோல் மன்னனிடம் நன்னெறிகள் பலன் அளிக்காதனபோல, இந்தத் தருக்கள் காய் கனிகள் இல்லாமல் மொட்டையாய்க் காட்சி அளிக்கின்றன. மூடனுடைய புத்தியில் நிரம்பிய அநீதிகளைப் போன்று இந்த நிலப்பாகம் முட்புதர்களால் மூடப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த விருக்ஷங்களின் கிளைகள் கூரிய கோடரியின் வெட்டுக்களால் காயமடைந்துள்ளன. அவற்றின்மேல் உட்கார்ந்துள்ள புறு முதலிய பறவைகள் சப்திப்பது, அந்தக் கிளைகளே காயவலி பொறுக்க மாட்டாமல் புலம்புவதுபோல் இருக்கிறது. அங்கே வசிக்கும் சர்ப்பங்கள் 'புஸ்' என்று மூச்சு விடுவது, தம் இருப்பிடத்திற்கு நேர்ந்துள்ள இடையூறு கண்டு இரங்கிப் பெருமூச்சு விடுவதேபோல் தோன்று

கின்றது. அவை உரித்துவிட்ட சட்டைகள், அப் பாம்புகளால் மரத்தின் காயங்களுக்குக் கட்டப்பட்ட துணிப்பட்டைகளோ எனக் கருதக் கிடக்கின்றன.

பாவம்! இந்த மரங்களின் உட்புறம் உலர்ந்து போயிருப்பது வெளிக்கும் நன்கு புலப்படுகிறது. இவற்றின் அநேக இடங்களில் புழு பூச்சி அரித்ததால் நீர் கசிவது, அவைகளே கண்ணீர் உகுப்பதைப் போல் தெரிகிறது.

இலைகளை இழந்ததால் நிழலைத் துறந்த விருக்ஷங்கள் மயானத்துக்குச் செல்வனபோல் துயரத் தோற்றம் அளிக்கின்றன. சரி; என் கெட்ட காலத்தைப்போலவே எதிரே உடைந்துகிடக்கும் இந்தக் கற்பாறையின்மேல் சற்றே உட்காருகிறேன். (உட்கார்ந்து செவிசாய்த்து)

என்ன, இது? இவ்வேளையில் வெற்றிமுரசு முழங்குகிறது; வாத்திய கோஷம் கேட்கிறது?

இந்தப் பேரிகை, சங்கம் முதலியவற்றின் நாதங்கள் கேட்பவரின் காதுகளை, செவிடாக்கும் திறம் படைத்து மேன் மாடிகளெல்லாம் தேவையான மட்டும் அருந்தி அலுத்துப்போய், பின்பு முடியாமல் உமிழ்வதுபோல எதிரொலிகளைப் பரப்பிக்கொண்டு, திசைகளின் நீளத்தைக் கண்டுபிடிப்பதற்காக உற்சாகமாய்க் கிளம்புகின்றன!

ஆம், தெரிந்தது! மலயகேது சிறைப்படுத்தப்பட்டான். அதனால் அரசகுலத்திற்கு, (அசூயையுடன்) இல்லை—மௌரியவம்சத்துக்கு—உண்டான பெரு மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஜயத்தொனியே இது!

(கண்ணீர் உகுத்து) அந்தோ! அந்தோ! சத்துருவின் செல்வாக்கைப்பற்றிக் கேட்டதுண்டு. நடித்து காட்டப்பெற்றதும் உண்டு. இப்போது நேரிலேயே கண்டு உணரவும் காலம் வந்திருப்பதாய்த் தோன்றுகிறது.

கயிற்றுடன் வந்த மனிதன்: (தனக்குள்) உட்கார்ந்து விட்டார். இனி நான் ஆரியர் இட்ட பணியை ஆரம்பிக்க வேண்டியதே! (ராக்ஷஸனைப் பார்க்காதவன்போல அவன் எதிரில் தூக்குப் போட்டுக் கொள்ள முயற்சிக்கிறான்.)

ராக்ஷஸன்: (பார்த்து) இவன் யாரோ? துயரத்திலே எனக்குப் பங்காளி போன்றவன். தூக்கிலே தொங்கத் துரிதப்படுகிறான். போய் விசாரிக்கிறேன். (சென்று) அப்பா! என்ன செய்கை இது? இப்படியும் செய்யலாமா?

அம்மனிதன்: (கண்ணீருடன்) ஐயா! அரிய உயிர்த்தோழனுக்கு உற்ற அழிவால் உள்ளம் வெதும்பி என்னைப்போன்று தவிக்கும் எவனுக்கும் ஏற்ற காரியமே இது.

ராக்ஷ: (தனக்குள்) நான் நினைத்தது முற்றிலும் சரி. இவனும் என்னுடைய சோகத் துணைவனே! (வெளிப்படையாக) துக்கத்தின் தோழனே! வெகு மர்மமாயின் வேண்டியதில்லை; இன்றேல் அதைக் கேட்க விரும்புகிறேன்.

மனி: சுவாமி! இரகசியமும் அல்ல, பெரிதாயும் இல்லை. ஆனாலும் நண்பனுக்கு உற்ற அழிவால் விசனத்தில் மூழ்கிவிட்ட நான் உயிர்

இழப்பதற்குச் சிறிது தாமதம் உண்டாவதையும் தாளமாட்டேன்.

ராக்ஷ: (பெருமூச்சுவிட்டுத் தனக்குள்) ஆம், சிநேகிதனைப் பேராபத்தில் சிக்கவிட்டுச் சிந்தனையற்றிருக்கும் எனக்கு இது சரியான சவுக்கடி. (வெளிப்படையாக) அன்பா! மறைக்கவோ அவசியமில்லை. விஷயமும் சுருக்கமானது. ஆதலின் சொல்லலாமே!

மணி: காட்டாயப் படுத்துகிறீர்களே! சொல்லாவிட்டால் முடியுமா? உம், கேளுங்கள். இந்த ஊரில் 'விஷ்ணுதாஸன்' என்னும் ஒரு வைர வியாபாரி உண்டு.

ராக்ஷ: (தனக்குள்) ஆம், தெரியும்; விஷ்ணுதாஸன் என்பவன் சந்தனதாஸனுக்குச் சிநேகிதன். (வெளிப்படையாக) அவனுக்கு என்ன?

மணி: ஆ! அவன் என் உயிரினும் இனிய உத்தம நண்பன்.

ராக்ஷ: (தனக்குள்) உயிர்த் தோழன். ஆதலால் மிகவும் நெருங்கிய சம்பந்தம் இருக்கும். சந்தனதாஸனைப் பற்றிக்கூட ஏதேனும் தகவல் தெரிந்திருக்கலாம். (வெளிப்படையாக) ஆம், அப்பா! என்ன இப்போது அவனுக்கு?

மணி: அவனு? தன் ஆஸ்தி முழுவதையும் தானம் செய்துவிட்டான். தீக்குளிப்பதற்காக நகரத்தைவிட்டு, வெளியேறியும் விட்டான். கோரமான அவன் மரணத்தைக் கேள்வியுறுவதற்கு முன்னதாகவே என்னுடைய ஜீவனை விட்டுவிட வேண்டுமென எண்ணித் தூக்கிட்டுக்கொள்ளத் தீர்மானித்து இங்கே வந்தடைந்தேன்.

ராக்ஷ: உன் சிநேகிதன் தீயிற் புகுதற்குக் காரணம் யாது? மருந்துகளால் குணப்படுத்த முடியாத மா பிணிகள் அவனைப் பற்றிக்கொண்டனவா?

மணி: இல்லை, இல்லை.

ராக்ஷ: இல்லையேல், நெருப்பைப் போன்ற—விஷத்திற்கொப்பான—வேந்தனுடைய வெஞ்சினத்திற்கு ஆளானுரா?

மணி: அன்று, அன்று, ஐயா! சந்திரகுப்த சாம்ராஜ்யத்தில் கொடுமைக்கே இடமில்லை.

ராக்ஷ: ஒரு வேளை, கிடைப்பதற்கு அரிதான ஒரு பெண்ணைக் காதலித்துக் கலங்குகிருரா?

மணி: (காதுகளை மூடிக்கொண்டு) அவர் உள்ளம் அப்பேர்ப்பட்ட தீய ஒழுக்கத்தை ஒருபோதும் அறியாது.

ராக்ஷ: அல்லது, உனக்கு நேர்ந்தது போலவே அவருக்கும் ஏதாவது சிநேக சஞ்சலமே விதிவசமாய் ஏற்பட்டுவிட்டதா?

மணி: அதுதான், ஸ்வாமி! அதுதான்!

ராக்ஷ: (தனக்குள் திகிலுடன்) சந்தனதாஸனுடைய நண்பன், அவனுக்கு ஏற்பட்ட பேராபத்தே இவன் அக்னிப் பிரவேசம் செய்வதற்குக் காரணம். இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் நட்பின் மேன்மை உச்ச ஸ்தானத்திற்குப்போய் என் இருதயத்தில் அதிர்ச்சியை

உண்டாக்கிவிட்டது. (வெளிப்படையாக) அன்பு மிகுந்தோய்! அவர் நண்பனுக்கு எதனுல் அழிவு நேர்ந்தது? அவருக்காக உயிரையே தியாகம்செய்யத் துணிந்த இவருடைய நல்ல விருத்தாந்தங்கள் யாவை? கேட்க ஆவலாயிருக்கிறது.

மணி: மகா பாவியாகிய நான் மரணத்திற்குத் தடையாக வீண் காலம் கழிக்கமுடியாது, ஐயா!

ராக்ஷ: அப்பா! எனக்குத் தெரியவேண்டும் இது! உடனே சொல்.

மணி: விடாப்பிடியாய்ப் பிடிக்கிறீர்களே! சரி கூறுகிறேன், கேளுங்கள்.

ராக்ஷ: சொல், அப்பா! காத்திருக்கிறேன்.

மணி: இந்த நகரத்தில் வைர வியாபாரி ஒருவர் உண்டு. அவர் பெயர் சந்தனதாஸன்.

ராக்ஷ: (வருத்தத்துடன் தனக்குள்) சோகமே அனுபவிப்பதென்னும் எனது விரதத்திற்கு உரிய பாதையைத் தெய்வம்.இதோ திறந்துவிட்டது. மனமே, பதருதே! நீ பெரும் கஷ்டத்தைக் கேட்கவேண்டியிருக்கிறது. (வெளிப்படையாக) கேட்டது உண்டு; நண்பருக்கு அன்பு அளிக்கும் பரம சாது; என்ன அவருக்கு?

மணி: அவருக்கு இந்த விஷ்ணுதாஸன் பிரியமான நேசன்.

ராக்ஷ: (தனக்குள்) துயரம் என்னும் இடி, மனத்தின் சமீபத்தில் விழுவதற்கு, இதோ நெருங்கிவிட்டது.

மணி: ஆதலால், அந்தச் சிநேகிதத்தின் மகத்துவத்தால் விஷ்ணுதாசன் சந்திரகுப்தனிடம் விண்ணப்பம் செய்துகொண்டார்.

ராக்ஷ: என்னவென்று?

மணி: தம் இல்லத்தில் இருக்கும் ஒரு குடும்ப போஷணைக்குப் போதுமான சொத்துக்களை யெல்லாம் அரசன் எடுத்துக்கொண்டு தம் நண்பனை விடுதலையாக்க வேண்டுமென்று.

ராக்ஷ: (தனக்குள்) மெச்சினேன், விஷ்ணுதாஸா! நண்பன் கடமையை நன்கு காட்டினுய்.

தந்தைமார் புதல்வரையும், புத்திரர் பெற்ருேர்களையும் அன்னியர் போல் பாவித்து இம்சிப்பதும்; சிநேகிதர்கள் தங்கள் அன்பை மறந்து, நட்பை உதறித்தள்ளுவதும் பொருளுக்காகவே அன்ருே? அத்தகைய ஜீவநிதியையே நின் மித்திரனுக்கு ஏற்பட்ட கஷ்டத்திற்காக நீ இழந்துவிடத் துணிந்தனை. குலத்திலே நீ வைசியனே ஆயினும் உன் பணம் தான் பாக்கியம் பெற்றது.

(வெளிப்படையாக) அவர் வேண்டுதலுக்கு மௌரியன் என்ன சொன்னுர்?

மணி: "சந்தன தாஸனைக் கைது செய்தது பணத்தை நினைத்தல்ல; அவன் அமைச்ச ராக்ஷஸன் வீட்டாரை ஒப்படைக்க மறுப்பதனுல் தான்! பலதடவை கேட்டுப்பார்த்தும் அவர்களைக் காட்டிக்கொடுப்பதாகக் காணவில்லை. இப்பொழுதாவது அவர்களை ஒப்படைப்பானுயின்

இவனுக்கு விமோசனம் உண்டு. இல்லையேல் சிரச்சேதந்தான் இவனுக்குச் சிட்சை'' என்று தீர்ப்புக்கூறினுர் சந்திரகுப்தன்! உடனே சந்தன தாஸன் கொலைக்களத்துக்குச் செலுத்திக்கொண்டு போகப்பட்டார். அவர் 'ஆவி யிழந்தார்' என்று கேட்பதற்கு முன்னமே தாம் நெருப்பிலே விழுந்து உயிரைவிட வேண்டுமென்று நகரைவிட்டு வெளிப் போந்தார் விஷ்ணுதாஸன்.

விஷ்ணுதாஸன் வீரமுடிவு செவிக்கு எட்டு முன்னரே என் ஆவியை அந்தகனிடம் சேர்த்துவிட வேண்டுமென்று இந்தப் பாழடைந்த தோட்டத்திற்குள் யான் புகுந்தேன்.

ராக்ஷ: அப்பா! சந்தனதாஸன் கொலை செய்யப்படவில்லையே?

மனி: இல்லை! ஏனெனில் அமைச்ச ராக்ஷஸன் குடும்பத்தாரைக் கொண்டுவிடும்படி அவரை இன்னும் அடிக்கடி வற்புறுத்துகிறுர்கள். என்ன கேட்டென்ன? நேசத்தின் பாசத்தால் அவர் சிறிதும் சளைப்பதில்லை. இதனுல் அவரது கொலைத் தண்டனை கொஞ்சம் தடையுற்றிருக்கிறது.

ராக்ஷ: (தனக்குள் சந்தோஷத்துடன்) நன்று, நன்று, சந்தன தாஸா! நன்று. சரணடைந்தவரைக் காட்டிக்கொடாத சிபிச் சக்கரவர்த்தியைப்போல் புகழ்மாலை சூடுகிறுய் நீ! அவராவது சரணுகதன் எதிரில் இருக்கையில் மன உறுதியுடன் இருந்தார். நீயோ காப்பாற்றப் பட வேண்டியவன் கண் மறைவாக இருந்தும் கலக்கமுருது திடவுள்ளத்துடன் திகழ்கிறுய். (வெளிப்படையாக) அப்பா! போ! சீக்கிரம்! விஷ்ணுதாஸனைத் தீயிலே புகவிடாது தடுத்துவிடு. நானும் இதோ போகிறேன்; சந்தனதாஸனை மரணத்தினின்றும் மீட்கிறேன்.

மனி: தாங்கள், சந்தனதாஸனை மீட்பதா? எப்படி முடியும்?

ராக்ஷ: (உடைவாளை உருவி) முயற்சிக்குத் துணைபுரியும் இந்த வீர வாளால், பார்!

மேகங்களால் மறைக்கப்படாத வானத்தைப்போலக் கரிய மேனியோடு இலங்குவதும், யுத்தத்திலுள்ள ஆர்வத்தால் ரோமம் சிலிர்த்தது போன்று என் கரத்தோடு தோழமை பூண்டதும் சமரென்னும் உரைகல்லில் தன் திறமையைப் பிறருக்குக் காட்டியதுமான இந்த உடைவாள், மித்திர பாசத்தினுல் பரவசமாயுள்ள என்னைச் சாகசக் காரியத்தை மேற்கொள்ளும்படி தூண்டுகிறது.

மனி: ஐயா! சந்தன தாஸனுக்காகச் சாகத் துணிந்ததால் தாங்கள் இன்னுரென்பது ஒருவாறு தெரிகிறது. ஆனுலும் விதி வசத்தால் உருக் குலைந்திருக்கும் தங்களை ஐயமறத் தெரிந்துகொள்ள இயலவில்லை. தாங்கள் தான் நற்பெயர் பூண்ட அமைச்ச ராக்ஷஸனு? அதிர்ஷ்ட வசமாய் என் கண்ணில் பட்டீர்களா? (காலில் விழுகிறுன்)

ராக்ஷ: எழுந்திரு. எழுந்திரு. தாமதத்திற்கு இது தருணம் அல்ல. "இதோ, ராக்ஷஸன் சந்தனதாஸனை மரணத்தினின்றும் விடுவிக்கிறுர்'' என்று விஷ்ணுதாஸனிடம் உடனே போய்ச் சொல்.

("மேகங்களால் மறைக்கப்படாத'' என்று சொல்லிக் கொண்டே வாளை உருவிக்கொண்டு நடக்கிறுன்.)

மனி: ஐயா! தயவுசெய்து என் ஐயத்தை அகற்றவேண்டும்.

ராக்ஷ: ஆமப்பா! எஜமானர்கள் நாசமுறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தவனும், தோழனுடைய ஆபத்துக்குக் காரணமானவனும், கீழ் மகனும், பயங்கரப் பெயர் தரித்தவனுமான உண்மையான ராக்ஷஸன் நானேதான்.

மனி: (சந்தோஷத்துடன் மறுபடியும் காலில் விழுந்து) ஹீ! ஹீ! ஆச்சர்யம்! தங்களைத் தரிசித்தது பெரும் பாக்கியம்! அமைச்சர் மன்னிக்கவேண்டும். முன்பு சந்திரகுப்தனால் ஆரிய சகடதாஸன் கொலைக் களத்திற்கு அனுப்பப்பட்டானல்லவா? அப்போது யாரோ சூழ்ச்சி செய்து அவனை அவ்விடத்தினின்றும் வெளியேற்றி வேற்றூருக்குக் கொண்டுபோய் விட்டனராம். அதனால் சினங்கொண்ட சந்திரகுப்தன் கொலையாளிகள் பேரில், ''அஜாக்கிரதை'' என்னும் குற்றம் சாட்டி அவர்களைக் கொன்றுவிட்டான். ஆதலின் சகடதாஸன் மீது இருந்த ஆத்திரம் அரசனுக்கு ஒருவாறு அடங்கியது.

அதுமுதல் கொலைஞர் என்ன செய்கின்றனர், தெரியுமா? எவனேனும் புது மனிதன் ஆயுதபாணியாக எதிரிலாவது பின்புறத்திலாவது வருவதைப் பார்த்துவிட்டால், அதே நொடியில், அதே இடத்தில், குற்றவாளியைத் தீர்த்துவிட்டு அரசன் கோபத்துக்குத் தம் உயிரைப் பலி கொடுக்காமல் மிகவும் ஜாக்கிரதையாகத் தப்பிக்கொள்ளுகிறார்கள்.

ஆகையால் அமைச்சர் ஆயுதந் தாங்கிப்போனால், சந்தன தாஸனுக்கு மரணம் இன்னும் சீக்கிரத்தில் அல்லவா சம்பவித்துவிடும்!

ராக்ஷ: ஆஹா! சாணக்கியப் பயலுடைய தந்திரம் எதுவும் அறியக் கூடியதாகவே யில்லையே!

சகடதாஸன் என்னிடம் சேர்ந்தது சத்துருவின் சூழ்ச்சியால் என்றால், அரசாக்கினையால் கொலைஞர் ஏன் கொல்லப்பட்டனர்? அல்லது சகடன் என்னை அணுகியது கபடமற்றதாயின் தப்புக் கடிதம், பொய் முத்திரைபோன்ற துரோகங்களை அவன் ஏன் புரிந்திருக்க வேண்டும்? இந்தச் சந்தேகங்களால் என் மனம் ஒருவிதமான முடிவுக்கும் வர முடியவில்லையே!

(சிறிது ஆலோசித்து)

ஏற்கெனவே கொலையாளிகள் சிட்சிக்கப் பெற்றதால் வாளை ஏந்திப்போவது தகுதியன்று. இதனை விட்டால் வேறு உபாயம் எதுவும் கைமேல் பலனைக் கொடுக்காது. நண்பனே பயங்கரமான ஆபத்துச் சுழலில் அகப்பட்டுத் தவிக்கிறான். அதற்குக் காரணமும் நானே. ஆகையால் இப்போது அசட்டையாய் இருப்பதைப் பார்க்கிலும் அறிவீனமும், பெருந் துரோகமும் வேறில்லை . . . ஆம்! கண் திறந்தது. அவனுக்குப் பதில் என் சரீரத்தையே விலையாகக் கொடுக்கிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்)

ஆறும் அங்கம் முற்றிற்று.

# ஏழாம் அங்கம்

(சண்டாளன் பிரவேசிக்கிறான்)

சண்டாளன்: விலகுங்கள். விலகுங்கள். தூரப்போங்கள். ஐயா! உங்கள் உயிர், பொருள், குலம், குடும்பம் இவை யாவும் அழியாதிருக்க வேண்டுமாயின் ராஜத்துரோகத்தை விஷமென நினைத்து விலக்குங்கள். அபத்தியம் செய்தால் பிணி அல்லது சாக்காடு மட்டுமே வரும். அரசனுக்குத் துரோகம் புரிந்தாலோ குலகோத்திரமே முழுகிப் போகும். இந்த உண்மை உங்களுக்கு இன்னும் தெரியாமல் இருந்தால்—இதோ மனைவி மக்களோடு தூக்குமேடையை நோக்கிப் போகும்—ராஜத் துரோகியான இந்தச் சந்தனதாஸ செட்டியாரைப் பார்த்த பிறகாவது உணருங்கள். (வானத்தைப் பார்த்து)

ஐயா! என்ன சொல்லுகிறீர்கள்? இவருடைய விடுதலைக்கு ஏதேனும் வழி உண்டா என்று? உண்டு. அமைச்ச ராக்ஷஸனுடைய மனைவி மக்களை அரசனிடம் ஒப்படைத்தால் உடனே உண்டு. (மீண்டும் மேல் நோக்கி) என்ன? இந்தச் சரணாகத வத்ஸலன் கேவலம் தன்னுயிரைக் காக்கவேண்டி அடைக்கலம் புகுந்த பேரைக் கைவிட மாட்டான் என்கிறீர்களா? நியாயம், ஐயா, நியாயம் ஐயா! ஆயின் அவனுக்குக் கிடைக்கப்போகும் நற்கதியை விரைவில் காண்பீர்கள் . . . ஆமாம்! பின் எதற்காக நீங்கள் விடுதலைக்கு வழி கேட்டு விசனப்படுகிறீர்கள்?

(தூக்கு மரத்தைத் தோளிற் சுமந்து, கொலைச் சின்னத்துடனும், மற்றொரு கொலையாளி பின்தொடரவும் மனைவி மக்களுடன் சந்தனதாஸன் பிரவேசிக்கிறான்.)

சந்தனதாஸன்: (கண்ணீ பெருக) அந்தோ! கஷ்டம்! நேர்மைக்கு ஏதேனும் கஷ்டம் வந்துவிடுமோ என்று அனவரதமும் ஐயமுற்றிருக்கும் என் போன்றவர்க்கும், கள்வர்க்கு ஏற்றதான இத்தகைய துர்மரணம் நேரிடவேண்டுமாயின், ஆ, தெய்வமே! உனக்குக் கும்பிடுதான் போடவேண்டும். ஆம். இரக்கமற்றவர்களுக்கு நல்லோர் தீயோர் என்னும் வேறுபாடு ஏது? மரணத்தைத் தடுக்க எண்ணி மான், மாமிசத்தை விலக்கிப் புல்லுண்டு வாழ்கிறது; அந்த மானைக் கொல்ல வேடர்களுக்கு என்ன அவசரம், ஐயா?

(சுற்றும் பார்த்து)

நண்ப! விஷ்ணுதாஸ! ஏன் பேசவில்லை? பதில் கூடப் பகரலாகாதா? ஆனால் இந்த ஆபத்து வேளையில் மனிதர் எதிரில் நிற்பதே அரிதல்லவா? இதோ, இந்தச் சிநேகிதர்கள் எல்லாரும் கண்ணீர் உகுப்பதால்மட்டும் எனக்குக் கைம்மாறு செய்தவர்களாய், பிரிவதற்கு மனமில்லாமல் சரீரங்களை மட்டும் செலுத்திக்கொண்டு திரும்பிப்போகிறார்கள். ஆனால் அவர்களுடைய கண்கள் என்னையே தொடர்ந்து வருகின்றன. (செல்கிறார்.)

சண்டா: ஐயா! சந்தனதாஸரே! கொலைக்களத்துக்கு வந்தாயிற்று. உமது இல்லத்தாரைத் திருப்பி அனுப்பும்.

சந்தன: (மனைவியை நோக்கி) என் அன்பின் வடிவே! இதற்கப்புறம் நீ தொடர்ந்து வருதல் கூடாது. குழந்தைகளுடன் வீட்டுக்குத் திரும்பிவிடு.

மனைவி: (கண்ணீருடன்) தாங்கள் ஊருக்குப் போகவில்லை. பரலோகத்துக்குப் போகிறீர்கள். ஆகையால் குலப்பெண்டிர் கொழுநனைப் பிரிந்து செல்லார்.

சந்தன: அறமுணர்ந்தவளே! எனக்கு நேர்ந்துள்ள இந்த அழிவு என் தீச்செயலால் அல்ல; நண்பனுக்குச் செய்த நன்மையினுல் விளைந்த தாகும். ஆதலின் மகிழ்ச்சியுறவேண்டிய இத்தருணத்தில் நீ மனங் கலங்கிக் கண்ணீர் உகுப்பது ஏன்?

மனைவி: அதனுல்தான், நற்குல நாரியர் நாதனைவிட்டுத் திரும்பிப் போய்விட இது சமயமல்ல.

சந்தன: ஆயின், உன் தீர்மானந்தான் என்ன?

மனைவி: பர்த்தாவின் பாதங்களைப்பற்றித் தொடர்ந்து பேரருளைத் தேடிக்கொள்வது!

சந்தன: ஆருயிரே! இது பிசகு. உலகமறியாத இந்தப் பாலனை முதலில் நீ கவனிக்கவேண்டும்.

மனைவி: அதற்குக் கருணை நிரம்பிய நம் குலதெய்வங்கள் இருக்கின்றன. அவை இவனைக் காப்பாற்றட்டும். கண்ணே! குழந்தாய்! கடைசி முறையாக உன் தந்தையாரின் காலில் விழுந்து வணங்கு.

புத்திரன்: (அடி பணிந்து) எந்தாய்! தேவரீர் என்னைப் பிரிந்த பிறகு யான் செய்யவேண்டியது யாது?

சந்தன: குழந்தாய், நீ சாணக்கியன் இல்லாத ஒரு தேசத்தில் வசிக்கவேண்டியது.

சண்டா: கழுமரம் நாட்டி ஆனது, சந்தனதாஸரே! தயாராகுங்கள்.

மனைவி: பெரியோர்களே! காப்பாற்றுங்கள்.

சந்தன: (அருகில் வந்து) என்ன, நீ, இங்கே வந்து இரைச்சல் இடுகிறுய்? சுவர்க்கம் சேர்ந்தவர்களின் சோகமுற்ற குடும்பத்தாரைத் தெய்வங்கள் எந்நாளும் பாதுகாக்கும்.

சண்டா: (முதலாமவன்) அடே! பில்வபத்ரா! சந்தனதாஸனைப் பிடித்துக்கொள்ளடா! வீட்டு ஜனங்கள் தாமாகவே ஓட்டம் பிடிக்கிறுர்கள்.

சண்டா: (இரண்டாமவன்) வஜ்ரலோமா! இதோ வந்தேன். பிடித்துக்கொள்ளுகிறேன்.

சந்தன: அப்பா! சற்றிரு. குழந்தையைத் தேற்றிவிட்டு வருகிறேன். (குழந்தையை உச்சி மோந்து) குழந்தாய்! மனிதன் என்றைக்காயினும் அழியவேண்டியவனே! அதிலே நான் சிநேகிதன் பொருட்டு உயிர் இழக்கிறேன் அடா!

புத்திரன்: தந்தாய்! இதனைக் கூறவும் வேண்டுமா? நமக்கு இது குலதர்மமல்லவா?

(சந்தனதாஸன் பாதங்களில் விழுந்து வணங்குகிறுன்)

சண்டா: அடே! இவனைப் பிடித்துக்கொள்.

(சூலத்தில் ஏற்ற இருவரும் பிடித்துக்கொள்கிருர்கள்)

மனைவி: (மார்பில் அறைந்துகொண்டு) ஐயா! காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்.

ராக்ஷஸன்: (திடீரெனப் பிரவேசித்து) அம்மா! அஞ்சேல். ஏ! கொலைக்கள அதிகாரிகளே! சந்தனதாஸனைக் கொல்லாதீர்கள்.

தலைவனுடைய மரபே அழிவுறும்போதும் பகைவன் குலம் நாசமுறுவதைப்போலப் பார்த்துக்கொண்டிருந்தவனும், நேயர்களுக்குற்ற ஆபத்து வேளையில் திருவிழாவில் இருப்பதைப்போல வாளாவிருந்தவனும், இவ்வாறெல்லாம் அவமானமுற்ற பின்பும் ஆத்மாவை வதைத்தற்காக உங்கள் போன்றோரால் விரும்பப்படுபவனும் ஆகிய என் கழுத்தில் யமலோகத்துக்கு வழிகாட்டும் செவ்வண்ணக் கொலைமாலையைச் சீக்கிரம் போடுங்கள்.

சந்தன: (கண்ணீருடன்) அமைச்ச! என்ன காரியம் இது?

ராக்ஷ: இதுவா? செய்தற்கரிய நின் நற்கருமத்தில் ஒரு பாகத்தின் மறுவடிவம்.

சந்தன: அமைச்ச! பட்ட கஷ்டமெல்லாம் வீணுகும்படிச் செய்துவிட்டீர்களே! சரிதானு?

ராக்ஷ: அன்ப! என்னை ஏசாதே! (சண்டாளனை நோக்கி) போ, அப்பா! அந்தத் துராத்மாவான சாணக்கியனுக்கு இதைத் தெரிவி.

வஜ்ரலோமன்: எதை?

ராக்ஷ: அஸத்துகளிடமே அன்புகொண்டொழுகும் இந்தக் கொடுமையான கலிகாலத்திலும், தன்னுயிரைக் கொடுத்தாவது பிறருயிரைக் காப்பதில் சிபிச்சக்கரவர்த்தியைத் தோற்கடித்தவனும்; கருணைக்குப் பேர்போன புத்த மதத்தினரின் நன்னடத்தையையும், தனது நல்லொழுக்கத்தால் தாழ்த்திவிட்டவனுமான புகழ்வாய்ந்த ஒரு புண்ணியசாலி அந்தச் சாணக்கியனுல் பூஜிக்கப்படவேண்டியவனுக இருந்தும், என் பொருட்டு அவனுக்குப் பகைமைக்கு மூலகாரணமாக உள்ள நான் இதோ இருக்கிறேன் என்று சொல்.

வஜ்ரலோமன்: பில்வபத்ரா! நீ சந்தனதாஸனைப் பிடித்துக்கொண்டு இந்த மயான மரத்தடியில் கொஞ்ச நேரம் தங்கியிரு. அதற்குள் நான் போய்ச் சாணக்கியனிடம், ''அமைச்ச ராக்ஷஸர் அகப்பட்டார்'' என்று அறிவிக்கிறேன்.

பில்வபத்ரன்: ஆகா! அவ்வாறே செய்.

(சந்தனதாஸன், மனைவி மக்களுடன் சண்டாளன் செல்கிருன்)

வஜ்ர: (ரக்ஷஸனுடன் நடந்து) யார் அங்கே! நந்த மரபென்னும் பர்வதங்களுக்கு வஜ்ராயுதம் போன்றவரும் மௌரிய குலத்தைப் பிரதிஷ்டை செய்தவருமான ஆரிய சாணக்கியனிடம் சென்று தெரியப்படுத்து.

ராக்ஷ: (தனக்குள்) பாபமே! இதையுமா கேட்கவேண்டும்?

வஜ்ர: ''ஆரியருடைய நீதியின் திறமையால் கட்டப்பெற்ற மதி வன்மையையுடைய அமைச்ச ராக்ஷஸன் இதோ அகப்பட்டுக்கொண்டார்'' என்று சொல்.

(சாணக்கியன் முகம் தவிர உடல் முழுவதையும் மூடிக் கொண்டு சந்தோஷமாய்ப் பிரவேசிக்கிறுன்)

சாணக்: அப்பா! சொல்லு. இன்னும் ஒருமுறை சொல்லு, யார் அப்பா அவன்? கொழுந்துவிட்டு எரியும் ஜ்வாலைகளால் கபில வர்ண முற்ற தீயைத் துணித்தலைப்பில் முடிந்த தூயன்? சலனத்திற்கு உறைவிடமான காற்றை உடனே கயிற்றுல் கட்டிய வீரன்? மதகஜத்தின் மதஜலத்தால் மணங்கமழும் கழுத்து மயிரின் ஈரம் உலருமுன்னமே, அந்தச் சிங்கத்தைப் பிடித்துக் கூட்டில் அடைத்த தீரன்! ஏராளமான திமிங்கிலங்களும் சுறுமீன்களும் நிறைந்ததால் அணுகுதற்கு இயலாததான பயங்கரக் கடலைக் கைகளால் நீந்திக் கரையேறிய நரோத்தமன்!

சண்டா: நீதி நிபுணரான தேவரீரே!

சாணக்: அப்படிச் சொல்லாதே! நந்த வம்சத்திற்கு நமனுய் வந்த விதியென விளம்பு,

ராக்ஷ: (தனக்குள்)இதோ துராத்மா—இல்லை இல்லை, மகாத்மா—கௌடில்யன் வருகிறுனே! இவன் பேரில் உள்ள பொருமையால் இவனுடைய குணங்களை நான் கொண்டாட முடியவில்லையாயினும், ரத்தினங்களுக்கெல்லாம் சமுத்திரம் இருப்பிடமாயிருத்தல்போல, சர்வ சாஸ்திரங்களுக்கும் உறைவிடம் சாணக்கியன் ஆவன்.

சாணக்: (ராக்ஷஸனைக் கண்டு களிப்புடன் தனக்குள்) ஆஹா! இதோ அமைச்ச ராக்ஷஸன்! இந்த மகாத்மாவின் நீண்ட கண் விழிப்புக்குக் காரணமான நிகரில்லாக் கற்பனைகள், என் புத்தியையும், பிரமாண்டமான திட்டங்களோடு ஜாக்கிரதை மிகுந்து எப்போதும் எதற்கும் தயாராயிருந்த விருஷலன் சேனையையும் சதாகாலமும் கிலேசத்தில் ஆழ்த்திவிட்டன.

(முக்காட்டை நீக்கி நெருங்கிவந்து)

ஹே அமைச்ச! ராக்ஷஸா! அடியேன் விஷ்ணுகுப்தன் அடிபணிகிறேன்.

ராக்ஷ: (தனக்குள்) அமைச்சனு இப்போது நான்? அவமானம்! (வெளிப்படையாக) விஷ்ணுகுப்தா! என்னைத் தொடாதே! நான் அசுத்தமாக இருக்கிறேன். என்னைச் சண்டாளன் தீண்டிவிட்டான்.

சாண: அமைச்ச: இவர்கள் சண்டாளர் அல்லர். இதோ இவன், ஏற்கெனவே தங்களுக்குத் தெரிந்த ராஜசேவகன், சித்தார்த்தகன். மற்றெருவனும் ராஜகுலத்தினன். அவன் பெயர் சமித்தார்த்தகன். பெரியோய்! அந்த நிருபத்தைப்பற்றிச் சகடதாஸன் ஏதும் அறியான். அவன் நிரபராதி. இவர்களுக்கு அவனுடன் நட்பைஉண்டாக்கிவைத்து அவனுக்கே ஒன்றும் புரியாதபடி அவனுலேயே கடிதம் எழுதுவித்தவன் அடியேன்.

ராக்ஷ: (தனக்குள்) சந்தோஷம்! சகடதாஸனைப்பற்றிய சந்தேகச் சுமை நீங்கியது.

சாண: ஐயா! அதிகம் கூறுவானேன்? சுருக்கமாகச் சொல்லு கிறேன். பத்ரபடன் முதலிய சேவகர்கள்; அந்த அற்புதக் கடிதம்; சித்தார்த்தகன்; மூன்று ஆபரணங்கள்; தங்களுக்கு மிகவும் அன்பனுக விருந்தானே, அந்தப் புத்த சந்நியாசி; பாழடைந்த தோட்டத்திலே தூக்குப் போட்டுக்கொள்ள வந்தானே, அந்த மனிதன்; சந்தனதாஸ னுக்குச் சம்பவித்த சங்கடங்கள்; இவை யாவும், சுத்தவீரா, தேவரீரை விருஷலனுக்கு உறவாக்கிவைக்க வேண்டுமென்னும் பேரவாவினல் (வெட்கத்துடன்) அடியேன் கையாண்ட தந்திரங்களேயாகும். ஆகை யால், இதோ அரசர்! தங்களைக் காணவந்திருக்கிருன்.

ராக்ஷ: (தனக்குள்) வேறு வழியில்லை.

(வெளிப்படையாய்) இதோ—சந்திக்கிறேன்.

(சந்திரகுப்தன் தகுந்த பரிவாரங்களுடன் பிரவேசிக்கிருன்.)

சந்திரகுப்தன்: (தனக்குள்) வெல்லுவதற்கு அரிதான பகைவனை யுத்தத்திலே எதிர்க்காமல்—ரத்தத்தைச் சிந்தாமல்—இருந்த இடத்தி லிருந்தே ஆரியர் ஜயித்துவிட்டதை நோக்குங்கால், எனக்குள் வெட்க மாகத்தான் இருக்கிறது. கடமையை நிறைவேற்ருது பலனைமட்டும் அடைந்துவிட்டதால் என்னுடைய அம்புகள் நாணிக்கோணி வருத்த முற்று அம்பருத் தூணியிலேயே அடைபட்டுக் கிடக்கின்றன.

ஆயின், இதனுல் ஒன்று தெரிகிறது. என்னைப் போன்று உறங்கி விழுவோனுயினும் எவனுடைய ராஜாங்க காரியங்களைப்பற்றிச் செய் திறன் படைத்த ஆன்ருேர்கள் கவனம்செலுத்தி வருவார்களோ, அன் னவன் தன் தனுசை வளைக்காமலே இருந்தபோதிலும் இவ்வுலகில் எதையும் ஜயிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவனே ஆவான். (சாணக்கிய னிடம் சென்று) ஆரிய! சந்திரகுப்தன் வந்தனம் செலுத்துகிறேன்.

சாணக்: சந்திரகுப்தா! நீ அருளப்பெற்ற ஆசிகளின் பலன் அனைத் தும் அடைந்து விட்டனை. இதோ பார்! உங்கள் வம்ச பரம்பரையாய் வந்த மந்திரி முதல்வர்! அவரை வணங்கு!

ராக்ஷ: (தனக்குள்) உறவு பிணைத்து விட்டான்.

சந்திர: (ராக்ஷஸனை நெருங்கி) ஆரிய! அடியேன் சந்திரகுப்தன் சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பிக்கிறேன்.

ராக்ஷ: (தனக்குள்) ஆ! சந்திரகுப்தன்! என்ருயினும் பெரிய பத விக்கு வருவானென்று, இவன் சிறுவனுயிருக்கும்போதே நான் நினைத்த துண்டு. அவ்வண்ணமே ஆனது. நாளடைவில் ஒரு மத வேழம் தன் இனத்துக்கு எல்லாம் தலைவனுவதுபோல இவனும் அரியாசனத்தில் ஆரோகணித்து விட்டான்.

(வெளிப்படையாக) அரசே! வெற்றி பெறுவாய்!

சந்திர: ஆரிய! உலகத்திலுள்ள எதிலேதான் அடியேன் வெற்றி பெறவில்லை? அரசாங்கத்திற்குரிய ஆறுகுணங்களைப்பற்றித் தேவரீரும், எனது பரம ஆசாரியனும் கவனம் செலுத்தி வருகையில் அடியேனுக் குக் குறைவும் உண்டோ?

ராக்ஷ: (தனக்குள்) கௌடில்ய சிஷ்யன் அல்லவா? தொண்டனைப்

போல் மெதுவாக ஒட்டிக்கொள்கிறான்....இல்லை....சந்திரகுப்தனுக்கு இது இயற்கையாக அமைந்துள்ள வினய குணமே. என்னுடைய மாற்சரியந்தான் விபரீதமாகத் தோற்றுவிக்கிறது. எல்லா வகையிலும் சாணக்கியன் புகழ் பெறுவதற்கு உரியவனே.

ஏனெனில், வெற்றி வேட்கை மிகுந்த பார்த்திபன் ஒருவனைப் பற்றிய மந்திரி அறிவிலியாய் இருப்பினும் அந்தஸ்தில் உயர்ந்து புகழ் மாலை சூடுவது திண்ணம். அரசன் ஒன்றுக்குமே உதவாதவனாயிருந்து, அமைச்சன் என்னதான் ராஜதந்திர நிபுணனாயிருப்பினும், ஆற்றங்கரையின் விருக்ஷத்தைப்போல மன்னன் அழிந்து மந்திரியும் வீழ்வது நிச்சயம்.

*சாணக்:* அமைச்சரே! சந்தனதாஸன் ஜீவனுடன் இருக்கவேண்டுமென்பது தங்கள் உள்ளமா?

*ராக்ஷ:* விஷ்ணுகுப்த! சந்தேகம் என்ன இதில்?

*சாணக்:* அமைச்ச! ஓர் ஐயமும் இல்லை. மந்திரிகள் பெறவேண்டிய வீர வாளைத் தேவரீர் ஏற்றுக்கொள்ளாமல் சந்திரகுப்தனுக்கு அனுக்ரஹம் செய்வதற்கில்லையே என்பதுதான் சந்தேகம். ஆதலின் சந்தனதாஸன் உயிரோடு இருக்க வேண்டுமானால் இந்த வீர வாளைத் தாங்கள் ஸ்வீகரிக்க வேண்டும்.

*ராக்ஷ:* விஷ்ணுகுப்த! இந்த ஆயுதத்தை ஏந்துவதற்கு நாம் தகுதியற்றவர். அதிலும், உன் கரத்திலே பூஷணமாய் விளங்கிய இதனைத் தரிப்பதற்கு எள்ளளவும் நமக்கு அருகதை கிடையாது.

*சாணக்:* அமைச்ச! தகுந்தவர் தாங்களா, நானா என்பதெல்லாம் இப்போது எதற்கு? இப்படிப் பாருங்கள்.

வன்மை மிகுந்த எதிரிகளின் இறுமாப்பை இடித்து வீழ்த்தும் மேதாவியான தங்கள் ஆண்மையின் மகத்துவத்தால், இந்த யானைகளெல்லாம் ஊண் இழந்தன. உறக்கம் விட்டன; நீராடுதலை நீக்கின. சதாகாலமும் விரிப்பும் அம்பாரியும் தாங்கி நிற்பதால் முதுகெலும்பு எங்கும் வீங்கிப்போய், எப்போதும் ஜேணமும் கடிவாளமும் தரித்து நிற்கும் இப்புரவிகளோடு தாமும் கிளம்புவதற்குத் தயாராய்க் காத்திருக்கின்றன. இவற்றையெல்லாம் சற்றே உற்றுநோக்கித் தங்கள் தோள்வலிக்கு நாங்கள் எவ்வாறு அஞ்சியிருந்தோமென்பதை ஒருவாறு ஊகித்து உணருங்கள்.

அதிகம் ஏன்? மந்திரிக்குரிய மரியாதை வாளைத் தாங்கள் ஏற்பதில்லையாயின் சந்தனதாஸன் ஆவியும் இருப்பதில்லை.

*ராக்ஷ:* (தனக்குள்) என்ன செய்ய? எதிரிகளுக்கு அடிமையானேன்! கர்ப்பத்திலிருந்தே அதிகக் கவனத்துடன் காக்கப்பட்டு என் இதயத்தை ஊடுருவி நிற்கும் நந்தரின் நட்பின் மகிமையை—தண்ணீர்விட்டும் பட்டுப்போகும் மரங்களைப்போல்—நானே வளர்த்து நானே வீழ்த்தவும் வேண்டி யிருக்கிறதே.

உயிர்த் தோழனுடைய மரணத்தைத் தவிர்ப்பதற்காக எதிரிகளுக்கு இணங்கி இந்த ஆயுதத்தை ஏற்றுத் தொண்டாற்றும்படி நேர்ந்துவிட்டது. கருதிப் பயனில்லை. காரியங்களின் போக்கு நாளடை

வில் விதியின்கட்டுப்பாட்டையுங்கூட மீறிவிடுகிறது. (வெளிப்படையாக) விஷ்ணுகுப்தா! எந்தத் தொழிலேயும் ஏற்று நடத்த ஏதுவாயிருக்கும் நட்புக்கு வந்தனம். இதோ சிரம் தாழ்த்தினேன்.

சாணக்: (குதூகலத்துடன்) அரச, அரச, இதோ, நீ அமைச்ச ராக்ஷஸன் அருளுக்குப் பாத்திரமாகிவிட்டாய். கடவுள் கிருபையால் மங்களம் எய்தினுய்.

சந்திர: யாவும் ஆரியருடைய பேரருள்.

சேவகன்: (பிரவேசித்து) ஆரியருக்கு ஜயமோங்குக! பத்ரபடனும் பாகுராயணனும் மலயகேதுவைச் சிறைப்படுத்தி கைகளேக்கட்டி ராஜத்துவாரத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறுர்கள். கட்டளே இடவேண்டும்.

சாணக்: அப்படியா! அதோ! அமைச்ச ராக்ஷஸன்! அவரிடம் சொல். அவருக்குத் தெரியும், என்ன செய்ய வேண்டுமென்பது.

ராக்ஷ (தனக்குள்) சரிதான். என்னே அடிமைப்படுத்தியதல்லாமல் பிரார்த்திக்கவும் செய்கிறுன் கௌடில்யன். உம்....எண்ணிப் பயனில்லே. (வெளிப்படையாக) அரசே! சந்திரகுப்த! மலயகேதுவால் நாம் சிலகாலம் ஆதரிக்கப்பெற்ருேம். இதனே நீயும் அறிவாய். ஆகையால் அவனுடைய உயிர் காக்கப்பட வேண்டியதே!

(சந்திரகுப்தன் சாணக்கியனேப் பார்க்கிறுன்.)

சாணக்: அமைச்சருடைய முதல் விருப்பம் நிறைவேறட்டும். (சேவகனேப் பார்த்து)

நீ போய்ப் பத்ரபடன் முதலியோரிடம் தெரிவி. "அமைச்ச ராக்ஷஸர் விரும்பிய வண்ணம் அரசர், மலயகேதுவுக்கு அவனுடைய தந்தையின் ராஜ்யத்தையே அளிக்கிறுர்" என்று சொல்.

மேலும் மலயகேதுவை அழைத்துப்போய் அவனே ராஜ்யத்தில் பிரதிஷ்டை செய்த பின்பே அவர்கள் திரும்பி வரவேண்டுமென்றும் கட்டளே யெனக் கூறு.

சேவகன்: அப்படியே! (போகிறுன்)

சாணக்: அப்பா! இரு, நீ அப்படியே துர்க்கபாலனிடம் போ. அமைச்ச ராக்ஷஸனேப் அடையப்பெற்றதால் அரசர்பிரான் அக மகிழ்ந்து சந்தனதாஸனே விடுதலே செய்து, அவரை உலகத்திலுள்ள எல்லா வர்த்தக சங்கங்களுக்கும் தலேவராக நியமிக்கும்படி உத்தர விடப்பட்டிருப்பதாகச் சொல்லிவிடு....ஆனுல்....அமைச்சர் அதிகாரத்திற்கு வந்தாயிற்றே! இன்னும் ஏன் எனக்கு இந்தத் தொல்லே?

எங்கும் விடுதலே! எதற்கும் விடுதலே! குதிரைகளேக் கட்டவிழ்த்து விடுங்கள்; யானேகளேமட்டும் விடவேண்டாம் (ஊரை அழித்துவிடும்) இதே சமயம் நான் என் சிகையைக் கட்டுகிறேன். என் சபதம் நிறைவேறிவிட்டது,

சேவகன்: உத்தரவு. (போகிறுன்)

25·6·70



சாணக்: அரசே, சந்திரகுப்த! அமைச்ச ராக்ஷஸ! கூறுங்கள். இன்னும் என்னால் ஆகவேண்டிய பணி என்ன உளது?

சந்திர: யாது இருக்கிறது—நந்தரை வேர் அறுத்து, நமக்கு அரசளித்து, அமைச்ச ராக்ஷஸனின் அருளையும் பிணைத்துவிட்ட பிறகு?

ராக்ஷ: இருப்பினும், இது வாழ்த்துரையாக இருக்கட்டும்.

"கற்பாரம்ப காலத்தில் பிரளயத்தில் அமிழ்ந்துவிட்ட இந்தப் பூமி தேவி, 'காத்தல்' என்னும் விரதம்பூண்டு அதற்கேற்றவாறு வராக உருவம் தாங்கிவந்த பரந்தாமனின் கோரப்பற்களை ஆசிரயித்தாள்.

அதே பூமி இப்போது மிலேச்சர் துன்பங்களுக்கு ஆளாகிறாள். அதனால், 'காத்தல்' என்னும் கடமைபூண்டு அரச உருவந்தாங்கிக் காட்சியளிக்கும் இந்தச் சந்திரகுப்தனின் இரண்டு திண்டோள்களையும் ஆசிரயித்திருக்கிறாள்.

இந்த மன்னன், ஐசுவரியம் பெருகும் சுற்றத்தாரும் அடிமைகளும் புடைசூழப் பூமண்டலத்தை நெடுங்காலம் காத்து வருவானாக!

சுபம்.

45963
015:248
31J8

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1970
MADURAI.

## இந்த நாடக நூல்......

சம்ஸ்கிருத நாடக நூல்களிலே பெரும் சிறப்பு வாய்ந்தது என்று சம்ஸ்கிருத நாடக நூல் வல்லுநர் சொல்லுகிருர்கள். முத்ரா ராக்ஷஸம் என்று சம்ஸ்கிருத மொழியில் வழங்கப் பெறும் இந்த நாடக நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருப்பதே தமிழ் மக்கள் பெரிதும் இதை விரும்பிப் படிக்கிருர்களென்பது தெற்றென விளங்கும்.

படித்துப் பாருங்கள். ருசித்துப் பாருங்கள்.

சக்தி

இது சக்தி வெளியீடு